69

ஸுபாநு ஹூ
கார்த்திகை - மார்கழிமீ

ஸம்புடம் - 2
ஸஞ்சிகை - 12

ஸ்ரீ:

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

[ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகை]

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
13 JAN 1944
MADRAS

ஸம்பாதகர்: வங்கீபுரம் ஸ்ரீ. வாஸுதேவாசார்யர்

: ப்ரசுரிக்குமிடம் :

ராமஸ்வாமி தெரு, த்யாகராயநகர்,

சென்னை

வர்...
ரூபா 3—0—0

December, 1943
Vol. 2, No. 12

ஸ்ரீ:

விஷய ஸூசிகை

		பக்கம்
1.	திருப்பாவை	420
2.	ஸ்ரீ அஹோபில க்ஷேத்ரம்	425
3.	அடைக்கலப்பத்து	431
4.	என் புருகும் அன்பு	433
5.	ஸ்ரீ ந்ருஸிம்ஹனிடம் ஐயங்காரின் ஈடுபாடு	436
6.	ஸாம்ய புத்தி	438
7.	செய்திகள்	444
8.	ஸம்பாதகரின் குறிப்புக்கள்	450

ஸ்ரீ:

வ்யாஸம் எழுதுபவர்களுக்கு விஜ்ஞாபநம்

1. எழுதி யனுப்பப்படும் வ்யாஸங்கள்—மூன்று அல்லது நாலு பக்கங்களுக்கு அதிகப்படாமல் சுருக்கமாகவும் தெளிவாகவும் இருத்தல் வேண்டும். காகிதத்தின் ஒரே பக்கத்தில் எழுதி யனுப்புதல் நலமாகும்.

2. ப்ரசுரப்படுத்தப்படாமல் இருக்கும் வ்யாஸங்களெல்லாம், தபால் சார்ஜுக்கு வேண்டிய ஸ்டாம்பு அனுப்பப்படும் பக்ஷத்தில், அவை உடனே திருப்பி அனுப்பப்படும்.

3. அநேக வித்வான்கள் மஹத்தான க்ருபையுடன் வ்யாஸங்களை அனுப்பி, அவைகளை உடனே பத்ரிகையில் ப்ரசுரம் செய்யவேண்டுமென்று நியமிக்கிறார்கள். பத்ரிகையில் இடம் ஸங்குசிதமாக இருக்கிறபடியால், அவர்களுடைய நியமநத்தை அவர்கள் இஷ்டப்ரகாரம் நிறைவேற்ற ஸாத்யப்படாமல் இருக்கிறது. அவகாஶம் ப்ராப்தமாகும்பொழுது அவைகள் யதார்ஹம் ப்ரசுரம் செய்யப்படும். அப்படிச் செய்வதால் ஸம்பவிக்கும் கால விளம்பத்தை அந்த வித்வான்கள் க்ருபையுடன் க்ஷமிக்க வேண்டுமென்று ப்ரார்த்திக்கிறோம்.

ஸம்பாதகர்.

ஸ்ரீ:

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

[ஸ்ரீ அழகியசிங்கர் நியமநத்தால் மாதந்தோறும் ப்ரசுரமாகும்
ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகை]

[சித்ரபாநு — ஸுபாநு]

ஸம்புடம் — 2

ஸம்பாதகர்: வங்கீபுரம் ஸ்ரீ. வாஸுதேவாசார்யர்

: ப்ரசுரிக்குமிடம் :

நெ. 5, ராமஸ்வாமி தெரு, த்யாகராய நகர், சென்னை.

லிபர்ட்டி அச்சகம், சென்னை.

1943

விஷய ஸூசிகை

[அகராதி]

ஸம்புடம் 2.

விஷயங்கள்	பக்கம்
அபிநந்தந பத்ரிகா	59
அரியலூர்	95
ஆசாரம்	74
இஞ்சிமேடு ஸ்ரீ க்ருஷ்ணமாசார்யர் விஷயமான ச்லோகங்கள்	89
உபாகர்ம விஷயம்	302
என்புருகும் அன்பு	433
ஒரு பெரும் புயல்	351
கலங்காக் கருணை	240, 254
காரயித்ருத்வ ஸித்தாந்த விமர்சநம்	26, 61, 97
குறம்	257
செய்திகள் :	
ஆர்யா தசகம்	108
இவ்வர்ஷத்து உபாகர்மாவைக் குறித்து ஸ்ரீ அழகியசிங்கர் நியமநம்	337
ஒரகடம் மங்களாசாஸநம்	29
கல்யாணபிவர்த்தநீ ஸபா, மதுராந்தகம்	338, 374
சிலாவட்டம் க்ராமம்	103
சைதாப்பேட்டை பெருமாள் ஸந்நிதியில் லக்ஷார்ச்சனை....	373
திருப்பதியில் ஸ்ரீ தேசிகன் உத்ஸவம்	444
திருவல்லிக்கேணி மடத்தில் ஸ்ரீ அழகியசிங்கர் திருநக்ஷத்ரக் கொண்டாட்டம்	69
திருவெவ்வுளூர் மங்களாசாஸநம்	30, 31, 68, 274
நெடுங்தெருவில் உத்ஸவம்	410
மதுராந்தகத்தில் திருவுருவப் படங்களின் திறப்பு விழா	308
மாதுங்காவில் ஸ்ரீநிகமாந்த மஹாதேசிகன் மஹோத்ஸவம்	444
பண்ருட்டி ஸ்ரீ மஹாராதனம்	447
வடுவூர், ஸ்ரீ ஆதிவண் சடகோப ஸ்வாமி மஹோத்ஸவம்....	410
வர்ணாச்ரம ஸங்கம், அயோத்யை	276
40-ம் பட்டம் ஸ்ரீ அழகியசிங்கரின் வார்ஷிக மஹோத்ஸவம்	305
42-ம் பட்டம் ஸ்ரீ அழகியசிங்கரின் ஸங்கல்ப மஹோத்ஸவம்	305
ஸ்வாகதப் பத்ரிகை	411, 4[illegible]6
ஸ்ரீ கல்யாணபிவர்த்தநீ ஸபை, ஸ்ரீ அஹோபில மடம் ஸம்ஸ்க்ருத காலேஜ், மதுராந்தகம்	447
ஸ்ரீ அழகியசிங்கரின் சென்னை விஜயம்	405
ஸ்ரீ அழகியசிங்கரின் மங்களாசாஸந க்ரமம்	67
ஸ்ரீ அழகியசிங்கரின் யாத்ரை....	29
ஸ்ரீ அழகியசிங்கர் வாழ்த்துப் பத்ரம்	307
ஸ்ரீ அஹோபில மடம் 41-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கரின் இரண்டாவது வருஷத் திருவாராதந கைங்கர்யம்	445

விஷயங்கள்	பக்கம்
ஸ்ரீ களத்தூர் அழகியசிங்கர் திருநக்ஷத்ரம்	243
ஸ்ரீ தேசிக பக்த ஸபை, மதுரை	163
ஸ்ரீ தேவப் பெருமாள் மங்களாஶாஸநம்	106
ஸ்ரீ ந்ருஸிம்ஹாவதாரச் செய்யுள்	314
ஸ்ரீ பார்த்தஸாரதி மங்களாஶாஸநம்	373
ஸ்ரீ பாஷ்ய பரீக்ஷை	29, 162
ஸ்ரீ பெரும்பூதூர் மங்களாஶாஸநம்	30
ஸ்ரீ மதுராந்தகத்தில் வர்ஷாராதநம்	29
ஸ்ரீ மாலோல வித்வத் ஸபை	106
ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதய மஹோத்ஸவமும் நாடகமும்	103
ஸ்ரீ ஜடா ப்ரம்ஹசாரி, ஆராவமுதாசார்யர்	162
ஸ்ரீரங்கத்தில் ஸ்ரீ அழகியசிங்கர் திருநக்ஷத்ரம்	105
திரு நரசிங்கப் பெருமான்	65
திருப்பாவை	13, 48, 78, 210, 316, 420
திவ்ய ப்ரபந்தத்தில் திருமடல்	324, 359
நமது தர்ஶநத்தின் சிறப்பு	90
நாராயணனே பரதத்வம்	229
பஞ்சாங்க ஸங்க்ரஹம்	12, 47, 82, 163, 175, 244, 253, 304, 323, 402, 447
பதயோஜநா ரஸங்கள்	8, 43
பாதூரில் ஸ்ரீ அழகியசிங்கர் திருநக்ஷத்ரம்	55
"பிரிந்தவர் கூடினால் .. ...."	83
மதிப்புரை	64, 273, 375
மதியின் மஹிமை	2, 38
மாலோலன் பிள்ளைத்தமிழ்	91, 236
மைஸூரும் மாதவனும்	396
வனஜாவின் வாழ்வு	176
வீர ரமணி	296
வேதாந்த தேசிகன் உவமை	368
ஸ்ரீ அழகியசிங்கர் துதி	347
ஸ்ரீ அழகியசிங்கர் பஞ்சரத்நம்	56
ஸ்ரீ அஹோபில மடத்துக் கதைகள்	92, 182, 299
ஸ்ரீ அஹோபில மடத்து விசேஷ வ்ருத்தாந்தங்கள்	36
ஸ்ரீ அஹோபிலம் விஷயமான பாசுரங்கள்	233
ஸ்ரீ அஹோபில க்ஷேத்ரம் [ஒரு நாடகம்]	425
ஸ்ரீ ஆதிவண் சடகோப யதீந்த்ரர் துதி	270
ஸ்ரீ சிங்கப்பெருமான் துதி	235
ஸ்ரீ உப. திருக்கோட்டியூர் ஸ்வாமி	114, 187, 275
ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியையின் முதல் ஆண்டு நிறைவு வாழ்த்து....	90
ஸ்ரீ ந்ருஸிம்ஹனிடம் ஐயங்காரின் ஈடுபாடு	436
ஸ்ரீ பிள்ளைபாக்கம் அழகியசிங்கர் வைபவச் சுருக்கம்	217, 258, 291, 330, 344, 390

விஷயங்கள்	பக்கம்
ஸ்ரீ ராம பட்டாபிஷேகம்	271
ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் அடைக்கலப் பத்து	250
ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹன் அடைக்கலப் பத்துப்ரபந்தம்	334, 348, 403, 431
ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ த்யாக ஸோபாநம்	93
ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ ஸ்துதி	53, 88
ஸ்ரீ வைஷ்ணவத் திருநாமங்கள்	355
ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயம்	170, 223, 284, 363, 384
ஸ்ரீ ஜயந்தி உத்ஸவம்	18
ஸத் ஸம்ப்ரதாய தீபம்	263
ஸாம்ய புத்தி	438
ஸம்பாதகரின் குறிப்புக்கள் :	
இவ்வர்ஷத்து உபாகர்மம்	281
ஓர் சோசநீயமான விஷயம்	382
க்ரம முக்தி - ஸாக்ஷாந் முக்தி	416
காகிதப் பஞ்சம்	33
‘ச்யவந’ சப்தார்த்த விசாரம்	34, 71, 109
சந்தாதாரர்களுக்கு ஒரு விஜ்ஞாபநம்	208, 418
துர்ப்பிக்ஷம்	340
நமது ஸநாதந தர்மங்களுக்கு அபாயம்	279
பஞ்சாங்க ஸங்க்ரஹம்	418
“விசிஷ்டாத்வைத வேதாந்தம்”	313
“விசேஷார்த்த ரத்ந நிதி”	246
ஜகத்துக்கு நேர்ந்துள்ள துர்த்தசை	32
ஸ்வாமி விவேகாநந்தரின் 50-வது வர்ஷத்திய கொண்டாட்டம்	377
ஸகோத்ர விவாஹ பில் வாபீஸ்	452
ஸ்ரீ அழகியசிங்கரின் உத்தாநமும் யாத்ரையும்	339
ஸ்ரீ அழகியசிங்கரின் சாதுர்மாஸ்ய ஸங்கல்பம்	309
ஸ்ரீ அழகியசிங்கரின் சென்னை விஜயம்	412
ஸ்ரீ அழகியசிங்கருடைய யாத்ரோத்ஸவம்	450
ஸ்ரீ அஹோபில மடம் ஸம்ஸ்க்ருத பாடசாலா, மதுராந்தகம்	206
ஸ்ரீ காஞ்சியில் வேத பாடசாலை	282
ஸ்ரீ சதுர்ப்புஜ தாஸ் கோகுல்தாஸின் நன்கொடை	376
ஸ்ரீ திருப்புட்குழி ஸ்வாமியின் இரண்டாவது ஷஷ்ட்யப்த பூர்த்தி மஹோத்ஸவம்	451
ஸ்ரீ தேப்பெருமாள் மங்களாசாஸநம்	70
ஸ்ரீ மடத்துப் பாடசாலையில் ஓர் உத்ஸவம்	311
ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனுடைய ஸஞ்சாரம்....	245, 278
ஸ்ரீ ஸந்நிதியில் ஸ்ரீ பாஷ்ய காலக்ஷேபாதிகள்	282
ஸ்ரீ. உப. கோதண்டராமய்யங்கார் நிர்யாணம்	207
ஸ்ரீ. உப. திருக்கோட்டியூர் ஸ்வாமியின் நிர்யாணம்	164
ஸ்ரீமத் ராமாயணத்தில் ஒரு ஸ்லோகத்தின் விசேஷார்த்தம்	110

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

ஸம்புடம் 2	ஸாதாரண வருஷ கார்த்திகை - மார்கழி மீ	ஸஞ்சிகை 12

"அஹோபிலே காருடசைலமத்யே
க்ருபாவசாத் கல்பித ஸந்நிதாநம் |
லக்ஷ்ம்யா ஸமாலிங்கித வாமபாகம்
லக்ஷ்மீந்ருஸிம்ஹம் சரணம் ப்ரபத்யே ||" 2/10/20

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

என்னும் ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகையைப்பற்றி

ஸ்ரீ அழகியசிங்கரின் ஆசாஸந அநுசாஸநங்கள்

ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா ஸ்ரீந்ருஸிம்ஹகாருண்யோஜ்ஜ்ரும்பிதா |
ஸ்ரீ ந்ருஸிம்ஹகடாக்ஷேண ஜீயாதாசந்த்ரதாரகம் ||
ந்ருஸிம்ஹபக்தக்ருஹாணாம் கேஹே கேஹே ஸதா வஸேத் |
ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியாஹ்யேஷா ந்ருஸிம்ஹப்ரியயா ஸஹ ||

[ஸ்ரீ ந்ருஸிம்ஹனுடைய கருணையால் உண்டாகி இருக்கும் இந்த "ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா" என்னும் பத்ரிகை, அந்த ந்ருஸிம்ஹனுடைய கடாக்ஷத்தாலும் ஸங்கல்பத்தாலும் சந்த்ரன் நக்ஷத்ரங்க ளுள்ளவரையில் அவை போலவே சிறப்புடன் வாழக்கடவது.

நம் ந்ருஸிம்ஹ பக்தகோடிகளின் க்ருஹங்கள்தோறும் இந்த "ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா" என்னும் பத்ரிகை, ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியையாகிற மஹா லக்ஷ்மியுடன் நித்யமாய் வஸிக்கக்கடவது.]

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

திருப்பாவை

[ஸ்ரீ. உப. தி. ஈ. சடகோபாசார்ய ஸ்வாமி, அட்வோகேட், திருப்பாப்புலியூர்]

(ஸம்புடம் 2 : ஸஞ்சிகை 9, பக்கம் 323-ன் தொடர்ச்சி)

இவ்வாறு ப்ரதம பஞ்சகத்தில் யதாஸம்பவம் அர்த்த பஞ்சகத்தின் ஸ்வரூபத்தைக் காந்தாஸம்மிதோபதேஶ க்ரமத்தில் அதிஸுந்தரமாய் உபந்யஸித்து, அதனால் ஏற்கெனவே ப்ரதிபுத்தர்களாக நீராடப் புறப்பட்ட தோழிமார்களுக்குத் தாம் மநோரதித்தபடி வ்ரதத்தின் ஸ்வரூபம் அங்கபலம் முதலியவைகளை யறிவித்து அவர்களுக்கு ஜ்ஞாந வைஶத்யம் உண்டாக்கி, அவர்களைத் தம்முடன் ஸமாந வ்யவஸாய முடையவர்களாகச்செய்து தம் கோஷ்டியில் சேர்த்துக்கொண்டு, 'உஷஸ்யுத்தாய தா கோப்ய: க்ருஷ்ணாநுவ்ரதவாஸநா:' என்கிறபடி எல்லோரும் ஒருங்கு கூடி ஸ்நாநத்துக்குச் செல்லும்பொருட்டு இன்னும் துயிலெழாத மந்த ப்ரக்ருதிகளை ப்ரபோதநம் பண்ணுவதற்காகப் பசி யறியாமல் உறங்கும் குழந்தையை வத்ஸலையான மாதா எழுப்பிப் பால் கொடுப்பது போல் அதிமாத்ராதரத்துடன் ப்ரவ்ருத்தித்தவராய்க்கொண்டு ஸமீபத்திலுள்ள க்ருஹத்தி லுறங்கும் ஒரு ஸகியை உணர்த்துகிறார்.

6. புள்ளுஞ் சிலம்பினகாண் புள்ளரையன் கோயில்
வெள்ளை விளிசங்கின் பேரரவங் கேட்டிலையோ
பிள்ளா யெழுந்திராய் பேய்முலை நஞ்சுண்டு
கள்ளச் சகடங் கலக்கழியக் காலோச்சி
வெள்ளத் தரவிற் றுயிலமர்ந்த வித்தினை
உள்ளத் துக்கொண்டு முனிவர்களும் யோகிகளும்
மெள்ள வெழுந் தரியென்ற பேரரவம்
உள்ளம் புகுந்து குளிர்ந்தேலோ ரெம்பாவாய்.

புள்ளும்-பக்ஷிகளும், சிலம்பின காண்-சப்தம் செய்கின்றன பார். இங்கு, 'காண்' என்பது 'அறி' என்கிற ஸாமாந்யார்த்தத்தில் ப்ரயோகிக்கப்பட்டிருக்கிறது. 'காதினால் கேட்டறியத் தகும்' என்பது பொருள். 'புள்ளும்' என்பதில் ('பக்ஷி' ஶப்தார்த்தத்தைக் குறிக்கும்) 'உம்' என்னும் ப்ரத்யயத்தால், 'வ்ரதநியம மில்லாத திர்யக்குகள்கூட விழித்திருக்கும்போது, உசித காலத்தில் வ்ரதாங்கமான மங்கள ஸ்நாநம் செய்ய வேண்டிய நியமமுடைய நீ உறங்குவது அத்யந்தம் அநுபபந்நம்' என்பது ஸூசிக்கப்படுகிறது. இங்கு 'சிலம்பின' என்பதால், பக்ஷிகள் உஷ: காலத்தில் எழுந்தவுடன் வெளிப் புறப்படாமல் தங்கள் கூடுகளிலேயே இருந்துகொண்டு சிறு குஞ்சுகளுக்கு உணவளிப்பது முதலிய

வ்யாபாரங்களைச் செய்யும்போது ஏற்படும் ம்ருதுவான கலகல சப்தம் நிர்த்தேசிக்கப்படுகிறது.

புள்ளரையன் - பக்ஷிராஜனது, கோயில் - ஸ்வாமியான எம்பெருமானுடைய ஆலயத்தில்; [அதாவது: கருடவாஹனனாகிய பகவானுடைய ஸந்நிதியில்.] வெள்ளை விளி சங்கின் - ஆஹ்வாந தவள சங்கத்தின்; [அதாவது: தநுர்மாஸாராதநத்துக்காகக் கைங்கர்யபரர்களைக் கூப்பிடுவதற்காக முழங்கப்படும் தவள ஶங்கத்தின்;] பேர் அரவம் - தீர்க்க கம்பீர நாதத்தை; கேட்டிலையோ - நீ கேட்கவில்லையோ; [ஒருக்கால் பக்ஷிகள் மரங்களிலுள்ள கூட்டுக்குள் செய்யும் சிறிய சப்தம் காதில் விழாமற்போனாலும், கம்பீரமாகவும் நீண்டும் முழங்கும் சங்க த்வநி அவஶ்யம் காதில் விழுந்திருக்குமே என்பது கருத்து.] தவள ஶங்கம் என்பது சப்தத்தில் சிறந்ததென்பதை அநுஸரித்து 'வெள்ளை' யென்னும் விஶேஷணம் ப்ரயோகிக்கப்பட்டது. தவிரவும்: ஸத்வோந்மேஷத்துக்குக் காரணமான பரிசுத்தமான நாதம் என்பதும் வ்யஞ்ஜிதம்.

பிள்ளாய் எழுந்திராய்—குழந்தாய்! நீ சீக்ரம் விழித்துக்கொள். இந்த ஸம்போதநத்தினால் இவள் வயதில் சிறிய ஸௌகுமார ஸ்வபாவமுடைய குமாரிகை யென்பது தெரிகிறது.

பேய் முலை நஞ்சு உண்டு—ஆஸுர ஸ்வரூபத்தையுடைய பூதனையின் ஸ்தநத்திலிருந்த விஷத்தைப் புஜித்து; கள்ள சகடம் கலக்கு அழிய - வஞ்சனையாய் வந்த ஶகடாஸுரனுடைய பூட்டுகளெல்லாம் கட்டுக் குலையும்படி; கால் ஓச்சி - கால்களால் உதைத்து; வெள்ளத்து அரவில் - பாற்கடலிலுள்ள நாக பர்யங்கத்தில்; துயில் அமர்ந்த - கண் வளர்ந்தருள்கிற; வித்தினை - ஜகத்காரண பூதனான பரமாத்மாவை; உள்ளத்து கொண்டு மநஸ்ஸில் த்யானித்துக்கொண்டு; மெள்ள எழுந்து - மெதுவாய் ஶயநத்திலிருந்து எழுந்து; முனிவர்களும் யோகிகளும் - ஜ்ஞாநயோக நிஷ்டர்களும் கர்மயோக நிஷ்டர்களும்; [அல்லது: பரமாத்ம மநநஶீலர்களான அநவரதம் நாராயண ஸ்மரணம் செய்யும் ஸந்யாஸிகளும்; பஞ்சகால ப்ரவணர்களாக யோக ஸங்கல்பத்துடன் நித்ரை செய்யும் க்ருஹஸ்தர்களும் என்றும் கொள்ளலாம்]; அரி என்ற - 'ஸ்ரீ ஹரிஹரி:' என்கிற; பேர் அரவம் - மஹா ஶப்தமானது; உள்ளம் புகுந்து - கேட்பவர்களுடைய அந்த:கரணத்தில் ப்ரவேஶித்து; குளிர்ந்து - குளிரச் செய்தது. பக்ஷிகளின் சப்தம் அல்பமாகையாலும் தூரத்தில் உண்டானதாலும் அதை முதலிலும், அதைவிட ஸமீபத்தி லுண்டாகும் கோயில் சங்க த்வநியை அடுத்தபடியும் ப்ரஸ்தாவித்து, அதைக் காட்டிலும் ஸமீபத்தில் பஹுமுகமாய் ஏற்படும் ஹரி ஶப்தத்தை அதற்குப் பிறகும் ப்ரஸ்தாவித்தது யுக்தமான க்ரமமாகும். இதில் அடைவே 'ஶ்ருதிஸ்ம்ருதிஸதாசாரா:' என்கிற மூவகை தர்மாதாரங்களும் த்வநியாக ஸூசிப்பிக்கப்பட்டதாகக் கொள்ளத் தகும். கேவலம் ஶப்த மாத்ரம் காதில் விழுவதால் பக்ஷிகளின் சப்தம் ஶ்ருதி கோடியிலும், கோயில் சங்க நாதத்தால் பகவானுக்குத்

தநுர்மாஸாராதந காலமென்று அநுமாநிக்க இடமுண்டாவதால் அது ஸ்ம்ருதி ஸ்தாநத்திலும், முநிவர்கள் யோகிகள் இவர்கள் பகவந் நாம கீர்த்தநம் செய்வது ஸதாசாரமாகவும் கொள்வது அநுசிதமாகாது. முன் பாசுரத்தில் 'மாயன்' என்று உபக்ரமித்ததைத் தொடர்ந்தே பகவானுடைய அத்யத்புத திவ்ய சேஷ்டிதங்களில் சில இங்கு உதாஹரிக்கப்பட்டிருக்கின்றன. விஷத்தை உண்ட குழந்தை பிழைத்திருப்பதே ஆஶ்சர்யமாயிருக்க, அது விளையாட்டாகக் காலை யசைத்து ஒரு மஹா சகடத்தைக் கலக்கழிப்பதும், பிறகு நடு ஸமுத்ரத்தில் விஷதரத்தின்மேல் படுத்து உறங்குவதும், தன் வயிற்றில் ஸர்வ ஜகத்தையும் அடக்கி வைத்திருப்பதும் அத்யாஶ்சர்யமானவை யென்று வியப்புறுகிறார். இவ்வித ஆஶ்சர்யகரமான திருவிளையாடல்களை அநுஸரித்து நாம் ஆநந்த பரவசர்களாய்ப் பகவந்நாம ஸங்கீர்த்தநம் பண்ணி க்ருதார்த்தர்களாகவேண்டிய இந்த ப்ராம்ஹ முஹூர்த்தத்தில், பெரியோர்களுடைய ஆசாரத்தை நேரில் கண்டும் அதை அநுவர்த்திக்காமல் உறங்கிக் கிடப்பது யுக்தமல்ல வென்று தாத்பர்யம். 'காலோச்சி' என்றதால், புத்தி பூர்வமில்லாமல் போல் குழந்தை விளையாட்டாகத் திருவடிகளைத் தூக்கி அசைத்ததே ஶகடாஸுர வதத்துக்கு ஹேதுவாயிற்றென்று கருத்து. 'வித்தினை உள்ளத்துக் கொண்டு மெள்ள எழுந்து' என்றதால், ஒரு க்ஷேத்ரத்தில் வித்தை நட்டால் அதற்குக் குலைவு வராமல் காக்கவேண்டியது எப்படி அவஶ்யமோ, அப்படியே பரமைகாந்திகள் இரவில் யோகம் என்கிற நித்ராவஸ்தையை அடைவதற்குமுன் க்ஷீரஸாகர ஶாயியான பகவானைத் தமது ஹ்ருதய கமலத்தில் ஆவாஹநம் செய்து அவனை த்யாநித்துக்கொண்டே நித்ரைசெய்து, பிறகு உஷ: காலத்தில் துயிலெழும்போது தமது உள்ளத்திற் பள்ளிகொண்டிருக்கும் பகவானுக்கு அசைவு வாராதபடி மெள்ள வெழுந்திருக்கும் ஸதாசாரம் பேசப்பட்டது. 'அரி யென்ற பேரரவம்' என்றதால், ஹ்ருதய கமலத்தில் ஶயநித்திருக்கும் பகவானுக்குத் திருப்பள்ளி யெழுச்சியாக அரி யென்று அவனது திருநாம ஸங்கீர்த்தநம் செய்யப்படுகிறதென்று கருத்து. 'பேரரவம்' என்றதால், த்வநியின் காம்பீர்யம் 'ததஹ்ரு வஹதாம் தேஷாம்ஶ்ருளக்ஷ விவாதம் ஶ்ருதிம்' என்று குறிக்கப்பட்ட ஶ்வேத த்வீப வாஸிகளின் ஸ்வரத்தை ஒத்திருக்கிறதென்று ஸூசித்தது மல்லாமல், 'ஹரிர்ஹரதி பாபாநி' என்ற அர்த்த சக்தியைக் கொண்டு ஸர்வ பாப ஹரத்வமாகிற பெருமையும் விவக்ஷிதமாகும். 'உள்ளம் புகுந்து குளிர்ந்து' என்றதால்,

> 'ஶ்ருத்வா ஶ்ரவணாநு ஶ்ரவநஸ்ய ஹர ஶ்ருண்வதாம் தே
> நிவிஶ்ய கர்ணவிவரேஹர தாபஜாதம்'

என்றபடி, ஹரிஶப்தம் காது வழியாய் உள்ளே புகுந்தவுடன் ஆத்யாத்மிக தாபத்தைப் போக்கடித்து ஆத்மாவுக்கு ஓர் அபூர்வமான குளிர்ச்சியை உண்டாக்குகிறது என்று தாத்பர்யம். குளிர்ந்து - குளிர்ச்சியை

உண்டாக்குகிறது; ஆகையால் பிள்ளாய் எழுந்திராய் என்று அந்வயம். வெளிக் குளிருக்கு அஞ்சிப் படுத்திருக்கையில் உட்குளிர் ஏற்பட்டுவிட்ட படியால் இனி உறங்கவொண்ணாது என்கிற சலோக்தியும் த்வநிக்கிறது.

ஏலோர் எம் பாவாய் — முன்போலவே.

இதைக் கேட்ட பெண்மணி துயிலெழுந்து கோஷ்டியில் சேர்ந்தவளவில், அவளையும் கூட்டிக்கொண்டு மற்றொரு க்ருஹத்துக்குச் சென்று அங்குள்ள தோழி ஒருத்தியை எழுப்புகிறாள்.

7. கீசுகீசென் றெங்கு மானைச்சாத்தன் கலந்து
பேசின பேச்சரவங் கேட்டிலையோ பேய்ப்பெண்ணே!
காசும் பிறப்பும் கலகலப்பக் கைபேர்த்து
வாச நறுங்குழ லாய்ச்சியர் மத்தினால்
ஓசைபடுத்த தயிரரவங் கேட்டிலையோ
நாயகப் பெண்பிள்ளாய்! நாராயணன் மூர்த்தி
கேசவனைப் பாடவும்நீ கேட்டே கிடத்தியோ
தேச முடையாய்! திறவேலோ ரெம்பாவாய்.

கீசுகீசென்று எங்கும் ஆனைச்சாத்தன் கலந்து பேசின பேச்சரவம் கேட்டிலையோ—வலியன் குருவிகள் கும்பல் கும்பலாகக் கூடி எல்லா விடங்களிலும் கீச்சுக் கீச்சென்று பல வகையாகக் கூவும் கூச்சல் உன் காதில் விழவில்லையா? முன்பு 'புள்ளும் சிலம்பின காண்' என்று பக்ஷிகள் எழுந்தவுடன் கூடுகளில் அல்பமாய் ஶப்தம் செய்வது சொல்லப் பட்டது. இப்போது கொஞ்ச நேரம் சென்று வலியன்கள் வீடுகளின் அருகே வந்து கும்பலாகக் கூவும் துமுலத்வநி நிர்த்தேஶிக்கப்படுகிறது. இதற்கும் எழுந்திராமல் உறங்கிக் கிடப்பதால் 'பேய்ப் பெண்ணே!' என்று இவள் ஸம்போதிக்கப்படுகிறாள்; ஸமயத்தில் எழுந்திராமல் உறங்கிக் கிடக்கும் பைத்தியக்காரி என்று கருத்து. வலியன்கள் புறக்கடை முதலிய விடங்களில் செய்யும் சப்தத்தைவிட இன்னும் ஸமீபத்தில் வீட்டுக்குள்ளேயே ஏற்பட்ட சப்தத்தைப் பேசுகிறார்கள்.

காசும் பிறப்பும் கலகலப்ப—காசு - ரத்நம்; பிறப்பு - ஜாதரூபம்; அதாவது: ஸ்வர்ணம். இதனால் ரத்நமயமான ஆபரணங்களும் ஸ்வர்ணமயமான ஆபரணங்களும் விவக்ஷிதம்.

கை பேர்த்து—கைகளை மாறிமாறி இழுத்து. இவ்வித ஆபரணங்கள் கலகலவென்று சப்திக்கும்படியாக.

வாசம் நறும் குழல் ஆய்ச்சியர்—புஷ்பம் முதலிய ஸுகந்தமுள்ள த்ரவ்யங்களால் வாஸனை வீசும் அழகிய கூந்தல்களையுடைய கோபிகைகள்; இத்தால் இவர்கள் தலையில் அணிந்த புஷ்பங்கள் அவிழ்ந்து அவைகளின் பரிமளம் வெளியே வீசுகிறதென்பது ஸூசிதம்.

மத்தினால் ஓசைபடுத்த தயிர் அரவம் கேட்டிலையோ — மத்தைக் கொண்டு கடைவதால் உண்டான தயிரின் சப்தத்தை நீ கேட்கவில்லையோ?

நாயகப் பெண்பிள்ளாய் — தலைமை வாய்ந்த பெண்ணே! இது ஸாகூத பரிஹாஸமாகும். வீட்டிலுள்ள மற்ற ஸ்த்ரீகள் தயிர் கடைவது முதலிய கார்யங்களைச் செய்துகொண்டிருக்கையில் உன்னை ஒருவரும் எழுப்பாமல் தூங்கும்படி விட்டிருப்பதைக் கண்டால், நீ ஸ்வதந்த்ரையானபடியால் உன்னை எழுப்ப அஞ்சுகிறார்கள் போலும் என்பது ஸூசிதம். அல்லது : முதலில் 'பேய்ப் பெண்ணே' என்று அதிக்ஷேபோக்தியால் ஒருக்கால் மநஸ்தாபம் உண்டாகுமோவென்று அதை ஶமிப்பதற்காக இப்படிப் புகழ்ந்து கூப்பிட்டதாகவும் கொள்ளலாம்.

நாராயணன் மூர்த்தி கேசவனைப் பாடவும் நீ கேட்டே கிடத்தியோ—'நாராயணனே நமக்கே பறைதருவான்' என்று முன்பே கூறியபடி, ஸ்ரீமந்நாராயணனுடைய அவதார விசேஷமாகிய ஸ்ரீ க்ருஷ்ணனைப் பற்றிக் கோபிகைகள் தயிர் கடையும்போது காநம் பண்ணுவதை நீ கேட்டும் படுத்துக்கொண்டிருக்கிறாயே, அது யுக்தமா? இங்கு, 'கேசவனைப் பாடவும்' என்றது கோபகுமாரிகைகள் தாங்கள் பாடுவதை விவக்ஷித்ததாகவும் அர்த்தம் கொள்ளலாம். ஆனால் இதற்கு மூலபூதமான ஸ்ரீபாகவதத்தில் கூறப்பட்டிருப்பதைக் கவனித்தால், கோபிகைகள் தயிர் கடையும்போது க்ருஷ்ணனைப்பற்றிப் பாடுவதே இங்கு அபிப்ரேதமென்று தோன்றுகிறது. அங்கு தசமஸ்கந்தம் ஒன்பதாவது அத்யாயத்தில் யசோதை தயிர் கடைவதைப் பின்வருமாறு மஹர்ஷி வர்ணிக்கிறார்.

"𑌏𑌕𑌦𑌾 𑌗𑍃𑌹𑌦𑌾𑌸𑍀𑌷𑍁 𑌯𑌶𑍋𑌦𑌾 𑌨𑌨𑍍𑌦𑌗𑍇𑌹𑌿𑌨𑍀 ।
𑌕𑌰𑍍𑌮𑌾𑌨𑍍𑌤𑌰𑌨𑌿𑌯𑍁𑌕𑍍𑌤𑌾𑌸𑍁 𑌨𑌿𑌰𑍍𑌮𑌮𑌨𑍍𑌥 𑌸𑍍𑌵𑌯𑌂 𑌦𑌧𑌿 ॥
𑌯𑌾𑌨𑌿 𑌯𑌾𑌨𑍀𑌹 𑌗𑍀𑌤𑌾𑌨𑌿 𑌤𑌦𑍍𑌬𑌾𑌲𑌚𑌰𑌿𑌤𑌾𑌨𑌿 𑌚 ।
𑌦𑌧𑌿𑌨𑌿𑌰𑍍𑌮𑌨𑍍𑌥𑌨𑍇 𑌕𑌾𑌲𑍇 𑌸𑍍𑌮𑌰𑌨𑍍𑌤𑍀 𑌤𑌾𑌨𑍍𑌯𑌗𑌾𑌯𑌤 ॥
𑌕𑍍𑌷𑍌𑌮𑌂 𑌵𑌾𑌸𑌃 𑌪𑍃𑌥𑍁𑌕𑌟𑌿𑌤𑌟𑍇 𑌬𑌿𑌭𑍍𑌰𑌤𑍀 𑌸𑍂𑌤𑍍𑌰𑌨𑌦𑍍𑌧𑌂
𑌪𑍁𑌤𑍍𑌰𑌸𑍍𑌨𑍇𑌹𑌸𑍍𑌨𑍁𑌤𑌕𑍁𑌚𑌯𑍁𑌗𑌂 𑌜𑌾𑌤𑌕𑌮𑍍𑌪𑌂 𑌚 𑌸𑍁𑌭𑍍𑌰𑍂𑌃 ।
𑌰𑌜𑍍𑌜𑍍𑌵𑌾𑌕𑌰𑍍𑌷𑌶𑍍𑌰𑌮𑌭𑍁𑌜𑌚𑌲𑌤𑍍𑌕𑌙𑍍𑌕𑌣𑍌 𑌕𑍁𑌣𑍍𑌡𑌲𑍇 𑌚 ।
𑌸𑍍𑌵𑌿𑌨𑍍𑌨𑌂 𑌵𑌕𑍍𑌤𑍍𑌰𑌂 𑌕𑌬𑌰𑌵𑌿𑌗𑌲𑌨𑍍𑌮𑌾𑌲𑌤𑍀 𑌨𑌿𑌰𑍍𑌮𑌮𑌨𑍍𑌥 ॥"

இங்கு யசோதாப் பிராட்டியைப்பற்றிக் கூறியது, யதாஸம்பவம் மற்றும் தயிர் கடையும் கோபிகளுக்கு மொக்குமென்று கருதியே ஆண்டாள் இவ்வாறு வர்ணித்தார் போலும்.

இதைக்கேட்டவுடன் உள்ளேபடுத்திருந்தவள் சிறிது அசைவது போல் தெரிந்தவுடன் ஆவலோடு ப்ரரோசநம் செய்கிறார்.

தேசமுடையாய் திற—தேஜஸ்ஸை உடையவளே! கதவைத் திற. இங்கு, தேஜஸ் என்பதால் ப்ராத: ப்ரபோதத்தால், ஏற்பட்ட முக வைலக்ஷண்யம் நிர்த்தேசிக்கப்படுகிறது. முதலில் 'பேய்ப்பெண்ணே' என்று நிந்தையும், பிறகு 'நாயகப் பெண்பிள்ளாய்' என்று பரிஹாஸ கர்ப்பமான ஸம்போதநமும், பிறகு 'தேசமுடையாய்' என்னும் ப்ரயோகமும் அத்யந்த ரஸாவஹமான க்ரமமாகும். [தொடரும்]

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ அஹோபில க்ஷேத்ரம்

[ஒரு சிறு நாடகம்]

[திருப்பூந்துருத்தி ஸ்ரீ. உப. வ. க்ருஷ்ணஸ்வாமி ஐயங்கார், B.A.,]

[இது திருவேங்கட மலையின் க்ஷேத்ர மாஹாத்ம்யத்தில் ஸ்ரீ அஹோபிலத்தைப்பற்றிக் கூறப்பட்டுள்ளதைத் தழுவி எழுதப்பட்டது]

காட்சி I

[வைகுந்தத்தில் எம்பெருமானுடைய பொற்குன்ற மனைய கோயிலை யடுத்த ஓர் உத்யாந வனம். பலவிதமான இன்பக் காட்சிகள் கண்களைக் கவர்கின்றன. பல விதமான புஷ்பச் செடிகளும், பல வ்ருக்ஷங்களும், புஷ்பங்களையும் பல வர்க்கங்களை யும் சுமந்து பொலிவுற விளங்குகின்றன. தாமரை யோடையில் செங்கமல மலர்கள் மலர்ந்து மந்தமாருதம் வீச மெல்லச் சலிக்கின்றன. தடாகங்களில் ஹம்ஸங்களும் சக்ரவாகங்களும் விளையாடுகின்றன. மாமரத்தின்மீது குயிலினங்கள் கூவுகின்றன. மயில்கள் ஒருபுறம் மெல்ல நடை பயில்வதுபோலும் ஸஞ்சரிக்கின்றன. இளந் தென்றல் இன்புற வீசுகின்றது. புஷ்பங்களின் நறுமணம் அவ்வனம் முழுவதும் வாஸிக்கின்றது. ஆங்காங்கு நவரத்நங்க ளிழைத்த பொன் மேடைகளும், பல பல வர்ணக் கற்கள் பதித்த படிகளை யுடைய வாவிகளும், பொழுதுபோக்கப் பிராட்டியார் தமது தோழிகளோடு ஆடுவதற்கேற்ற மாணிக்கங்க ளிழைத்த பொன்னூசல்களும் பொலிவுறுகின்றன. தரை யெங்கும் பச்சைக் கம்பளம் விரித்தாற்போல் பசும்புல் முளைத்திருக்கின்றது. எம்பெருமானும் பிராட்டியாரும் தமது திருக்கைகளால் நீர் வார்த்து வளர்த்த வ்ருக்ஷங்கள் பற்பலவாம். பிராட்டியார் தமது திருக்குழற் கற்றைக் கலங்காரமாகச் சூடும் புஷ்பங்களைத் தாமே பறித்து மகிழுமாறு சிறந்த பாக்யத்தைப் பெற்று விளங்கும் வ்ருக்ஷங்களும் செடி கொடிகளும் பலவாம். எல்லா ருதுக்களிலும் மலரும் புஷ்பங்களும், உண்டாகும் பல வர்க்கங்களும் அங்கே தோன்றுவதால், வைகுண்டத்தில் காலத்தின் வேறுபாடுகள் கிடையா வென்பதை இந்த வனமே நன்கு புலப்படுத்தும். மெய் வாய் கண் மூக்கு செவி யெனும் ஐவாய வேட்கைகளையும் ஏககாலத்தில் த்ருப்தி பண்ணும் இத்தெய்வ வனத்தில் ஒரு ரத்ந மேடையின்மேல் எம்பெருமான் வீற்றிருக்கின்றார். சற்றுத் தூரத்தில் அவ்வனத்தின் இன்பக் காட்சிகளை நோக்கிய வண்ணம் பிராட்டியார் நிற்கின்றார்.]

பிராட்டி :—[மலர்ந்த முகத்துடன்] இதோ பார்த்தீர்களா இந்தத் தாமரை மலரை! எவ்வளவு அழகாக இருக்கின்றது! புதியதாக மலர்ந்து நறுமணங் கமழும் இந்தப் புஷ்பத்தைப் பார்க்கும் எவர்தான் 'புஷ்பங்களுக்குள் தாமரைதான் சிறந்தது' என்று ஒப்புக்கொள்ளமாட்டார்கள்? [என்று சொல்லிக்கொண்டே பொய்கையிலிருந்து எட்டிப் பறித்த ஒரு செங்கமல மலரை எம்பெருமானுக் கெதிரில் நீட்டுகிறார்.]

எம்பெருமான் :—[தமக்குள்] இது விளையாட்டுக்கு மிகவும் ஏற்ற ஸமயம்; தேவியும் மிக உத்ஸாகமாக இருக்கிறாள்; ஆகையால் சற்று நேரம் பரிஹாஸமாகப் பொழுது போக்குவோம். [புன்சிரிப்புடன் ப்ரகாசமாக] மங்கையர்களுக்குத் தங்கள் தங்கள் தாய்வீட்டில்தான் ப்ரிய முண்டு என்பார்கள். இந்தத் தாமரை மலர் உன்னுடைய பிறந்த அகமல்லவா? ஆகையால்தான் இதைக் கொண்டாடுகிறாய்போல் தோன்றுகிறது.

பிராட்டி :—[தமக்குள்] இப்போது எம்பெருமானுக்குப் பரிஹாஸமாகப் பொழுதுபோக்க வேண்டுமென்று எண்ணமுண்டாகி யிருக்கிறது. நாமும் அந்த ரஸத்தைத்தான் வ்ருத்தி செய்யவேண்டும். [ப்ரகாசமாக] அப்படி யொன்றுமில்லை. இந்த மலரைப் பார்த்தவுடன் தேவரீருடைய ஞாபகம் வந்துவிட்டது. [புன்சிரிப்புடன்] 'ராமாவதாரம் எடுத்துச் சூர்ப்பணகை முதலிய அரக்கர்குலப் பாவையரை மயக்குவதற்காகத் தேவரீர் காட்டிய கண்ணழகைப்போல் இருக்கின்றதே இதன் அழகும்' என்பதனால் தான் இதைப் போற்றினேன்.

எம்பெருமான் :—அப்படியா? 'அதே அவதாரத்தில் ராவணனை மயக்கி அவன் அழிவுக்குக் காரணமாயிருந்த உன் முகத்தின் அழகுபோல்' என்றுதான் சொல்லேன்.

பிராட்டி :—[புன்சிரிப்புடன்] என்னுடைய முகத்தைக் காட்டிலும் தேவரீருடைய கண்களுக்கும் தாமரை மலருக்குமுள்ள ஸாம்யந்தான் அதிகம். தாமரை மலர் ஸூர்யனைப் பார்த்தால் மலருமாம். சந்த்ரனைப் பார்த்தால் குவிந்துவிடுமாம். அதைப்போல் தேவரீருடைய கண்கள்தான் நல்லவரைப் பார்த்து மலர்ந்து, தீயவரைப் பார்த்தவுடன் குவிந்துவிடுகின்றன. [முகத்தில் புன்சிரிப்பு மறைகிறது.] உலகத்து ஜனங்களெல்லாம் தேவரீருடைய குழந்தைகள்தானே. அவர்களையெல்லாம் தேவரீர் ஏன் ஸுலபமாக ரக்ஷித்தருளக் கூடாது? பக்தி யோகம் என்னும் தூக்கமுடியாத ஒரு சுமையை அவர்கள் தலைமேல் வைத்து, 'இந்தச் சுமையை அவர்கள் தூக்கிவிட்டால் அதற்குக் கூலியாக மோக்ஷத்தைக் கொடுத்துவிடுகிறேன்' என்கிறீர்கள். குழந்தைகள் விஷயத்தில் இரக்கமில்லாத உங்களுடைய இந்த மனதை ஏன் கல்லைவிடக் கடினமானது என்று சொல்லக்கூடாது?

எம்பெருமான் :—நீயும்தான் ஈஸ்வரி யாச்சுதே. அவர்களுக்கு நீதான் மோக்ஷத்தைக் கொடுத்து விடேன். நான் வேண்டாமென்று சொல்லுகிறேன்.

பிராட்டி :—[கொஞ்சமும் சளைக்காமல்] மோக்ஷத்தைக் கொடுக்கத்தான் கொடுப்பேன். தகப்பன் ஸொத்துக்குப் பிள்ளைகள் இட்டுப் பிறந்தவர்கள்தானே! நமது கோயில் வாசலில் வந்து கை குவித்து ஓர் அஞ்ஜலியைப் பண்ணிவிட்டால், நமதனைத்தும் அவர் தமக்கு வழங்கி, அக்ஷரகதியான கைவல்யத்தையுங்கொடுத்து, பரமபதமான மோக்ஷத்தையும் கொடுத்தாற்கூட அவர்களுடைய அஞ்ஜலிக்கு ப்ரதி ப்ரயோஜநமாகுமோ? [சற்று யோசிக்கிறார்] நாம் இப்படி வைகுந்தத்திலே யிருந்துகொண்டு அவர்களையெல்லாம் காப்பாற்ற வேண்டுமென்று எண்ணுவதைவிட, அவர்களிருக்குமிடமாகிய பூலோகத்திற்கே நாமும் சென்று, அங்கே நமது திருவடிகளில் யார் வந்து சரணாகதி பண்ணினாலும் அவர்களைக் காப்பாற்றுவது நல்லதல்லவா?

எம்பெருமான் :—நீ சொல்வது வாஸ்தவந்தான். ஆனால்............[சற்றுத் தயங்குகிறார்.]

பிராட்டி :—ஆனால் என்ன ?

எம்பெருமான் :—தயாதேவியின் தூண்டுதலால் நாம் எவ்வளவு தடவைகள் பூலோகத்தில் அவதரித்திருக்கிறோம்? எந்த அவதாரத்திலாவது பரிபவ மில்லாமல் திரும்பிவந்திருக்கிறோமா? மீனாகவும் ஆமையாகவும் அன்னமாகவும் பன்றியாகவும் அரியாகவும் பரியாகவும் எடுத்த அவதாரங்கள் இருக்கட்டும். ராமனாகவும் க்ருஷ்ணனாகவும் மநுஷ்ய ரூபத்தில் அவதார மெடுத்தோமே. ராமாவதாரத்தில் ராஜ்யத்தை விட்டு விட்டுக் காட்டுக்குப் போனோ மென்ற காரணத்தால் ராவணன் நம்மைக் 'கையாலாகாதவர்கள்' என்று நம் முகத்துக் கெதிரில் வைதான். க்ருஷ்ணாவதாரத்தில் எவ்வளவோ அதிமாநுஷங்களான காரியங்களைச் செய்தும் 'நாம் செய்ததெல்லாம் இந்த்ர ஜாலம்' என்று சொல்லிச் சிரித்தான் சிசுபாலன். பூலோகத்துக்குப் போனால் ஒரே பரிஹாஸமும் பரிபவமுந்தான். ஆகையால் அதைத் தவிர வேறு ஏதாவது சொல். கேட்கிறேன்.

பிராட்டி :—தேவரீருடைய காரணங்கள் அடியேனுக்கு த்ருப்திகரமாகத் தோன்றவில்லையே! ஸர்வ லோகேஸ்வரனாக இருந்துவைத்து, ஓரிரு சிறு மனிசர் நம் ப்ரபாவத்தை யறியவில்லையென்று மநுஷ்ய லோகத்தையே அநாதரிப்பது சரியாகுமோ? சொல்லப்போனால் அந்த சைத்ய ராவணர்களையும் நற்கதிக்குக் கொண்டு வருவதல்லவா நமது கடமை?

எம்பெருமான் :—அதிருக்கட்டும்; ஒவ்வொரு அவதாரத்திலேயும் நீயும் என்னுடன் அவதரிக்கிறா யல்லவா? உன்னால் எனக்கு எவ்வளவு பரிபவங்கள் ஏற்படுகின்றன தெரியுமா? [முகத்தில் புன்னகை தவழ்கின்றது.]

பிராட்டி :—[ஆஸ்சர்யத்துடன்] அடியேனால் தேவரீருக்குப் பரிபவமா? [சிறிது யோசித்து] ஒருக்கால் காட்டுக்கு எழுந்தருளும்போது 'நீ வரவேண்டாம்' என்று தேவரீர் சொல்லியதை அதிக்ரமித்து 'நானும் வந்துதான் தீர்வேன் என்று பிடிவாதம் பண்ணினேனே' அதனைத் தேவரீர் நினைத்து ஸாதித்தபடியோ? [கண்ணீர் சொரிகிறார்.]

எம்பெருமான் :—சரிதான்! கண்களால் ஜலம் விட்டு ஏமாற்றுவது பெண்களுக்கே ஸஹஜமன்றோ? இதற்கெல்லாம் நான் ஏமாந்து விடுவேனென்று நினைக்கிறாயோ? பரிபவமென்று என்னுடன் நீயும் காட்டுக்கு வந்ததைச் சொல்லவில்லை. 'நான் ஶரணாகத ஸம்ரக்ஷணம் பண்ணுகிறேன்' என்று ஒரு கோஷ்டியை ஆரம்பித்தால், அதற்கு எதிர்த்தட்டாக நீயும் ஒரு கோஷ்டியை ஆரம்பிக்கிறாய். எல்லாரும், 'ராமனுடைய கோஷ்டி இளப்பமாகிவிட்டது; ஸீதையின் கோஷ்டிதான் உயர்ந்துவிட்டது' என்கிறார்கள். 'நான் எங்குப் போனாலும் ஜயிக்காமல் திரும்பி வருகிறதில்லை' என்று வாங்கி

யிருந்த பேரெல்லாம் உன்னாலே மாறி, 'ராமாவதாரம் எடுத்து ஶரணாகத ஸம்ரக்ஷணத்தில் ராமன் தோற்றான்; ஸீதை வென்றாள்' என்று உலகம் முழுவதும் சொல்லும்படியாகி விட்டதே!

பிராட்டி:—[முகமலர்ச்சியுடன்] ஓஹோ! அதைச் சொல்லுகிறபடியா? அப்படியானால் இனி நாம் எப்போதும் சேர்ந்தேயிருந்து ஶரணாகதர்களைக் காப்பாற்றுவோமே!

எம்பெருமான்:—ரொம்ப சரி. நம்முடைய க்ரீடாஶைலம் பூமிக்குப் போகவேண்டும்; அதற்கென்ன செய்யலாம்?

பிராட்டி:—தேவரீருடைய ஸங்கல்பந்தான் இதில் தேவரீருக்கு ஸஹாயன். தேவரீர் நினைத்தவுடன் காரியம் ஆகாதோ? [பகவான் சற்று யோசிக்கிறார்.]
[திரை விழுகிறது.]

காட்சி II

[திருப்பாற்கடலில் சேஷதல்பத்தில் எம்பெருமான் சயனித்திருக்கிறார். பிராட்டி அவருடைய திருவடியை வருடுகிறார். அநந்த கருட விஷ்வக்ஸேநாதியர் தங்கள் தங்கள் அநவரத கைங்கர்யத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். த்ரிலோக ஸஞ்சாரியாகிய நாரதர் பூமி முழுவதும் சுற்றிவிட்டு வ்யூஹாவதாரனாக அங்குச் சயனித்திருக்கும் எம்பெருமானை ஸேவிக்க விரும்பி வருகின்றார். அவருடைய இன்பமயமான கானம் எல்லோருடைய உள்ளங்களையுங் கவர்கின்றது.]

நாரதர்:—[கைகளில் யாழினைத் தாங்கி]

ராகம்: புஷ்பலதிகா; தாளம்: ஆதி.

['இகநைந நா' - என்னும் மெட்டு]

"ஜயராஹித வார்ஷ்ணவம்ஶநாஶா:
க்ஷேத்ராயம்பி ப்ரயக்ரவிம்ஹஸ்யா: |
ஹரிநீலஶிலா விபங்கநீயா:
ப்ரதிஹாஸ்ஸது ஶோணிதப்ரயாணே ||"

ராகம்: மாண்டு; தாளம்: ஆதி.

"இந்திரற்கும் பிரமற்கு முதல்வன்தன்னை
இருநிலங்கால் தீநீர்விண் பூதமைந்தாய்
செந்திறத்த தமிழோசை வடசொல்லாகித்
திசைநான்கு மாய்த்திங்கள் நாயிருகி
அந்தரத்தில் தேவர்க்கு மறியலாகா
அந்தணனை யந்தணர்மாட் டந்திவைத்த
மந்திரத்தை மந்திரத்தால் மறவாதென்றும்
வாழுதியேல் வாழலாம் மடநெஞ்சமே!"

என்று பாடிக்கொண்டே ப்ரவேசிக்கிறார். எம்பெருமானையும் பிராட்டியையுங் கண்டவுடன் பல தடவைகள் ஸேவிக்கிறார். ஸேவித்து அஞ்ஜலியுடன்,

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
13 JAN 1944
MADRAS

ராகம் : மோஹநம் ; தாளம் : ஆதி.

மூவுல குந்தொழு முதல்வா ! போற்றி
முத்தி யளிக்கும் முகுந்தா ! போற்றி
தேவரு மறியாத் தேவே ! போற்றி
திருமகள் மருவும் பெருமா ! போற்றி
மேவிய விழுமியோர் நிதியே ! போற்றி
மிகுநலப் பெருங்குண விறையே ! போற்றி
பூவரு மயன்முதல் யாவரும் போற்றும்
புண்ணிய புருஷனே ! போற்றி போற்றி.

என்று பல்லாண்டு பாடுகிறார்.

எம்பெருமான்:—நாரதரே! வாரும். உலகத்துக்கெல்லாம் க்ஷேமத்தையே உண்டாக்கவேண்டுமென்ற எண்ணத்தாலேயே த்ரிலோகங்களிலும் ஸஞ்சரித்து வருகின்றவராயிற்றே நீர்! இப்போது எங்கிருந்து வருகின்றீர்?

நாரதர்:—ஐயனே! அடியேன் பூமியிலுள்ள திருப்பதிக ளெல்லாம் சென்று தொழுது வருகின்றேன். ஒவ்வொரு ஸ்தலமும் அளவற்ற ப்ரபாவங்களாலும் ஆநந்தமயமான காட்சிகளாலும் புண்ய புருஷர்களாலும் செறிந்து விளங்குகின்றது. இவ்வாறு பூவுலகின்கண் உள்ள திருப்பதிகளை யெல்லாந் தொழுத அடியேன் இங்கும் வந்து தேவரீரை ஸேவிக்க விரும்பினேன். ஸேவிக்கவும் பெற்றேன். ஐயனே! அடியேனுடைய பாக்யத்தை என்னென்பேன்!

எம்பெருமான்:—நாரதரே! நீர் மிகவும் ஸரியான காலத்தில்தான் இங்கு வந்தீர். நாம் பூலோகத்திற் சென்றிருந்து சிறிது காலம் விஹாரங்கள் செய்ய விரும்புகிறோம். அதற்கேற்ற இடங்கள் அங்கு ஏதேனும் இருக்கின்றனவோ?

நாரதர்:—ப்ரபோ! தேவரீருக்குத் தெரியாத இடம் அடியேன் சொல்லப் போகின்றேனோ? வேங்கடம், அஹோபிலம், குடந்தை, காஞ்சி முதலிய எல்லா விடங்களுமே தேவரீருடைய விஹாரங்களுக்கு ஏற்றவைதாம்.

எம்பெருமான்:—வேங்கடம் எப்படிப்பட்ட தலம்?

நாரதர்:—ஐயனே! திருவேங்கடம் ஒரு அழகிய புனித மலை—[பாடுகிறார்]

ராகம் : காம்போதி ; தாளம் : ஜம்பை.

"கண்ணனடி யிணையெமக்குக் காட்டும் வெற்பு
கடுவினைய ரிருவினையுங் கடியும் வெற்பு
திண்ணமது வீடென்னத் திகழும் வெற்பு
தெளிந்தபெருந் தீர்த்தங்கள் செறிந்த வெற்பு
புண்ணியத்தின் புகலிதென்னப் புகழும் வெற்பு
பொன்னுலகில் போகமெல்லாம் புணர்க்கும் வெற்பு
விண்ணவரு மண்ணவரு விரும்பும் வெற்பு
வேங்கட வெற்பென விளங்கும் வேதவெற்பே."

எம்பெருமான் :—வேங்கடத்தை யடுத்துள்ள அஹோபிலம்?

நாரதர் :—திருவஹோபிலமும் புண்ய தேசந்தான். ஆனால் அது அழகிய காட்சிகளோடு பயங்கரமான தோற்றங்களும் கொண்டதாய்த் திகழும். ஐயனே! [பாடுகிறார்]

['ஆறுமுக வடிவேலனே' என்னும் மெட்டு]

(1) சிங்கவேழ் குன்றமென் றெங்கணும் போற்றுமோர்
தெய்வத் திருவ ரையாம்—அதன்
துங்கமா நீண்முடி யோங்கிமு கிற்குலம்
சூழத்து லங்கிடு மாம்.

(2) பொன்வரை மற்றிதென் றேத்தியே நாற்றிசை
போற்றிடும் பெற்றிய தாம்—மிகக்
கன்னில மாமிதிற் காணவெ ருவுறும்
காட்சியும் வேண துண்டாம்.

(3) ஆனைகள் வேங்கைக ளாளிகள் நாய்களு
மானவி லங்குகளும்—திசை
தானுமி டிக்கவே யார்த்துமு ழங்கியச்
சாரலில் வாழ்ந்திடு மாம்.

(4) காட்டுப் பெருந்தீயும் கானக்கு றவரும்
காணவே மெய்சிலிர்க் கும்—பெரு
வீட்டினில் வாழ்ந்திடும் சூரியர்க் கேயலால்
மேவலாந் தன்மைத் தன்றாம்.

(5) பாவங்கள் தீர்த்திடு மாறென் றுண் டாமதே
பாவத்தின் நாசினி யாம்—அது
மேவிடும் விண்ணவர் பொன்னுல கில்திகழ்
விரசையே யாயிடு மாம்,

(6) காசினி யில்மிகப் பாவன மென்றிடுங்
காசியுங் கங்கை யெலாம்—தன்
தேசினில் நூறிலோர் தேசமு மாகாத
தெய்வப் பதியா மிது.

அஹோபில மென்னும் இந்தத் திருப்பதிக்கு ஸமானமாகச் சொல்லக் கூடிய இடமே ஒன்று மில்லை. தேவரீருடைய விஹாரங்களுக் கேற்ற திவ்ய தேசங்களே இந்தத் திருப்பதிகள்.

எம்பெருமான் :—நாரத! நல்லது. நீர் ஸமயத்தில் வந்ததும் உபகார மாகவே ஆயிற்று.

நாரதர் :—பாக்யம். வேறொன்றும் விசேஷ மில்லையே. அடியேனுக்கு நியமநம் ஸாதித்தருள வேண்டும். சென்று வருகிறேன்.

எம்பெருமான் :—ஆஹா அப்படியே செய்யும்.

[நாரதர் பாடிக்கொண்டே கிளம்புகிறார்.]

[திரை விழுகிறது.]

[தொடரும்]

ஶ்ரீ:

ஶ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் விஷயமான

அடைக்கலப்பத்து

[வேதாந்த சிரோமணி நெடுந்தெரு. ஸ்ரீ. உப. ரா. பத்மநாபாசார்யர் இயற்றிய பதவுரை விசேஷ உரைகளுடன்]

[ஸம்புடம் 2 : ஸஞ்சிகை 11 : பக்கம் 404-ன் தொடர்ச்சி]

6-ம் பாசுரத்தின் அவதாரிகை.—ஸ்ரீ ந்ருஸிம்ஹன் கண்ணனாக அவதரித்துக் கீதையை உபதேசிக்கும்போது 'மயா ததமிதம் ஸர்வம்' என்பது முதலியவைகளால், தான் எல்லா வஸ்துக்களிலும் உள்ளும் புறமும் வ்யாபித்து நிற்பதையும், மற்றும் தன்னுடைய அநேக பெருமைகளையும் அர்ஜுநனுக்கு உபதேசித்துவிட்டு, 'ந ச மாம் யோऽப்யஸூயதி' என்று இவ்வர்த்தங்களைத் தன்னிடத்தில் அஸூயையைப் படுகிறவர்களுக்குச் சொல்லக்கூடாதென்றும் கட்டளையிடுகிறார். அப்படிப்பட்ட ரஹஸ்யார்த்தத்தைத் தன்னிடத்தில் பரம த்வேஷத்தைச் செய்யும் ஹிரண்யாஸுரனுக்குத் தானே ப்ரத்யக்ஷமாகக் காட்டும்படியாக எம்பெருமானுக்கு ஏற்பட்ட நிர்ப்பந்தத்தை இப்பாசுரத்தில் அருளிச்செய்கிறார்.

6. இங்குளனங் குளனல்ல னென்றுரைக்கக் கூடாமே
எங்குமுள னென்கண்ண னென்றுரைத்த தன்மகனை
குங்குமம்போற் சிவந்தகண்ணன் குருட்டவுண னுதைத்திட்ட
சங்கணிதூண் பிளந்தபிரான் சதிரடியை யடைந்தேனே.

பதவுரை :—இங்கு உளன் - இவ்விடத்தில் இருக்கிறான், அங்கு உளன் அல்லன் - அவ்விடத்தில் இருக்கவில்லை, என்று உரைக்க கூடாமே - என்று சொல்ல முடியாதபடி, என் கண்ணன் - என் ஸ்வாமியான புண்டரீகாக்ஷன், எங்கும் உளன் - எங்கும் இருக்கிறான், என்று உரைத்த தன் மகனை - என்று சொன்ன தன் பிள்ளையான ப்ரஹ்லாதனைக் குறித்து, குங்குமம்போல் சிவந்த கண்ணன் - [கோபத்தால்] குங்குமப்பொடிபோல் சிவந்த கண்களை யுடையவனான, குருட்டு அவுணன் - [உள்ளறிவு இல்லாததால்] குருடனுக்குச் சமானமான ஹிரண்யாஸுரன், உதைத்திட்ட - கையால் அடித்த, சங்கு அணி தூண் - சங்கு முதலியவைகளால் அலங்கரிக்கப்பட்ட கம்பத்தை, அல்லது சங்கத்துக்கு [ஸபைக்கு] அலங்காரமான கம்பத்தை, பிளந்த பிரான் - பிளந்துகொண்டு [வெளி வந்து ப்ரஹ்லாதனைப் பொய் சொல்லாதவனாகச் செய்து] உபகரித்தருளின ஸ்ரீந்ருஸிம்ஹனுடைய, சதிர் அடியை - [தன்னை ஆஶ்ரயித்தவர்களை ரக்ஷிக்கும்] பெருமை வாய்ந்த திருவடிகளை, அடைந்தேன் - சரணமாக அடைந்தேன். [ஏ - அசை]

குறிப்பு :—உலகில் தன் மதலைகள் தப்பும் தவறுமாகக் குழறிச் சொல்லும் மழலைச் சொல்லையே கேட்டுத் தாய் தகப்பன்கள் மகிழ்ச்சியடைவது இயற்கையாயிருக்க, மஹான்களுக்கும் அறிய வரிதாயும், மறைகளில் மறைந்து கிடப்பதும், வெகு காலம் வணங்கிக் கேட்பவர்களுக்குமட்டும் சொல்லவேண்டியதுமான தத்வார்த்தத்தை [எங்கு முளன் கண்ணன் என்னும் அர்த்தத்தைத்] தன் குழந்தையான ப்ரஹ்லாதன் உரைத்ததும், அவனைக் கட்டி யணைந்து மட்டடங்கா மகிழ்ச்சி கொள்வதுடன், தனக்குத் தெரியாத அர்த்தத்தைச் சொன்ன பின்பாவது தெரிந்துகொள்ள வேண்டியதாயிருக்க, அப்படி இல்லாதது மன்றியில், அந்த ப்ரஹ்லாதன் விஷயத்தில் கோபத்தாலே செய்யும் வழி யறியாமல் அந்தனான ஹிரண்யாஸுரனைக் காட்டிலும் கண்ணிலான் யார் இருக்க முடியும் என்கிற திருவுள்ளத்தாலே இப்பாசுரத்தில் ஹிரண்யாஸுரனைக் 'குருட்டவுணன்' என்கிறார்.

கருத்து :—தான் எங்கும் நிறைந்திருப்பவன் என்கிற தத்வத்தைத் தன்னிடத்தில் பரம த்வேஷத்தைச் செய்யும் ஹிரண்யாஸுரனுக்கு மறைக்கவேண்டுமென்று

எம்பெருமானுக்குத் திருவுள்ளமாயிருந்தபோதிலும், 'எங்குமுளன் கண்ணன்' என்று ப்ரஹ்லாதன் சொன்ன ஸமயத்தில் ஹிரண்யாஸுரன் காட்டிய கம்பத்திலிருந்து வெளிவராமல் இருந்துவிட்டால், தன் பக்தனும் ப்ருத்யனுமான ப்ரஹ்லாதன் "யத்ஸாக்ஷாதபரோக்ஷாத் ப்ரஹ்ம" [எந்த ப்ரம்ஹமானது எல்லாத் தேசங்களிலும் எல்லா வஸ்துக்களிலும் எல்லாக் காலங்களிலும் நிறைந்திருக்கிறதோ அது தேஹாதிகளையும் ஜீவனையும் காட்டிலும் வேறுபட்டதான வஸ்து] என்பது முதலான உபநிஷத்துக்களில் எங்கும் நிறைந்திருப்பதாகச் சொல்லப்பட்ட அநந்த வஸ்துவை 'இங்கு மட்டும் உளன் அவ்விடத்தில் உளனல்லன்' என்பதாகச் சொல்ல முடியாமையால் "எங்கு முளன் என் கண்ணன்" என்று சொன்ன வார்த்தை பொய்யாகிவிடுமாகையால், "ந வஶம் யோத்ஸ்யதி" என்கிற தன் வார்த்தை அழிந்தாலும் தன் ப்ருத்யனை ப்ரஹ்லாதனுடையவும் உபநிஷத்துக்களுடையவும் வார்த்தைகளைப் பொய்யாகாமல் செய்யவேண்டும் என்கிற திருவுள்ளத்தாலே அந்த ஹிரண்யாஸுரன் உதைத்த ஸ்தம்பத்திலிருந்து வெளிவந்து, தான் எங்கும் நிறைந்திருப்பவன் என்கிற தத்வத்தை ஹிரண்யாஸுரனுக்குப்பட ப்ரத்யக்ஷமாகக் காட்டிப் பக்தனை ப்ரஹ்லாதனைப் பொய்யில்லாதவனாகச் செய்து ஸ்ரீந்ருஸிம்ஹன் ரக்ஷித்தபடியால், அவ்வெம்பெருமானுடைய சரணாரவிந்தங்களை யாவரும் சரணமாகப் பற்றி அவ்விதமே அவனால் ரக்ஷிக்கப்பட்டு வாழவேண்டும் என்பது கருத்து.

7-ம் பாசுரத்தின் அவதாரிகை :—ஸ்ரீந்ருஸிம்ஹன் ஒரே திருமேனியில் நரமும் சிங்கமுமான இரண்டு ஆகாரத்துடன் ஸேவை ஸாதிப்பதானது, தன்னுடைய திவ்யாத்ம ஸ்வரூபம் ஒன்றே முமுக்ஷுக்களுக்கு ப்ராப்யமாயும் ப்ராபகமாயும் இரண்டு விதமான ஆகாரத்துடன் கூடியது என்பதைத் தெரிவிப்பதற்காகவோ என்று உத்ப்ரேக்ஷா மூலமாக, ஸ்ரீந்ருஸிம்ஹனுடைய திருமேனியின் வைசித்ர்யத்தை இந்தப் பாசுரத்தில் அநுபவித்து வணங்குகிறார்.

7. ஒருருவே யீருருவா மெந்தனக்குட் கண்ணுடைய
சீருருவச் சிந்தையுளர் சிந்தியுங்க ளெனத்திகழும்
பேருருவ விரணியனைப் பிணம்படவே கிழித்துகந்த
ஆருருவ நரசிங்க னடியின்றி மற்றிலனே.

[பதவுரை :—உள் கண் உடைய சீர் உருவம் சிந்தை உளர்- அகக்கண் உடையவர்களாயும் பரமாத்மாவான என்னுடைய சுபாஶ்ரய திவ்ய மங்கள விக்ரஹத்தை த்யானிப்பவர்களுமான ஆஶ்ரிதர்காள், எந்தனக்கு - ஸர்வேஶ்வரனை எனக்கு, ஓர் உருவே ஈர் உருவாம்-ஒரு திவ்யாத்ம ஸ்வரூபமே ஆஶ்ரிதர்களுக்கு ப்ராப்யம் என்றும் ப்ராபகம் என்றும் சொல்லப்படுகிற இரண்டு ஆகாரத்துடன் கூடியதாக இருக்கிறது என்று, சிந்தியுங்கள் - த்யாநம் செய்யுங்கள், என திகழும் - என்று சொல்வது போல் ஒரு திருமேனியில் நராகாரம் ஸிம்ஹாகாரம் என்கிற இரண்டு ரூபத்துடன் விளங்குபவனையும் [இதற்கு நரசிங்கன் என்பதோடு அந்வயம்]. பேர் உருவம் இரணியனை - பெருத்த சரீரத்தை உடைத்தான ஹிரண்யாஸுரனை, பிணம் படவே கிழித்து உகந்த - பிராணனில்லாமல் போகும்படி சிந்நபிந்நமாக அவனுடலைக் கிழித்து ஆனந்தித்தவனையும் இருக்கும், ஆர் உருவ நரசிங்கன் - ['ஸர்வவ்யாபிநம் தேவம் நரஸிம்ஹமஹம் பஜே' என்று பெரியோர்கள் அநுஸந்தித்தபடியே] எல்லா வஸ்துக்களிலும் ந்ருஸிம்ஹ ரூபத்துடன் நிறைந்திருக்கும் ந்ருஸிம்ஹனுடைய, அடி இன்றி- திருவடிகளைத் தவிர, மற்று இலனே - வேறு உபாயமும் உபேயமும் இல்லாதவனாக இருக்கிறேன். [அவைகளே எனக்கு ப்ராபகமும் ப்ராப்யமும் என்றபடி]

கருத்து :—தன்னை த்யானிப்பவர்களுக்கு நற்கதியை அடைவிப்பவனும்தானே அடையப்படும் பயனும் தானே என்கிற இரண்டு ஆகாரமும் தன் ஒருவனிடத்திலேயே இருப்பதைத் தெரிவிப்பதற்காகத்தான் இந்த ந்ருஸிம்ஹாவதாரத்தில் ஒரே திருமேனியில் மநுஷ்யாகாரம் ஸிம்ஹாகாரம் இரண்டையும் கலந்து ஸேவை தந்தருளுகிறானே என்று சொல்லும்படியாக நரங்கலந்த சிங்கமாய் விளங்கும் ந்ருஸிம்ஹனுடைய திருவடிகளையே ப்ராபகமும் ப்ராப்யமுமாய்த் தீர்மானித்து ஶரணம் புகுவதே ஸர்வேஶ்வரனுக்கு உகந்த செயல் என்பதாம். [தொடரும்]

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

என்புருகும் அன்பு

——

[ஸ்ரீ. உப. S. T. ஸ்ரீநிவாஸாசார்யர் M.A., L.T. வித்வான், திருவையாறு]

'எல்லாம் பழைய காலம்! பண்டைய நாகரிகம்!' என்று சொல்லும்படி யாயிற்றே! ரமாகாந்தனது அகண்டமான க்ருபையை எண்ணி எண்ணித் தக்கவாறு வழிபடாமல் தன்வழிச் செல்லுகிறதே உலகம்! 'நான் செய்வதெல்லாம் ஸ்ரீமந்நாராயணனுக்கே' என்று தலை நிமிர்ந்து அநுஸந்திக்கக் கூடியவர் எத்தனை பெயர் அகப்படுவர்! நம் வாழ்க்கையைச் சற்றுத் திருப்பிப் பார்த்தால் நடுங்குகிறது. ஸ்வார்த்தபரதை மேலிட்டு க்யாதி லாப பூஜைகளையே பெரிதாய் எண்ணினோமே.

இருண்ட வானில் நக்ஷத்ரங்கள் மிளிர்கின்றன. இவ்விருள் தருமா ஞாலத்தில் ஆழ்வார்கள்போல் அச்சுதனைக் காதலித்து அன்பு பெருகியவர் இருந்தே வருகின்றனர். பிறந்தது முதல் வானேறப் போமளவும் ஸ்ரீ வாஸுதேவனுக்கே என்றிருப்பவர் தங்யர்களான சிலரே. "உந்தன்னோ டுற்றோமே யாவோ முனக்கேநா மாட்செய்வோம் மற்றைநங் காமங்கள் மாற்று" என்று அருளிய ஸ்ரீ பெரியாழ்வாரது திருமகளாரை எவ்வளவு பெயர் பின்பற்றக் கூடும்?

திருவரங்கத்திற்கு அப்பால், கங்கையிற் புனிதமாய காவேரிக் கரையில் இடையாற்றுக்குடி என்ற சிறிய ஸ்ரீ வைஷ்ணவ க்ராமம். இருண்ட தென்னஞ் சோலைகளுக் கிடையே—சலசல வென்று ஓடும் வாய்க்கால்களுக் கிடையே—வெண் சுதை வீடுகள் கொண்ட இக்ராமம் பொலிவுற்று நின்றது. இத்தூய சிற்றூரில் நம்பி என்று ப்ரஸித்தி பெற்ற ஒரு ஸ்ரீ வைஷ்ணவர் வாழ்ந்து வந்தார். காலில் நகம் முளைத்த நாள் முதலாகவே, 'உண்ணுஞ் சோறும் பருகு நீர் தின்னும் வெற்றிலையுமெல்லாம் கண்ணன்' என்றிருக்கும் உத்தமர் அவர். அரங்கா என்று ஆரேனும் சொன்னாலும் உள்ள முருகி அலமலந்து போவார். உயர்ந்த ஆக்ருதி. சிறந்த பொன் வண்ணம். பனி போன்ற ஆடை. நிலவு போன்ற திருமண்காப்பு. நரைத்துக் கம்பீரத்தோற்றம் தரும் சிகை. நம்பியின் திருவுருவம் ஸ்மரண மதுரமானது. வெகு தூரத்திலிருந்து வரும்பொழுதே 'ரங்கா! ரங்கா!' என்று அவர் போடும் மதுரத்வனி கேட்பார் உள்ளம் புகுந்து குளிரும். "வாஸுதேவ: ஸர்வம் இதி" என்றபடி திருவரங்கம் போவதும் வருவதும் திருவரங்க யாத்ரைக்காகவே இவ்வுலகில் ஜீவிப்பது போலவும் தோன்றினர். திருவரங்கத்தில் தான் திவ்யோத்ஸவங்களின் பெருமை சொல்லவேண்டிய தில்லை. "ஒரு தீர்த்தம் ப்ரஸா

தித்த இரவே திருமுளை ஆரம்பம்'' என்று சொல்வதுண்டே. நம் நம்பி ஒரு சிறு பிள்ளை போல் குதிப்பாராம். "நாளை கோடைத் திருநாள் ஆரம்பம்; இன்று பூச்சாற்று விழா அரங்க வல்லிக்கு'' என்று சொல்லிச் சொல்லி மகிழ்வார். 'அணியரங்க மாடுதுமோ தோழீ யென்னும்' அல்லவா? திருவரங்கம் சென்றால் மாட மாளிகைகளைப் பார்த்துப் பார்த்து மகிழ்வார். தான் ஆயிரந் தரம் கண்டு களித்த கோபுரங்களையும் கோபுர வாயில்களையும் ஆநந்தக் கண்ணீர் பெருக நோக்குவார். 'ஆவியே! அமுதே! அரங்கமாலே!' என்று அகமகிழ்வார். வீதிகளிற் புரளுவார். ப்ராகாரங்களில் துள்ளுவார். திருவரங்கனைக் கண்டு திகைப்பார். மூர்ச்சிப்பார். தேருவார். தேறுவார். 'என் திருவரங்கச் செல்வா!' என்று கூச்சலிடுவார். புறப்பாடு முழுவதும் பின் சென்று தாயைப் பிரியுங் கன்றைப்போற் பதறிப் பிரிவார். திருவிழாவைப் பற்றியுந் தேவாதி தேவனைப் பற்றியும் பிதற்றுவார்.

இப்படி எண்பது தூய வருடங்கள் சென்றன. பங்குனி மாதம் உத்தரத் திருநாள் துவக்கி விட்டனர். நம்பி எந்தத் திருவிழாவிலும் திருமுளை முதல் அவப்ருதம் வரையில் விடுவதில்லை. அந்த ஸமயம் அவர் தாப ஜ்வரமாய்ப் படுத்திருந்தார். கதறுகிறார். பிதற்றுகிறார். ''ஐயோ! இவ்வழுக் குடம்பின் வசமாகி அரங்கமாலைக் காணாது அழிகின்றேனே. என் அரங்கத் தின்னமுதே! உன்னைக் காணாது ஒருபகல் தரியேனே! வள்ளலே! வானவர் கோவே! அய்யகோ! நீ வீதியார வரும் மேன்மையைக் காணப் பெறாத பாவியானேனே!'' என்று தலையில் அடித்துக் கொண்டார். நான்கு நாட்களாயின. ஐந்து நாட்களாயின. ஆறு நாட்களு மாயின. நம்பி காலையில் கண்திறந்தார். பக்கலில் உள்ளவர்கள் 'திருமேனி எப்படி யிருக்கிறது?' என்றனர். நம்பி துயரமான புன்சிரிப்புடன் 'இன்று எத்தனை விழாக்களாயின?' என்றார். பக்கம் நின்றவர் 'இன்று ஏழாவது திருவிழா' என்றனர். மின்சார சக்தி கொண்டவர் போல் நம்பி எழுந்தார். ''இன்று ஏழாவதா! ஏழாவதா! அந்தோ கெட்டேன்! ஆறு நாள் என் அமுதைக் கண்டிலாத பாவியானேனே! 'ஷஷ்டாம் காலமநச்நதா:' என்றபடி நான் செய்த பாதகமும் ஸாஹஸமும் என்னவா யிருந்தன!'' என்றார். நோயின் மிகையால் அவர் உடல் நடுங்கியது. அவர் முகத்தில் உறுதி கூத்தாடியது. அவர் கண்களில் கண்ணீர் அருவி யெடுத்தது. இரண்டு ஸ்ரீ வைஷ்ணவர்கள் கைதாங்க, ஆர்வம் முன் தள்ள, அரங்கனது திவ்ய ஸங்கல்பமே ஊன்று கோலாக நம்பிகள் வடதிருக் காவேரியை எல்லையற்ற கஷ்டத்துடனும் அன்புடனும் கடந்தார். திருவரங்கக் கோபுரங்களைக் கைதொழுதார். உடலிற் சிறிதும் பல மில்லாவிடினும், அவரது எல்லையற்ற அன்பே அவர்க்கு ஓர் உணர்ச்சியும் உத்ஸாஹமும் பலமும் ஊட்டி வந்தது.

"திருவீதியில் அரங்கன் இன்று தன் உடனமர் காதலிமார்களுடன் ஸேவை ஸாதிப்பான். அதற்காகத்தான் இன்று எப்படியாயினும்

சென்றே தீரவேண்டு மென்று புறப்பட்டேன். இன்று என்னப்பன் பிடியிரண்டொடு கலப மொன்று பிணைந்ததுபோல் பேரழகுடன் வருவான். இன்று போறுப்பாரும் போறுப்பிப்பாரும் சேர்ந்த சேர்த்தி யல்லவா?'' என்றார். அவர் உடல் ஜ்வர வேகத்தால் நடுங்கியது. கையும் காலும் தள்ளாடின. கண்களில் அமாநுஷ ஒளி பிறங்கியது. ஸ்ரீ ரங்கராஜன் தன் தேவிமாராவார் திருமகள் மண்மகளுடன் திருவீதியில் ஸாயங்கால மஞ்சள் வெயிலில் கதிராயிர மிரவி கலந்தெரித்தா லொக்க நீண்முடியும் ஆபரணங்களும் மின்ன அசைந்தசைந்து, மறையவர் வாழ்த்த, வானவர் மலர் சொரிய, மாதரார் கதிரொளி தீபங் கலசமுட னேந்த, மங்கல வாத்யம் முழங்க வந்தான். நம்பி எதிர் சென்றார். கைகுவித்தார். அழகின் கனியை - அன்பின் வடிவை - ஆனந்த வெள்ளத்தை - ஆஶ்சர்ய நிதியைக் கண்டார். கைகளாரத் தொழுதார். "எந்தாய்! எந்தாய்! நின் திருமுளை காணப்பெறாது நீச உடலைப் பேணிக் கிடந்த நீசனேன் நின்முன் நிற்கும் பாக்யமும் பெற்றேன். திருமகள் செல்வா! பெருநிலக் கேள்வா! பீடுடைப் பிரமனைப் பெற்றதோர் பெம்மா! திருக் கண்டேன்; பொன்மேனி கண்டேன்; திகழுமருக்க னணிநிறமும் கண்டேன்; செருக்கிளரும் பொன்னாழி கண்டேன்; புரிசங்கங் கைக்கண்டேன்; கமலத் திருக்கண்ணும் கனிவாயுங் காதிணையும் அமலத் திருவுதரமுங் கண்டேன். என் இன்பவடிவே! ஆழிவண்ணா!'' என்று தேம்பித் தேம்பிக் குழறி அழுதார். திருவரங்கன் முன் சென்றான். நம்பி தொடர்ந்தார். வழியில் களைப்பு மேலிட்டது. சற்று நின்றார். வெகு தூரத்தில் இறைவனது எழிலுடை வாத்யங்கள் கேட்டன. களைப்பைச் சிறிதும் பொறாராய்ச் சற்று வேகமாக நடக்கக் கீழே சாய்ந்தார். நாச்சியார் திருக்கோபுரத்திற்குச் சற்று வடக்கே திருவீதியிலேயே தளர்ந்து வீழ்ந்தார். "திருவரங்கத்தொரு செல்வீ! சரணம் சரணம்'' என்று கைகுவித்தார். அவர் திருக்கண்கள் மூடின. வானில் வானவர் ஈட்டம் ஸாம கோஷத்துடன் குழுமியது. குடந்தையர் கோவலன் குடியடியாரை எடுத்துச் செல்ல வரும் ஆதி வாஹிகர், நம்பியை அந்தமில் பேரின்ப உலகுக்கு அழைத்துச் சென்றனர். வைத்த கண் வாங்காது, அரங்கனைப் பார்த்த வண்ணம் மனமில்லாது சென்றார் நம்பி. வாசகர்களே! இப்படி என்புருக, ஶ்ரிப:பதியின் சரணாரவிந்தங்களிற் செய்யும் அன்பன்றோ அன்பு. இவ்விடையாற்றுக்குடி நம்பியை எந்த ஸ்ரீ வைஷ்ணவன் தான் மறக்க முடியும்?

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீமதே ஸ்ரீஶடகோப ராமாநுஜ யதீந்த்ர மஹாதேஶிகாய நம:

ஸ்ரீ ந்ருஸிம்ஹனிடம் ஐயங்காரின் ஈடுபாடு

“ திருமந்திர மில்லை சங்காழி யில்லை திரும ணில்லை
தருமந்திர மொன்றுஞ் செய்தறியீர் செம்பொற் றூனவனை
மருமந் திரங்கப் பிறந்தான் வடமலை வாரஞ் செல்லீர்
கருமந் திரண்டதை யெத்தாற் களையக் கருதிதிரே.”

(இதன் பொருள்.) [ஏழை மாந்தர்காள்! உங்கள் பக்கல்] பெரிய திருமந்த்ரம் [எனப்படுகிற திருவஷ்டாக்ஷர மஹா மந்த்ரம்] இல்லை; சங்க சக்ர முத்ரையில்லை; திருமண் கர்ப்பு மில்லை; [சரணாகதி] தருமத்தை நிலையாகச் செய்தீரில்லை; சிவந்த பொன்னிறமுள்ள இரணியாசுரனை [அவன்] மார்பு வருந்த [நரசிங்கமூர்த்தியாய்ப்] பிளந்திட்டவனை எம்பெருமானுடைய [ஸ்ரீ அஹோபில] மலையின் அடிவாரத்திலேனும் சென்றீரில்லை; [இத்தன்மையரான நீங்கள் இவற்றில் ஒன்றேனும் செய்யாமல், மலைபோலப் பெருந் தொகுதியாகக் குவிந்த] திரண்ட கருமத்தை எவ்வழியால் போக்க நினைக்கிறீர்கள்! என்பதாம்.

(கருத்து.) பேதைச் சனங்களே! இனியேனும் நீங்கள், ஸ்ரீ வைஷ்ணவ லக்ஷணமாய், உஜ்ஜீவநோபாயமாகிய திருமந்த்ரோபதேஶத்தையும், திருவிலச்சினையையும் த்வாதஶோர்த்வ புண்டரத்தையும் நல்லாசிரியர் அருளால் பெற்று, துஷ்ட நிக்ரஹ ஶிஷ்ட பரிபாலந சீலனை [ஹிரண்யாசுரனைச் சங்கரித்துப் பிரகலாதாழ்வானைக் காத்தருளினவனை] எம்பெருமானிடத்தில் [ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனிடத்தில்] ப்ரபத்தி பண்ணிக்கொண்டு வாழ்வீர்கள் என்று அறிவுறுத்தியவாறும்.

(குறிப்பு.) திருமந்த்ரம்—திருவஷ்டாக்ஷர மஹா மந்த்ரம்; இது, மற்றை த்வயம் சரம ஶ்லோகங்களுக்கு உபலக்ஷணம். திருவிலச்சினை—ஸமாஶ்ரயணம்; இது பஞ்ச ஸம்ஸ்கார மெனவும் படும். பஞ்ச ஸம்ஸ்காரங்களாவன: 1. தாபம்—சங்க சக்கரங்களைத் தீயிற் காய்ச்சித் தோள்களில் ஆசார்யர்களைக் கொண்டு ஒற்றுவித்தல்; [“தீயிற் பொலிகின்ற செஞ்சுடராழி திகழ்திருச் சக்கரத்தின் கோயிற் பொறியாலே ஒற்றுண்டு நிற்றல்.”] 2. புண்டரம்—கேசவாதி த்வாதச நாமங்களை முறையே சொல்லி உடம்பிற் பன்னிரண்டு இடத்தில் திருமண் காப்பணிதல். 3. மந்த்ரம்—திருவஷ்டாக்ஷரம் முதலிய மஹா மந்த்ரங்களை உபதேச மூலமாகப் பெறுதல். 4. நாமம்—தாஸ்ய நாமம்: [அடிமைப் பெயரிடப் பெறுதல்.] 5. யாகம்—திருவாராதநம் அருளப் பெறுதல்.

வையத்து வாழ்வீர்காள்! பிறப்பு அநாதியாய் வருதலால், உயிரால் அளவின்றி ஈட்டப்பட்ட வினைகளின் பயன்கள் மலைபோலப் பெருந் தொகுதியாகக் குவிந்துள்ளதனால், அவை கழிதற்கு ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் திருவருளால் அவன் ஸந்நிதியில் பஞ்ச ஸம்ஸ்காரம் ப்ரபத்தி ஆகிய இவைகளைச் செய்து கொள்ளுதல், அவன் திருவுள்ளமுவந்து வீற்றிருக்கும் இடமாகிய அஹோபில க்ஷேத்ரம் சென்று சேர்தல் முதலியன செய்தாலன்றி உயிர் உய்தற்கு வேறு வழியில்லை யென்பது இச்செய்யுளின் திரண்ட பொருள்.

[இச்செய்யுள், திவ்யகவி பிள்ளைப்பெருமாளையங்காரால் அஷ்ட ப்ரபந்தத்தில் திருவேங்கடத் தந்தாதியில் [பாசுரம் 99] ஸ்ரீ திருவேங்கடமுடையான் விஷயமாகப் பாடப்பட்டதெனினும், தமது இருப்பிடம் விட்டுச் சலியாமல் தாம் எழுந்தருளி யிருக்கும் இடத்தில் சேதநர்களைக் காணிக்கை ப்ரார்த்தனைப் பொருள்களுடன் வரவழைத்துக்கொண்டு அருள்புரியும் திருவேங்கடமுடையானைப் போலன்றிக்கே, ஒரு தூணில் திருவவதரித்து, கேவலம் சேதநகோடிகளை உய்விக்கக் கருதி அவர்க ளது ஆகிஞ்சந்யத்தையே பெரிதாகத் திருவுள்ளம்பற்றி ப்ரதி க்ராம நகரம்தோறும் ஸஞ்சரிப்பதற்கென்றே பாதுகை சாத்திக்கொண்டு நாடெங்கும் எழுந்தருளி ரக்ஷித்து வரும் ஸ்ரீ ந்ருஸிம்ஹ மூர்த்தி, திருவேங்கடமுடையானை மங்களாசாஸநம் செய்யுங் காலத்தில் அந்தத் திவ்ய மங்கள விக்ரஹத்தில் ஐயங்காருடைய ஞானக் கண்ணுக்குப் புலப்பட்டே இப்பாசுரம் அவதரித்ததென்று சொல்லவேண்டும். ஷை பாசுரத்தின் விஷய வைலக்ஷண்யத்தையும் பொருளழகையும் சொல்லாற்றலையும் ஊன்றி நோக் குமிடத்து, 'இது திருவேங்கடமுடையான் விஷயமான பாசுரம் என்பதினும் (ஸ்ரீ அஹோ பில) ந்ருஸிம்ஹன் விஷயமான பாசுரம் எனல் மிகப் பொருத்தமாகும் என்பது ரஸிகர்கள் நோக்கத் தக்கது. இதற்கடி : ஸ்ரீ வைஷ்ணவ லக்ஷணங்களான பஞ்ச ஸம்ஸ்காரம் முதலியன ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் ஸந்நிதியில் இன்றும் அநுஸ்யூத மாய் நடைபெறுதலும், "செம்பொற் றுனவனை மருமந் திரங்கப் பிளந்தான் வடமலை வாரம் செல்லீர்" எனும் சொற்றொடர்ப் போக்கின் வலிமையுமேயாம். மேலும், "பந்தனை தீர, அந்தியம்போதி லரியுருவாகி யரியை அழித்தவனைப் பல்லாண்டு பல்லாயிரத்தாண் டென்று பாடுதுமே" எனும் ஆழ்வார் அருளிச் செயலும் ஈண்டு அநுஸந்தேயம்.]

"ஆறே டிரெட்டுத் தொண்டை" என்று தொண்டை நன்னாட்டில் விளங்கும் இருபத்திரண்டு திருப்பதிகளுள் காஞ்சீபுரத்தைச் சேர்ந்த திருவேளுக்கையில் எழுந் தருளியுள்ள ஆளரி (நரங்கலந்த சிங்கம்) விஷயமாய் ஐயங்கார் பாசுரம் அருளும் போது, "அவ் வெம்பெருமான் துஷ்ட நிக்ரஹ ஶிஷ்ட பரிபாலநத்துக் கென்றே அவதரித்தவ னென்றும், அவன் திருவடியில் ஆட்படாதார்க்கு உய்யும் வகையில்லை" என்றும் பொருள்பட அருளிய பாசுரம் படிப்போரது நெஞ்சை யுருக்கும். அன்றி யும், அவன் திருவடிகட்கு ஆளான ப்ரஹ்லாதனது உய்யும் திறத்தையும், அவன் திருவடிகட்கு ஆளாகாத ஹிரண்யன் பட்ட பாட்டையும் 'வேற்றுப் பொருள் வைப்பணி' என்னும் அர்த்தாந்தர ந்யாஸாலங்காரத்தில் பாசுரத்தில் அமைத்த அழகு அநாத்ருஶமாகும் : அச்செய்யுள் வருமாறு :—

"தனக்குரிய ளுயமைந்த தானவர்கோன் கெட்டான்
உனக்குரிய ளுயமைந்த னுய்ந்தான்—நினைக்குங்கால்
வேளுக்கை யாளரியே! வேறுதவி யுண்டோவுன்
தாளுக்கா ளாகாத வர்க்கு." நூற்றெட்டுத் திருப்பதி யந்தாதி: 77.

இத்துணையும் கூறியவாற்ருல், ஸ்ரீ பிள்ளைப் பெருமாளையங்கார்க்கு ஸ்ரீ ந்ரு ஸிம்ஹனிடம் உள்ள விலக்ஷணமான ஈடுபாடும், அசஞ்சலமான பக்தியும் ஈடு மெடுப் பும் இல்லாதன வென்பது தெள்ளிதில் விளங்குகின்ற தல்லவா !

—ஒரகடம் கோ. ஸுதர்ஶந தாஸன்.

ஶ்ரீ:

ஶ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

ஸாம்ய புத்தி

[ஸ்ரீ. உப. புத்தங்கோட்டகம் ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி,
ஸ்ரீ அஹோபில மடத்து ஆஸ்தாந வித்வான்.]

"வித்யாவிநயஸம்பந்நே ப்ராஹ்மணே கவி ஹஸ்திநி ।
ஶுநி சைவ ஶ்வபாகே ச பண்டிதா: ஸமதர்ஶிந: ॥"

என்பது ஸ்ரீபகவத்கீதையில் 5-வது அத்யாத்திலுள்ள ஒரு ஶ்லோகம். இந்த ஶ்லோகத்தில், வித்யை வணக்கம் முதலிய குணங்களையுடைய ப்ராம்ஹண னிடத்திலும், இவையில்லாத ப்ராம்ஹண னிடத்திலும், பசுவினிடத்திலும், யானையினிடத்திலும், நாயினிடத்திலும், ஶ்வபாகன் என்கிற சண்டாள ஜாதியினிடத்திலும், பண்டிதர்கள் ஸமாநமான புத்தியை யுடையவர்களாக இருப்பார்கள் என்றும்,

"இஹைவ தைர்ஜித: ஸர்கோ யேஷாம் ஸாம்யே ஸ்திதம் மந: ॥"

என்று எந்த மனிதர்களுக்கு இங்குச்சொல்லப்பட்ட ஸாம்ய புத்தி இருக்கிறதோ, அவர்கள் இவ்வுலகத்திலே ஸம்ஸாரத்தை ஜயித்தவர்களாக ஆகிறார்கள் என்றும் சொல்லியிருக்கிறது. இதற்கு மேல் அத்யாயங்களிலும் "ஸர்வத்ர ஸமபுத்தய: தே ப்ராப்நுவந்தி மாமேவ" என்று ஸம புத்தியுடைய மனிதர்களே பகவானுடைய ஸாயுஜ்யத்தை யடைவதாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. இதை இக்காலத்துச் சில நாகரிகர் பார்த்து, ப்ராம்ஹணன் சண்டாளன் என்கிற ஜாதிபேதங்களை அறவே ஒழித்து மனிதர்கள் எல்லோரும் ஒன்றாகக் கலந்திருக்கவேண்டியதுதான் கீதாசார்யனுக்கு ஸம்மத மென்றும், அப்படி யிருப்பவர்களுக்குத்தான் மோக்ஷ முண்டென்றும் அர்த்தம் பண்ணிக்கொண்டு அதனை ஆங்காங்கு உபதேசித்தும் வருகிறார்கள். அதனால் நமது தேசத்தில் அநாதி காலமாக அநுஷ்டிக்கப்பட்டுவந்த வர்ணாஶ்ரம தர்மங்கள் நாளுக்குநாள் நாசமடைந்து போவதை நாம் பார்த்துவருகிறோம்.

கலியுக ஸ்வபாவத்தினால் நமது ஶாஸ்த்ரங்களிலும், அவைகளில் சொல்லப்படும் வர்ணாஶ்ரம தர்மாநுஷ்டாநங்களிலும், மனிதர்களுக்கு ஶ்ரத்தை யில்லாமல் நாஸ்திக்யமே வ்ருத்தியடைந்து வருகிற இக்காலத்தில், நமது ஸத்யமான உபதேசம் பயன் பெறாவிட்டாலும், தர்ம ஸ்தாபநத்திற்காக இங்கு அவதரித்த ஸ்ரீ கீதாசார்யன் தலையில் இந்தப் பெரும் பழியைச் சுமத்துவதை ஸஹிக்காத நாம், ஷெ கீதா ஶ்லோகத்திற்கு இவர்கள் சொல்வது சரியான பொருளல்ல வென்பதையும், இந்த விபரீதார்த்தத்தைக் அங்கீகரித்தால் உண்டாகும் அநர்த்தங்களையும் காட்டுவதோடு, கீதாசார்யனுடைய உண்மையான அபிப்ராயத்தையும் ஆஸ்திகர்கள் அறியும்படி தெரிவிக்கிறோம். தவிர: முதலில் இந்த ஶ்லோ

கத்திற்கு இவர்கள் சொல்லுகிற அர்த்தத்தை ஒப்புக்கொள்வதால் ஸம்ப விக்கும் அநர்த்தங்களைத் தெரிவிக்கிறோம்.

பகவத் கீதை ஐந்தாவது அத்யாயத்தி லிருக்கிற "வித்யா விநய-ஸம்பன்னே" என்கிற இந்த ஸ்லோகத்தில், ப்ராம்ஹணன் பசு யானை நாய் சண்டாளன் இவர்களை ஸமாநமாகப் பார்க்கவேணு மென்று சொல்லி யிருப்பதற்கு, இவ்வைந்து ப்ராணிகளையும் ஸர்வ விதத்திலும் ஸமாந மாக நினைக்கவேணு மென்று சொல்லுகிற பக்ஷத்தில், இங்கு நாயையும் பசுவையும் ஸமாநமாகப் பார்க்கச் சொல்லி யிருப்பதால், பசுவின் பாலுக்குப் பதிலாக நாயின் பாலை உபயோகப்படுத்த வேண்டியதாக ஸம்பவிக்கும். தன் இஷ்ட தேவதைக்கு நாயினுடைய பாலினாலும் அபிஷேகம் பண்ணவேண்டி வரும். கோமயத்தினால் சுத்தி பண்ண வேண்டிய விடங்களை நாயின் சாணியினால் சுத்தி செய்யும்படி நேரிடும். [அப்படி அசுத்தியைப் போக்கக்கூடிய சக்தியைப் பசுவின் சாணிக்கு ஒப்புக்கொண்டிருப்பதுபோல, நாயின் விஷ்டைக்கு அசுத்தியைப் போக்கடிக்கக்கூடிய சக்தி இருப்பதாக வஸ்துக்களினுடைய குணங்களை விமர்ஸிக்கிற லௌகிகர்கள் அங்கீகரிக்கிறார்களா வென்பது தெரிய வில்லை.] ஸ்ராத்த திநத்தில் ப்ராம்ஹணனுக்கு அந்ந மிடுவதுபோல சண்டாளனுக்கும் நாய்க்கும் அந்ந மிடுவதும் தர்மமாக ஸம்பவிக்கும். அது ஸம்மத மென்றால், ஸ்ராத்த காலத்தில் நாய் சண்டாளன் இவர்களைப் பார்த்தால்கூட ஸ்ராத்தம் நஷ்டமாகு மென்கிற ஸாஸ்த்ரம் விரோதிக்கும்.

"சண்டாலஸ்ச வராஹஸ்ச குக்குட: ஸ்வா ததைவ ச।
ரஜஸ்வலா ச ஷண்டஸ்ச நேக்ஷேரந்நஸ்நதோ த்விஜாந்॥

[மநு ஸ்ம்ருதி : அத். 3. ஸ்லோ. 239]

[சண்டாளன், பன்றி, கோழி, நாய், பஹிஷ்டா ஸ்த்ரீ, நபும்ஸகன் இவர்கள், ப்ராம்ஹண க்ஷத்ரிய வைஸ்யர்கள் சாப்பிடும் பொழுது பார்க்கக்கூடாது.] மற்றும்:

"ஹோமே ப்ரதாநே போஜ்யே ச யதேபிரபிவீக்ஷ்யதே।
தைவே கர்மணி பித்ர்யே வா தத்கச்சத்யயதாததம்॥"

[அக்நி ஹோத்ரம், கோதாநம், ப்ராம்ஹண போஜநம், யாகம், ஸ்ராத்தம் இவை முதலிய வைதிக கார்யங்கள், சண்டாளன் பன்றி நாய் முதலியவைகளினால் பார்க்கப்பட்டால், அந்த வைதிக கார்யங்கள் பயனற்றவையாகப் போய்விடும்] என்று சொல்லி யிருப்பதால் ச்ராத் தம் நஷ்டமாகும். இதுபோலவே கீதையில், "ஸாம்யேஷ்வபி ச பாபேஷு ஸமபுத்திர்விஸிஷ்யதே" என்றிருப்பதால், ஸ்வர்ண ஸ்தேயம் ஸுராபாநம் முதலிய பஞ்ச மஹா பாதகங்களைச் செய்கிறவர்களையும் உத்தம தர்மமான பகவதாராதநம் முதலியவற்றைப் பண்ணுகிறவர்களை யும் ஸமமாக நினைக்கவும் நேரிடும். அன்றியும் அப்பாபிகளைப் பூஜிக்க

வும் வேண்டிவரும். அப்பொழுது ஆஸுர ஸ்வபாவர்களான பாபிகளை அதமமான கதியை அடையும்படி செய்வதாகக் கீதையிலேயே பகவான் சொல்லி யிருப்பது விரோதிக்கும். கீதையில் "ஸமலோஷ்டாஶ்மகாஞ்சந:" என்று தங்கத்தையும் மண்ணுங்கட்டியையும் ஸமமாக நினைக்கும்படி விதித்திருப்பதால், மண்ணுங்கட்டியைத் தாநம் பண்ணினுல் ஸ்வர்ண தாந பல முண்டாகவேணும். தவிர: ஒரு பவுன் எடையுள்ள மண்ணுங்கட்டிக்குப் பவுனுடைய க்ரயத் தொகையைக் கொடுக்கவேண்டி வரும். "ஸவபூதஸஹிதே ரதா:," என்று கீதையில் பலதடவை சொல்லி யிருப்பதால், பெற்றதாய், தன்னுடைய பெண், மனைவி, மற்றைப் பந்துக்கள் ஆகிய இவர்களையும் எல்லா விதத்தினுலும் ஸமமாக நினைத்து எல்லாக் கார்யங்களையும் அநுஷ்டிக்கவேண்டி வரும். இப்படியே "ஸுஹ்ருந்மித்ராயுதாஸீந" என்கிற ஸ்லோகத்தில் ஶத்ரு மித்ரர்களை ஸமாநமாக நினைக்க விதித்திருப்பதால், தன்னுடைய தநங்களை அபஹரித்தவர்களையும் பத்நியை அபஹரித்தவர்களையும் ஸுஹ்ருத்துக்களாக நினைக்கவேண்டியதால், ஸொத்தை அபஹரித்த துர்யோதநனை ஹிம்ஸித்ததும், பத்நியை அபஹரித்த ராவணனை ஹிம்ஸித்ததும் அதர்மமாகி, ராமாயண பாரதங்களில் சொல்லப்படுகிற ராமன் பாண்டவர்கள் செய்த யுத்தங்கள் அதர்மங்களாகும். அப்பொழுது அர்ஜுநனை யுத்தம் பண்ணும்படி கீதாசார்யன் உபதேசிப்பதும், யுத்தத்தைத் தர்மமென்று சொன்னதும் பிசகாக முடியும். அப்படியே ஒரு தேசத்து ஸொத்துக்களை அபஹரிக்கும் மற்றொரு தேசத்தார்களையும் ஸ்நேஹிதர்களாகப் பாவிக்கவேண்டியதால், அவர்களை த்வேஷிப்பதும் பிசகாக முடியும். இதெல்லா மிருக்க: எல்லோரையும் ஸமமாகப் பார்க்க வேணுமென்று சொல்லுகிறவர்கள், ஸாம்ய தர்ஶநம் கூடாதென்று சொல்லுகிறவர்களையும் அவர்களுடைய விபரீத வார்த்தைகளையும் கூடத் தங்களோடும் தங்களுடைய வார்த்தைகளோடும் ஸமாநமாகப் பாவிக்க வேண்டியதாகையால், ப்ரதிவாதிகளுடைய வார்த்தைகளையும் தாங்கள் அங்கீகரிக்கவேண்டியதாக ஸம்பவிப்பதால், தங்களுக்கு இஷ்டமான ஸாம்ய தர்ஶநத்தை அடியோடு விட்டுவிடவேண்டி வரு மென்பதை முக்யமாகக் கவனிக்கவேணும்.

ஆகையினுல் பகவத்கீதை ஐந்தாவது அத்யாயத்தி லிருக்கும், 'வித்யாவிநயஸம்பந்நே' என்கிற ஸ்லோகத்தினுல் சொல்லப்படுகிற ஸாம்ய தர்ஶநமானது ஸர்வ ப்ரகார ஸாம்யமல்லவென்று அறியவேண்டும். ஏனெனில்: ஷ ஐந்து ப்ராணிகளுக்கும் அந்தந்த உருவங்களிலும் குணங்களிலும் கார்யங்களிலும் ப்ரத்யக்ஷ ஸித்தங்களான வேறுபாடுக ளிருப்பதால், ஸர்வப்ரகாரத்தினுலும் ஸாம்யம் சொல்வது ஸம்பாவித மாகாது. ஆனல் இங்கு சொல்லப்படுகிற ஸாம்ய தர்ஶநம் எதுவெனில், இந்த ப்ராணிகளுடைய தேஹங்கள் வெவ்வேறு விதங்களாக இருந்தாலும், எல்லாத் தேஹத்தினுள்ளே இருக்கிற ஜீவாத்மாக்க ளெல்

லாம் ஒரே விதமாக இருப்பதால், அவ்வாத்மாக்கள் எல்லாம் ஸமாநங்கள் என்று பண்டிதர்கள் நினைப்பார்கள் என்பதே. ஆகையினால்தான் 'நிர்தோஷம் ஹி ஸமம் ப்ரஹ்ம' என்று மேல் ஸ்லோகத்தில் ஆத்ம ஸ்வரூபம் ஸமாநமென்று சொல்லியிருக்கிறது. ஆகையினால் இங்கு சொல்லப்படுகிற ஸாம்ய தர்ஸநமானது,

"நிஸ்ஸங்கோ நிர்மமோ நிர்த்வ: க்ஷேத்ரஜ்ஞோ நிர்மலாத்மக: |
ஸர்வஜ்ஞாநமயச்சைவ ஸ ஸர்வத்ர வ்யவஸ்தித: ||"

என்று அநுகீதையில் ஸமன் என்கிற ஆத்ம விஷயகம்; அது தேஹத்தைப்பற்றின தல்ல. ஆகவே இந்த ஸ்லோகத்தைக் கொண்டு சிலர் ப்ராம்ஹணனையும் தீண்டாதாரையும் ஒரு ஜாதியாக்கிவிட ஆசைப்படுவது ஸாத்யமன்று. ஆதலின் நமது நாகரிகர்கள் சொல்லுகிற ஸாம்யபுத்தி அங்கீகரிக்கத்தக்கதல்ல. அவ்வாறு அதனை அங்கீகரிப்பதால் ஸம்பவிக்கக்கூடிய விபரீதங்களில் சிலவற்றை இங்கு உதாஹரித்தோம்.

இனி: இவர்கள் சொல்லுகிற ஸாம்ய தர்ஸநம் ஸம்பாவிதமல்லவென்பதையும் விஸ்தாரமாகக் காட்டுகிறோம். பகவத் கீதையில் ஆரம்பம் முதல் முடிவு வரையில் ப்ராம்ஹண்யாதி நான்கு விதங்களான ஜாதி ஸ்வரூபங்களும், அந்தந்த ஜாதிக்கு விதிக்கப்பட்ட ஆசார பேதங்களும், அவஸ்யம் அநுஷ்டிக்கப்பட வேண்டியவைகளாகக் குறிப்பிட்டுச் சொல்லப்பட்டிருப்பதால், இந்த ஸாமாந்யமான ஸாம்ய விதியானது ஷ ஜாதி பேதங்களையும் ஆசார பேதங்களையும் பாதித்துவிட ஸக்தியுள்ளதாக மாட்டாது. விசேஷ விதிகளினால்தான் ஸாமாந்ய விதிகள் பாதிக்கப்படும் என்கிற விஷயம் பண்டிதர்களால் அங்கீகரிக்கப்பட்டது. பகவத் கீதையில் முதல் அத்யாயத்தில் ஸ்த்ரீகளுடைய வ்யபிசார தோஷத்தினால் ஸாங்கர்ய மென்கிற ஜாதிகளுடைய கலப்பு உண்டாகுமென்றும், அப்படிப்பட்ட ஜாதிகளின் கலப்பை உண்டாக்கினவர்களும் கலந்து உண்டானவர்களும் நரகத்தில் எப்பொழுதும் இருக்கவேண்டிவரு மென்றும், அப்படிக் கலந்த ஜாதிகள் செய்யும் ஸ்ராத்தங்கள் வ்யர்த்தங்களாகையால் அவர்களுடைய பித்ருக்களுக்கும் புண்ய லோக வாஸம் போய்விடுமென்றும் சொல்லி யிருப்பதால், எல்லா மனிதர்களும் தம் தம் ஜாதியைவிட்டு ஒரே ஜாதியாக ஆகும்படியும் மற்றை ஜாதிகளோடு ஸம்பந்தம் செய்து கொள்வது கூடாதென்றும் ஏற்படுகின்றதல்லவா? இந்த ஸாங்கர்யம் கூடாதென்பதை மநு,

"பரதாராபிமர்ஶேஷு ப்ரவ்ருத்தாந் ந்ருந் மஹீபதி: |
உத்வேஜநகரைர்தண்டைஸ்சிந்நயித்வா ப்ரவாஸயேத் ||"

[மநு. அத். 8]

[அரசன் பிறருடைய பத்னிகளோடு புணர்கிறவர்களைக் காது மூக்கு முதலிய அங்கங்களை அறுத்துத் தன் ராஜ்யத்தை விட்டு வெளியே

போக்கிவிட வேண்டியது] என்று சொல்லுகிறார். அதோடு: அதனால் உண்டாகும் கஷ்டத்தை,

> "தஸ்ய ஸாங்கர்யதோ ஹி லோகஸ்ய ஜாயதே வர்ணஸங்கர꞉ |
> யேந மூலஹரோऽயம் பூத்வா நாஶாய கல்பதே ||"

என்று சொல்லுகிறார்.

பரதார கமநத்தினால் ஜாதி கலந்து போவதான ஸாங்கர்ய முண்டாகும். இந்த ஸங்கர ஜாதியான மனிதனும், கெட்ட ஸ்த்ரீயைப் பத்நீயாக வைத்துக் கொண்டிருக்கிற மனிதனும், செய்கிற புண்ய கார்யங்களுக்குப் பயனில்லாததினால், அந்த மனிதர்களால் செய்யப்படுகிற ஹோமங்கள், "அக்நௌ ப்ராஸ்தாஹுதி꞉ ஸம்யகாதித்யமுபதிஷ்டதே | ஆதித்யாஜ்ஜாயதே வ்ருஷ்டி꞉ ||" என்றும், 'யஜ்ஞாத்பவதி பர்ஜந்ய꞉' என்றும் சொல்லுகிற உலக க்ஷேமத்துக்கு முக்ய காரணமான மழையை உண்டுபண்ண மாட்டா. ஆகவே: உலகத்திற்குக் காரணமான மழை பெய்வதைக் கெடுக்கிற பாபமுண்டாகி, அதனால் ஸர்வ ஜநங்களும் நாசத்தை யடையும். இவ்வாறு ஸாங்கர்யத்தை இவ்வுலகத்தின் நாசத்திற்குக் காரணமாகச் சொல்லியிருக்கிறது. புருஷஸூக்தத்தில், "ப்ராஹ்மணோऽஸ்ய முகமாஸீத்" என்று தொடங்கி ப்ரம்ஹ தேவனுடைய முகத்திலிருந்து ப்ராம்ஹண ஜாதியும், புஜங்களிலிருந்து க்ஷத்ரிய ஜாதியும், துடையிலிருந்து வைஶ்ய ஜாதியும், கால்களிலிருந்து நான்காவது ஜாதியும் உண்டானதாகச் சொல்லி யிருக்கிறது. இவ்விஷயம் பாத்ம ஸம்ஹிதையில்,

> "ஸத்வோத்ரிக்தேऽஸ்ருஜத் விப்ராந் தேவதோ ப்ரியதா நாரீ꞉ |
> ரஜோ குணேऽதிஶயிதே பாஹுப்யாம் க்ஷத்ரியாம்ஸ்ததா ||
> ஊருப்யாம் குணஸாம்யே து வைஶ்யஜாதீயமாநவாந் |
> தமோ குணேऽதிகே பத்ப்யாம் ஶூத்ரஜாதீயமாநவாந் ||"

[ஸத்வம், ரஜஸ், தமஸ் என்கிற மூன்று குணங்களையுடைய பஞ்சபூத மயமான ப்ரம்ஹாவினுடைய சரீரத்தில் ஸத்வகுணம் அதிகமான ஸமயத்தில் முகத்திலிருந்து ப்ராம்ஹண ஸ்த்ரீ புருஷர்களையும், ரஜோகுணம் அதிகமான ஸமயத்தில் பாஹுக்களிலிருந்து க்ஷத்ரிய ஸ்த்ரீ புருஷர்களையும், ஸத்வ ரஜஸ் தமோ குணங்கள் ஸமமாக இருந்த ஸமயத்தில் துடையிலிருந்து வைஶ்ய ஸ்த்ரீ புருஷர்களையும், தமோ குணம் அதிகமான ஸமயத்தில் காலிலிருந்து நான்காவது வர்ணத்தையும் ஸ்ருஷ்டித்தார்] என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதை அநுஸரித்துக் கீதை நான்காவது அத்யாயத்தில், "சாதுர்வர்ண்யம் மயா ஸ்ருஷ்டம் குணகர்மவிபாகஶ꞉ ||" என்று ஸத்வ ரஜஸ் தமோ குணங்களைக் கொண்டு நான்கு ஜாதிகளையும் ஸ்ருஷ்டித்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

“𑌮𑌾𑌂 𑌹𑌿 𑌪𑌾𑌰𑍍𑌥 𑌵𑍍𑌯𑌪𑌾𑌶𑍍𑌰𑌿𑌤𑍍𑌯 𑌯𑍇𑌽𑌪𑌿 𑌸𑍍𑌯𑍁𑌃 𑌪𑌾𑌪𑌯𑍋𑌨𑌯𑌃 ।
“𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌯𑍋 𑌵𑍈𑌶𑍍𑌯𑌾𑌸𑍍𑌤𑌥𑌾 𑌶𑍂𑌦𑍍𑌰𑌾𑌸𑍍𑌤𑍇𑌽𑌪𑌿 𑌯𑌾𑌨𑍍𑌤𑌿 𑌪𑌰𑌾𑌂 𑌗𑌤𑌿𑌮𑍍 ।
𑌕𑌿𑌂 𑌪𑍁𑌨𑌰𑍍𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌾𑌃 𑌪𑍁𑌣𑍍𑌯𑌾𑌃 𑌭𑌕𑍍𑌤𑌾 𑌰𑌾𑌜𑌰𑍍𑌷𑌯𑌸𑍍𑌤𑌥𑌾 ॥”

[கீதை அத். 9]

என்கிற ஶ்லோகங்களினால் புண்ய கர்மத்தினால் உண்டாகிற ப்ராம்ஹணாதி சரீர ஜாதிகள் வேறென்றும், பாப கர்மங்களினால் உண்டாகிற ஸ்த்ரீகள் முதலான சரீர ஜாதிகள் வேறென்றும் வ்யக்தமாகச் சொல்லப் பட்டிருக்கிறது. இதுபோலவே 18-வது அத்யாயத்தில், “𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣 𑌕𑍍𑌷𑌤𑍍𑌰𑌿𑌯𑌵𑌿𑌶𑌾𑌂” என்று தொடங்கி ஸத்வம் ரஜஸ் தமஸ் என்கிற குணங்களின் தாரதம்யங்களால் உண்டாகிற நான்கு ஜாதி பேதங்களையும், நான்கு ஜாதிகள் செய்யவேண்டிய கார்யங்களின் வேறுபாட்டையும் வ்யக்தமாகச் சொல்லுவதோடு, ஒவ்வொரு மனிதனும் தன்தன் ஜாதிக்கு விதிக்கப்பட்ட கர்மங்களினால்தான் ஈஶ்வரனை ஆராதிக்கவேணுமென்றும், ஒரு ஜாதியில் பிறந்தவன் மற்றொரு ஜாதி மனிதனுடைய தர்மத்தை அநுஷ்டிக்கக்கூடாதென்றும், ஒருவன் மற்றொரு ஜாதி மனிதனுடைய தர்மத்தை அநுஷ்டித்தால் நரகம் ஸம்பவிக்குமென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இவ் விஷயம்

“𑌶𑍍𑌰𑍇𑌯𑌾𑌨𑍍𑌸𑍍𑌵𑌧𑌰𑍍𑌮𑍋 𑌵𑌿𑌗𑍁𑌣𑌃 𑌪𑌰𑌧𑌰𑍍𑌮𑌾𑌤𑍍𑌸𑍍𑌵𑌨𑍁𑌷𑍍𑌠𑌿𑌤𑌾𑌤𑍍 ।
𑌸𑍍𑌵𑌧𑌰𑍍𑌮𑍇 𑌨𑌿𑌧𑌨𑌂 𑌶𑍍𑌰𑍇𑌯𑌃 𑌪𑌰𑌧𑌰𑍍𑌮𑍋 𑌭𑌯𑌾𑌵𑌹𑌃 ॥”

என்கிற ஶ்லோகத்தினால் ஸுவ்யக்தம். ஆக: பகவத் கீதையில் ஆரம்பம் முதல் முடிவு வரையில் நான்கு ஜாதி பேதங்களும் அந்தந்த ஜாதிக்கு வெவ்வேறான கர்மபேதங்களும், இந்த ஜாதிகளும் கர்மங்களும் ஒன்றோடொன்று கலக்கக்கூடாதென்கிற விஷயமும் வ்யக்தமாகச் சொல்லப்பட்டிருப்பதால், கீதாசார்யனுக்கு ப்ராம்ஹண்யாதி ஜாதி பேதங்களும் அந்தந்த ஜாதிக்கு வெவ்வேறான ஆசார பேதங்களும் இஷ்டமல்லவென்று சிலர் சொல்வது சரியல்ல என்பதை நிரூபித்தோம்.

இந்தக் கீதையிலேயே, ‘ஒருவன் செய்யக்கூடிய காரியங்கள் இவை செய்யக்கூடாத காரியங்கள் இவை என்கிற விஷயத்தில் மநுஸ்ம்ருதி முதலிய தர்ம ஶாஸ்த்ரங்களே ப்ரமாண’ மென்று சொல்லி யிருப்பதால், தர்ம ஶாஸ்த்ரங்களில் சொல்லியிருக்கிற அந்தந்த ஜாதியினுடைய ஆசார விசேஷ விதிகளை ஐந்தாவது அத்யாயத்தில் சொல்லப்படுகிற ஸாமாந்யமான ஸாம்ய தர்ஶநமானது பாதிக்கமாட்டாது.

ஆகையினால் ப்ராம்ஹணனையும் ஶ்வபாகனையும் ஸமாநமாக நினைக்கும்படி சொல்லி யிருப்பது, விசேஷ விதி ஸித்தங்களான ஆசாரங்களை நிஷேதிக்கமாட்டாதென்பது நிஶ்சயம். அவைகளுக்குள் சிலவற்றை நிரூபித்துக் காட்டுகிறோம்.

[தொடரும்]

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

செய்திகள்

(1)

திருப்பதியில் ஸ்ரீ தேசிகன் உத்ஸவம்

சென்ற அக்டோபர்மீ 27-ந்தேதி புதன்கிழமை முதல் 5—11—43 வெள்ளிக்கிழமை வரை பத்து நாட்கள் ஸ்ரீ தேசிகன் உத்ஸவம் வழக்கம்போல் வெகு விமரிசையாய் நடந்தேறியது. இவ்வர்ஷம், ஸ்ரீ பாஷ்யஸாரம் முழுவதையும் இந்த உத்ஸவம் பத்து தினங்களிலும், மாலை சுமார் 5-மணிக்கு, முறையே ஸ்ரீமான் உப. வே. திருவரங்கம் திருமலை தாதாசாரிய ஸ்வாமி, ஸ்ரீமான் உப. வே. உத்தமூர் வீரராகவாசாரிய ஸ்வாமி, ஸ்ரீமான் உப. வே. கூத்தப்பாக்கம் நீலமேகாசாரிய ஸ்வாமி, ஸ்ரீமான் உப. வே. நாவல்பாக்கம் கிருஷ்ணஸ்வாமி தாதாசாரிய ஸ்வாமி, ஸ்ரீமான் உப. வே. கோழியாலம் சடகோபாசாரிய ஸ்வாமி, ஸ்ரீமான் உப. வே. திருப்பதி கோபாலஸ்வாமி ஐயங்கார் ஸ்வாமி, ஸ்ரீமான் உப. வே. நாவல்பாக்கம் ராஜகோபால தாதாசாரியார் ஸ்வாமி, ஸ்ரீமான் உப. வே. இஞ்சிமேடு ராகவாசாரிய ஸ்வாமி, ஸ்ரீமான் உப. வே. மேல்மா நரஸிம்ஹ தாதாசாரிய ஸ்வாமி, ஸ்ரீமான் உப. வே. திருவரங்கம் ஸ்ரீநிவாஸ ராகவாசாரிய ஸ்வாமி முதலிய வித்வான்கள், ஸ்ரீ வைஷ்ணவர்கள் யாவரும் கேட்டுக் களிக்கும்படியாய் ஸ்ரீ தேசிகன் ஸந்நிதியில் உபந்யாஸம் செய்தார்கள். 3—1—43 மாலை 7-மணி முதல் 9-மணி வரையில் கவர்ன்மெண்ட் ஓரியண்டல் லைப்ரரி க்யூரேடர் ஸ்ரீமான் A. சங்கர ஐயர், M.A., P.H.D., "ஸ்ரீதேசிகன் மஹிமை" என்பதைப் பற்றி வெகு அழகாகவும் கம்பீரமாகவும் உபந்யஸித்தார். 4—11—'43 அன்று இரவு விநியோக காலத்தில் ஸ்ரீமான் சிறுங்கட்டூர் S. N. ஸ்ரீராம தேசிக சிரோமணி 'ஸ்ரீமான் வேங்கடநாதார்ய:' என்கிற ஶ்லோகத்தைக் குறித்து நன்கு உபந்யஸித்தார். இவ்விதம் பெரிய வித்வான்களால் செய்யப்பட்ட உபந்யாஸங்களைக் கேட்ட நகரிலுள்ள பல பெரியோர்கள், 'இவ்விதம் அடிக்கடி உபந்யாஸங்கள் நடக்குமாகில் பெரிய உபகாரமாய் இருக்கும்' என்று வெகுவாகக் கொண்டாடினர். ஏககாலத்தில் எவ்விடத்திலும் இல்லாத விஶிஷ்ட ஸ்ரீ பாஷ்யாதிகாரிகள் பலர் இவ்விடம் சேர்ந்திருப்பது திருப்பதிக்கே ஓர் அழகான சோபையை உண்டுபண்ணியது என்று பல ரஸிக ஶிரோமணிகள் களிப்புற்றனர்.

ஸ்ரீநிவாஸ ராகவாசார்யர், ஸபா கார்யதர்ஶி.

(2)

மாதுங்காவில் (பம்பாய்) ஸ்ரீநிகமாந்த மஹாதேசிகன் மஹோத்ஸவம்

"यत्रैकाग्र्यं भवति भगवत्पादसेवार्चनादेः
यत्रैकान्त्यं व्यवसितधियो यस्य कस्यापि लाभः ।
वासस्थानं तदिह कृतिनां भाति वैकुण्ठकल्पं
प्रायो देशा मुनिभिरुदिता प्रायिकौचित्यवन्तः ॥"

என்று நம் ஆசார்யன் ஸாதித்த ஶ்லோகமானது, அடியேன் முதலில் பம்பாயில் வந்து இறங்கின தினத்தன்று ஸ்ரீ. A. ஸ்ரீரங்கராஜ ஐயங்கார் ஸ்வாமியின் க்ருஹத்தில் நடந்த அந்த ஸ்வாமியின் ஆசார்யன் திருநக்ஷத்ரத்துக்கு நடந்த ஸேவாகாலம் சாற்றுமுறை கோஷ்டியை ஸேவித்தவுடன் ஞாபகம் வந்தது. இவ்விடம எழுந்தருளியிருந்த இருபது திருநாமங்களும் 'आपत्स्वनन्तरा वृतिः' என்கிற ப்ரகாரம் வேறு லௌகிக

வ்ருத்தியில் இருந்துகொண்டிருந்தாலும், ஸாயங்காலம் அவரவர்கள் ஜோலியை முடித்துக்கொண்டு நீராடி த்வாதசோர்த்வபுண்ட்ரம் தரித்துக் கோஷ்டிக்கு எழுந்தருளி அந்தக் கோஷ்டியை நடத்தினதன் பெருமையை என்னென்பது! பரம புனிதமான ஒரு திவ்ய தேசத்தி லிருந்துகொண்டு பகவத் பாகவத கைங்கர்யங்களில் கொஞ்சமேனும் ஈடுபாடு இல்லாதிருப்பவர்களைவிட, கொஞ்சம் வ்யவஹிதமான தேசத்திலிருந்தாலும் இவர்கள் அநுபவமே அநுபவம்.

நம் ஸ்ரீ நிகமாந்த மஹா தேசிகன் வார்ஷிக மஹோத்ஸவம் பத்து நாட்கள் வெகு விமர்சையாக நடந்தது. அநேக திருநாமங்கள் நிதம் ஸாயங்காலம் 7-மணி முதல் 10-மணி வரை திவ்ய ப்ரபந்த ஸேவாகாலமும் ஸ்ரீ தேசிக ப்ரபந்தம் முழுமையும் பத்து நாட்களில் ஸேவித்துச் சாத்துமுறை பர்யந்தம் வெகு விமர்சையாக நடத்தினர். இவ்வளவு விமர்சையாக இந்த ஊரில் இந்த உத்ஸவம் நடந்ததற்குக் காரணம், இங்குள்ள மஹநீயர்களின் ஊக்கமும் ஆசார்ய ப்ரதிபத்தியும்தான். ஷை உத்ஸவ நடுவில் ஸ்ரீ ஆதிவண் சடகோப யதீந்த்ர மஹாதேசிகன் திருநக்ஷத்ரத்தன்றும் விசேஷமாக ஸேவாகாலம் சாத்துமுறை ஸம்பாவனைகள் செய்யப்பட்டு, உத்ஸவம் விமரிசையாக நடந்தது.

இப்படி இவ்வுத்ஸவத்தை விசேஷமாக நடத்தி வைத்ததின் பெருமையில் ஸ்ரீ C. S. அய்யங்கார் ஸ்வாமி, N. S. சாரியார் ஸ்வாமி, பாட்ராசாரியர் ஸ்வாமி முதலிய மஹநீயர்களுக்கு விசேஷ பங்கு உண்டு. **ஸ்ரீநிவாஸ ஐயங்கார்.**

---

(3)

ஸ்ரீமதே ஸ்ரீவண் ஶடகோப ஸ்ரீலக்ஷ்மீ ந்ருஸிம்ஹ ஶடகோப
யதீந்த்ர மஹாதேஶிகாய நம:

ஸ்ரீ அஹோபிலமடம் 41-வது பட்டம்
ஸ்ரீவண்சடகோப ஸ்ரீலக்ஷ்மீ ந்ருஸிம்ஹ சடகோப யதீந்த்ர மஹா தேசிகன் இரண்டாவது வருஷத் திருவாராதந கைங்கர்யம்

(1) கண்கொடுத்த வணிதம்

வைகை நல்லூர் ஸ்ரீ ஸந்நிதி ஆராதநம் கண்கொடுத்த வணிதம் க்ராமம் ஸ்ரீ ஸந்நிதி முத்ரைக் கர்த்தா கடாம்பி க. வா. ஸ்ரீ. கோபால தேசிகாசாரிய ஸ்வாமி திருமாளிகையில் நாளது மீ 15ௗ திங்கட்கிழமை ஷை உத்ஸவம் ஆரம்பிக்கப் பட்டு, அன்றைக் காலையில் புண்யாஹவாசநம் அக்நி ஸந்தாநம் பண்ணிக்கொண்டு, ப்ரம்ஹகூர்ச்ச பஞ்ச கவ்யம் சேர்த்துத் தானும் ஸ்வீகரித்து நிமந்த்ரித ஸ்வாமிகளுக்கும் ஸாதித்தார். உடனே ஸேவை தொடக்கமாகி, திருவாய்மொழி ப்ரபந்தம், தேசிக ப்ரபந்தம், ஸ்ரீ ஸந்நிதி ப்ரபந்தம், ஸ்ரீமத் ராமாயணம், வேதபாராயணம் முதலியன விசேஷமாக நடந்தேறின. 16ௗ செவ்வாய்க்கிழமை (2—11—'43) ஸ்ரீ அழகியசிங்கரின் திருச்சாயைக்கு அலங்காரம் பண்ணி விசேஷமான ஆராதநமும் நடைபெற்றது.

ஸ்ரீ அழகியசிங்கர் கைங்கர்யத்தில், குரிச்சி ஸ்ரீ உபய. தி. ஸ்ரீநிவாஸாசாரிய ஸ்வாமியும், திருக்குடந்தை ஸ்ரீ உபய. ஆராவமுதாசாரிய ஸ்வாமியும், திருக்கோட்டியூர் ஸ்ரீ உபய. ஸௌம்ய நாராயண அய்யங்கார் ஸ்வாமியும் எழுந்தருளி ஸேவை ஸாதித்தார்கள். திருவத்யயந கைங்கர்யம் ஆன பிறகு ஷை ஸ்வாமிகளுக்கும் யதோசிதம் ஸம்பாவனைகள் ஸமர்ப்பிக்கப்பட்டன. ஷை கைங்கர்யத்துக்காகக் குளித்தலை

போர்டு ஹை ஸ்கூல் ரிடயர்டு உபாத்யாயர் லால்குடி ஸ்ரீ உ. வே. ரங்கஸாமி அய்யங்கார், ஷை யூர் கந்துக்கடை ஏஜண்டு ஸ்ரீ. உப ஸௌம்ய நாராயண அய்யங்கார், ஷை யூர் தாலுக்கா ஆபீஸ் கிளார்க்கு ஸ்ரீநிவாஸய்யங்கார் இவர்கள் மூவரும் செய்த பொருள் உதவியை எந்நாளும் மறப்பதிற்கில்லை. ஷை கோபால தேசிகாசாரிய ஸ்வாமியும் 'தேவுமற் றறியேன் குருகூர்நம்பி' என்று அருளிய மதுரகவிகளைப் போல், தமக்குப் பரங்யாஸம் பண்ணின பரமாசார்யனிடத்தில் அதி ஸந்தோஷத்துடன் திருவத்யயந கைங்கர்யத்தைப் பண்ணினது மிகவும் ஆச்சர்யப்படத்தக்கது.

கர்ணம் சாரங்கபாணி அய்யங்கார், வைகை நல்லூர்.

(2) காருகுரிச்சி

ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ திவ்ய ஸ்தாநத்தில் 41-வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருந்த ஸ்ரீ அழகியசிங்கருடைய த்விதீய வர்ஷாராதநம் நாளது ஸுபாநு ஐப்பசி 12௳ (28—10—'43) வெள்ளிக்கிழமை முதல் ஷை மாஸம் 16௳ (2—11—'43) செவ்வாய்க்கிழமை வரை ஐந்து திநங்களும் உபயவேதாந்த இதிஹாஸ புராண க்ரந்த சதுஷ்டய பாராயணங்களுடன் அம்மஹா தேசிகனுடைய அவதார ஸ்தலமான பல்லவாரண்ய க்ஷேத்ர மென்கிற காருகுரிச்சியில் பூர்வாஶ்ரம ஜ்யேஷ்ட குமாரரான தட்டை வித்வான் ஸ்ரீ. உப. கோபால ரங்காசாரிய ஸ்வாமியால் வெகு விமர்சையாயும் அழகாயும் நடத்தப்பட்டது.

கடைசி திநத்தில் பூர்வாஶ்ரம திருமாளிகையில் அர்ச்சாரூபியாக எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ அழகியசிங்கருக்கும் திருவுருவப் படத்துக்கும் வீதி ப்ரமணமும், அந்த ஸ்ரீ க்ராமத்தில் கோயில்கொண்டு எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ அபீஷ்டவரதனுக்கும், கண்ணனுக்கும், ஸ்ரீநிகமாந்த தேசிகனுக்கும் ஸ்ரீ ஆதிவண் ஶடகோப யதீந்த்ர மஹா தேசிகனுக்கும் மங்களாஶாஸந மரியாதைகள், ஸ்ரீ உ. வே. தட்டை ஜி. கோபால ஸ்ரீநிவாஸாசாரியர் பி. ஏ. பி. ல்., ஸ்பெஷல் மாஜிஸ்ட்ரேட், வங்கீபுரம் ஸ்ரீ. உப. கெ. ஆர். ஸுந்தரராஜாசாரியர், வங்கீபுரம் ஸ்ரீ. உப. டி. வரதாசாரியர் முதலியவர்களால் செய்யப்பெற்று, மறுநாள் விசேஷ ததீயாராதநத்துடன் ஆராதநம் பூர்த்தி அடைந்தது. அந்தக் கைங்கர்யத்தில் அந்வயித்த ஸ்வாமிகளுக்கு ஸ்ரீ அழகியசிங்கர் ப்ரஸாதமாக ஸம்பாவனையும் விசேஷ பூரியும் கொடுக்கப்பட்டன.

தட்டை லக்ஷ்மீ நரஸிம்ஹாசார்யன்.

---

(4)

ஸ்வாகத பத்ரிகை

[ஸம்புடம் 2 : ஸஞ்சிகை 11 : பக்கம் 411-ன் தொடர்ச்சி]

𑌐𑌶𑍍𑌵𑌰𑍍𑌯𑌂 𑌮𑌹𑍋𑌦𑌾𑌰𑌨𑍀𑌶𑍍𑌵𑌰𑌤𑌾𑌸𑍍𑌯𑍈𑌵𑌭𑌵𑌸𑌂𑌪𑌾𑌤𑌾𑌨𑍍
𑌵𑍃𑌷𑍍𑌟𑌿𑌦𑌾𑌨𑍍 𑌵𑌯𑌿 𑌵𑌾𑌷𑍍𑌟𑌿𑌦𑌾𑌨𑍍 𑌭𑌜𑌤𑌾𑌂 𑌨𑍃𑌣𑌾𑌂 𑌯𑌤𑌿𑌶𑍇𑌖𑌰𑌾𑌨𑍍 ।
𑌕𑌾𑌮𑌸𑌿𑌂𑌹𑌮𑌹𑌾𑌕𑍍𑌰𑍂𑌰𑌾𑌨𑍍 𑌕𑌲𑌿𑌦𑍋𑌷𑌦𑍍𑌵𑌿𑌪𑌮𑌰𑍋𑌧𑌸𑌾𑌨𑍍
𑌵𑌾𑌸𑍁𑌦𑍇𑌵𑌪𑌦𑌾𑌮𑍍𑌭𑍋𑌜𑌸𑍇𑌵𑌨𑌤𑌤𑍍𑌪𑌰𑌾𑌨𑍍 𑌪𑍍𑌰𑌣𑌤𑍋𑌽𑌸𑍍𑌮𑍍𑌯𑌹𑌮𑍍 ‖ 7

𑌶𑍍𑌰𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑍍𑌰𑌿𑌯𑌾𑌶𑌿𑌷𑍍𑌯𑌪𑌤𑍍𑌰𑌿𑌕𑌾𑌦𑌾𑌰𑌤𑌾 𑌭𑌵𑌿 ।
𑌸𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌯𑌪𑍍𑌰𑌵𑌾𑌹𑌾𑌦𑍍𑌯𑌸𑌂𑌗𑍍𑌰𑌹𑌾𑌸𑌾𑌰𑌾𑌨𑍍 ‖ 8

𑌕𑍃𑌤𑍍𑌯𑌜𑍍𑌞𑌭𑌮𑌵𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌶𑍍𑌰𑌿𑌤𑌾𑌵𑌨𑌦𑍀𑌕𑍍𑌷𑌿𑌤𑌾𑌨𑍍 ।
𑌪𑍍𑌰𑍀𑌤𑍋𑌽𑌵𑌤𑌿𑌷𑍍𑌠𑌤𑌾𑌂 𑌯𑍁𑌷𑍍𑌮𑌾𑌨𑍍 𑌦𑍀𑌰𑍍𑌘𑌂 𑌦𑍀𑌰𑍍𑌘𑌂 𑌧𑌿𑌯𑌾 𑌸𑌹 ‖ 9

ஹமவஷ்ருணஸக்ருந்தஸமீஜஸ்ரணவம்ஶிதாநு |
ராமோ நஜநவீநாவதாரஹ்ரிதாந்ஹாத்ந: || 10

காஞ்தஸிம்ஹாஹ்யாநு ஶாஞ்ஞாநு ஸஞ்தம் வ்ருணதாஸ்ய்யஹம் |
வாம்ஶாஞாம் ஸர்வஸம்ஷ்லாவ்ய ஸஹ்லாஞ்ஜாயர்யாஹிவ்யஜயே | 11

உபகர்வர்ஞி யே ஸஞ்ஜ்ஸாநு ஸதா வ்ருணரமோ வயம் |
சவர்யாவதாரஹ்ரிதஸ்ய வாஸரதேவஸ்ய ஶாஜ்ஜீர்ணம் || 12

மிம்மஜாஶாஸநம் தந்நஹாத்ரா ஜீயதாம் ஹரி |
இதி வ்யாயர்யதா க்ருஷ்ணம் யமிர்மோஸ்வாரமீஸ்வரம் || 13

ராயாக்ருஷ்ணபதாம்ஹோஜநிதிஸம்ஸக்ஷ்தேதஸா
சணகமீர்ஜாதேந நடேஶாலேந ஶாஸ்த்ரிணா || 14

காஞ்தஸிம்ஹாஹ்யாநாநாம் ஸவர்ஜ்ஞாநாம் மஹாத்நாம் |
மாம்பஞ்கேஷுத்ராஸ்வாநாம் உக்தா ஸ்வாமதவத்ரிகா || 15

அபிநவ வ்யாஸ கடலங்குடி நடேஶ ஶாஸ்த்ரிகள்.

---

(5)

பண்ருட்டி ஸ்ரீ மஹாராதனம்

நிகழும் ஸ்வபானு௵ தை௴ 10௳ (23-1-'44) ஞாயிற்றுக்கிழமை க்ருஷ்ண பக்ஷம் த்ரயோதசி திதியில் பண்ருட்டி அக்ரஹாரத்தில் நடைபெறப்போகும் ஸ்ரீ வண் சடகோப ஸ்ரீ ரங்கநாத சடகோப யதீந்த்ர மஹா தேசிகனுடைய 21-வது வார்ஷிக மஹாராதந மஹோத்ஸவத்திற்கு ஸ்வாமிகள் அனைவரும் எழுந்தருளி ஆராதநத்தை அதி விமரிசையாப் நடத்தி வைத்து, ஸ்ரீ அழகியசிங்கரின் அநுக்ரஹத்திற்குப் பாத்திரர்களாக வேணுமாய் ப்ரார்த்திக்கின்றோம்.

பண்ருட்டி,
29—11—43.

கா. பார்த்தஸாரதி ஐயங்கார்.

---

(6)

ஸ்ரீ கல்யாணபிவர்த்தநீ ஸபை, ஸ்ரீ அஹோபில மடம்
ஸம்ஸ்க்ருத காலேஜ், மதுராந்தகம்

௸ ஸபை அக்டோபர௴ 26௳ செவ்வாய்க்கிழமை மாலை 5 மணிக்கு வ்யாகரணாத்யாபகர் ஸ்ரீ உ. வெ. நரஸிம்ஹாசார்ய ஸ்வாமி தலைமையின் கீழ்க் கூடியது. அச்சமயம் P. C. வரதாச்சாரி (வியாகரண சிரோமணி முதல் வகுப்பு) என்னும் வித்யார்த்தியினால் 'வேதகசரித்ரம்' என்னும் விஷயத்தைக் குறித்து வடமொழியில் எழுதப்பட்ட வ்யாஸம் படிக்கப்பட்டது. பிறகு ஸபை இனிது கலைந்தது.

அதே தினத்திலேயே (ஐப்பசி மீ 9உ) ஸ்ரீ[illegible]ஆதி ஸ்ரீஅழகிய சிங்கர் எழுந்தருளும் ஸமாசாரம் தெரிந்து ஊரிலுள்ள பல பிரமுகர்களும் வித்யார்த்தி களுடனும் ஸ்ரீ உ. வே. உபாத்யாயர்களுடனும் ஸ்ரீ உ. வே கலாசாலை அத்யக்ஷர் சாஸ்த்ரிகளும் பூர்ண கும்பத்துடன் கிளியாற்று (கல்லாறு) கரையிலிருந் தெதிர் கொண்டு உபசரித்தார்கள். பிறகு ஸ்ரீவைஷ்ணவகோஷ்டி, வேதபாராயணகோஷ்டி களுடனும் ஸ்ரீ[illegible]ஆதி அழகியசிங்கர் எழுந்தருள, வழக்கப்படி ஸ்ரீ சடாரி முதலிய மரியாதைகள் ஸ்ரீகோதண்டராம ஸ்வாமி தேவஸ்தான அதிகாரிகளால் நடத்தி வைக்கப்பட்டன. பிறகு ஸ்ரீ அழகியசிங்கர் ஸ்ரீ அஹோபில மடத்திற் கெழுந்தருளினர்.

மறுதினம் மாலை நாலு மணிக்கு ஸ்ரீ அழகியசிங்கர் ஆராத்ய தேவதைகளுடனும் ஸகல பிருது பரிஜநங்களுடனும் வீதிவலமாக எழுந்தருளி, ஸ்ரீவக்ர வதிஷ்ட் திருமகனாரை வழக்கம்போல் மரியாதைகளுடன் மங்களாசாஸநம் செய்தருளினர். பிறகு கலாசாலையைக் கடாக்ஷிக்க எழுந்தருளின ஸமயம் ஸ்ரீ உ. வே. கலாசாலை அத்யக்ஷர் சாஸ்த்ரிகளால் கீழ் வருமாறு ஸ்வாகத நிவேதநமானது ஸ்தோத்ர சாலையில் (Prayer hall) விஜ்ஞாபிக்கப்பட்டது.

श्रीमल्लक्ष्मीनृसिंहस्य श्रीरङ्गशठजिद्गुरोः
स्वागतोक्त्यावयं भूयः नन्दाम शरदः शतम् ॥ १ ॥
जयति नृसिंहविभूतिः जयति गुरूणामियं कलाशाला
जयति तयोरभिवृद्ध्या वृद्धो यतिराजसंप्रदायोऽयम् ॥ २

இதே ஸமயம் கலாசாலை உபாத்தியாயர்களும் ஸபையின் சார்பாக ஸ்வாகத நிவேதநத்தைக் கீழ் வருமாறு விஜ்ஞாபித்தனர்.

नमस्समस्तसेव्याय श्रीरङ्गशठवैरिणे । ब्रह्मविद्याप्रदानेन यमुशन्ति हयाननम् ॥

भोः श्रीरङ्गशठारियोगिनृपते भावत्ककारुण्यतो
यद्विद्यासदनं धिनोति सकलान् विद्या सदाचारतः ।
अद्यत्वे तदिदं प्रविश्य करुणा श्लोकैः पुनः पुष्णते
व्याहारं रचयेम तत्र भवते सौवाहतं हर्षिताः ॥ २ ॥

तेनेविद्यासदनं नयपदनिक्षिप्तचक्षुषा येन ।
यतिराज एष इन्ध्यां मह्यं विद्याकृते शतं शरदः ॥

बुद्धिं यस्या मनसि दधतो द्राविडाम्नायपाठे
श्रीरङ्गश्रीरिति किल गिरं गृह्णते विष्णुभक्ताः ।
विश्वंशश्वद्विभुपदयुगन्यासतो धन्ययन्तो
जीयात्साश्रीर्यतिपतिवपूरङ्गकार्यात्मजीया ॥

इत्थं श्रीमदहोबिलेश्वरमठप्रख्यातविद्यागृहे
युक्ताध्यापकपर्षदत्र भवतां विद्यागृहेक्षोत्सवे ।

श्रीमद्रङ्गशठारिसंयमवतां विद्यागृहस्वामिनां
पादाब्जे निजभक्तिमुत्कलयते पद्यैः कियाद्भिश्चन ॥

P. N. राघवाचार्यः, व्याकरणाध्यापकः

श्रीमद्वेदपदस्थिरीकृतिजुषामन्यूनमस्मिन्युगे-
प्येवं पारमहंस्यमाश्रितवतां तन्त्रस्वतन्त्रात्मनाम् ।
श्रीमदभाव्यकृतामिवात्र भवतामुच्चैस्तराः स्वागत-
प्याहाराविहरन्तु संस्कृतगिरास्सर्वप्रिये भावुकाः ॥

पूर्वयाजगदुज्जिजीवयिषया संकल्पितेष्वग्रिमा
कैंकर्येषु महीयसी किल कलाशाला प्रतिष्ठापिता ।
तस्याश्रीयुतवैष्णवैस्सहमुहुः श्रीरङ्गकार्यात्मभू-
योगीन्द्रनिहसेविषीर्महियतः प्रीयेतपुंस्केसरी ॥ A. R. कृष्णमाचार्यः

மறுதினம் முதல் பிரதிதினமும் மாலை 6 மணிக்கு ஸ்ரீ அழகியசிங்கர் கலாசாலைக்கெழுந்தருளி ஒவ்வொரு வகுப்பு வித்யார்த்திகளையும் தர்க்கவ்யாகரணம் முதலிய ஶாஸ்த்ரங்களை வாக்யார்த்தரூபமாய்ச் சொல்லும்படி நியமித்துப் பரீக்ஷித்தருளினார். இப்படி இருக்க, இந்த கலாசாலை உபாத்தியாயர்களை முன்னிட்டுக்கொண்டு வித்யார்த்திகள் ப்ரார்த்திக்க, ஸ்ரீ அழகியசிங்கர் 4—11—43 (ஐப்பசி மீ 18௳) வியாழக்கிழமை மாலை 6 மணிக்கு "ஜ்ஞானம்" என்னும் விஷயத்தைக் குறித்து உபந்யாஸம் செய்தருளியாயிற்று. இந்த உபந்யாஸத்தின் ஸாரமாவது: 'ஜ்ஞானேன ஹீநா: பஶுபி: ஸமாநா:' என்பதை நன்குவிளக்கி. மனுஷ்யனுக்கு ஜ்ஞானமவஶ்யம் வேண்டும், ஜ்ஞானமில்லாதவன் பஶுவேயன்றி மநுஷ்யனல்லன் என்றும், அபபடி ஜ்ஞானம் வேண்டுமென்றால் என்ன உபாயம் செய்வது எப்படி அநுஷ்டிப்பதென்றும் விவரித்து ஸாதித்தாயிற்று. மேலும் அந்த ஜ்ஞானத்திற்குள் ப்ரஹ்மஜ்ஞானமே சிறந்ததென்று அந்த ஜ்ஞானத்திற்கு மிகவு முபகாரகமான ஶாஸ்த்ரங்கள் தர்க்கமும் வ்யாகரணமுமேயாகும் என்று இக்கலாசாலையில் அவ்வகுப்புக்களை முக்கியமாக ஏற்படுத்தியிருக்கிறது ஆதலால் இக்கலாகாலை வித்யார்த்திகள் இந்த தர்க்கவ்யாகரணங்களை மிகவும் ஶ்ரத்தையுடன் ஆசார்யரிடத்தில் இருக்கவேண்டிய முறைகளுடனு மிருந்து நன்கப்யஸித்து, பிறகு மேற்கூறியபடி முக்கியமான ப்ரஹ்மஜ்ஞானஸம்பாதநாதிகாரிகளாக ஆகவேண்டு மென்றும் உபதேஶித்தருளியாயிற்று. அன்றையதினமே ஸ்ரீ அழகியஶிங்கரிடத்தில் இக்கலாசாலையில் டோலோத்ஸவம் நடைபெற வேண்டுமென்று வாத்தியார்களை முன்னிட்டு வித்யார்த்திகள் விஞ்ஞாபிக்க, அப்படியே ஸ்ரீ அழகியசிங்கரும் நியமிக்க, ஸ்ரீ உ. வே. உபாத்தியாயர்கள் வித்யார்த்திகள் இவர்களால் கலாசாலை ஶாஸ்த்ர ஶாலையில் வெகு விமரிசையாக நடத்தப்பட்டது.

O. R. ராஜகோபாலன், காரியதரிசி.

श्रीः

श्रीमते लक्ष्मीनृसिंहपरब्रह्मणे नमः

" योऽन्तः प्रविश्य मम वाचमिमां प्रसुप्तां
सञ्जीवयत्यखिलशक्तिधरः स्वधाम्ना ।
अन्यांश्च हस्तचरणश्रवणत्वगादीन्
प्राणान्नमो भगवते पुरुषाय तस्मै ॥ "

ஸம்பாதகரின் குறிப்புக்கள்

ஸ்ரீ அழகிய சிங்கருடைய யாத்ரோத்ஸவம்.

சென்ற ஐப்பசி௴ 3உ புதன்கிழமை [20—10—43] சென்னையை விட்டு யாத்ரையாக எழுந்தருளின ஸ்ரீ அழகியசிங்கர், சைதாப்பேட்டை, திருநீர்மலை, தாம்பரம், சிங்கப்பெருமாள் கோவில் மார்க்கமாகச் செங்கல்பட்டு சேர்ந்து, அங்கிருந்து அமாவாஸ்யைக்கு ஸ்ரீ மதுராந்தகம் எழுந்தருளி, அவ்விடத்தில் 41-வது பட்டம் ஸ்ரீவண்ஶடகோப ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹ ஶடகோப யதீந்த்ர மஹா தேஶிகனுடைய இரண்டாவது வர்ஷாராதநத்தை யதாக்ரமம் அநுஷ்டித்து, அவ்விடத்தில் இரண்டு மூன்று நாட்கள் விளம்பித்துப் பிறகு 20உ சனிக்கிழமை [6—11—43] முகுந்தகிரி வாஸிகளான ஆஸ்திகாக்ரேஸர ஶிஷ்யர்களால் ப்ரார்த்திக்கப்பட்டவராய் அன்று முகுந்தகிரியில் தங்கி மறுதினம் [7—11—43]ல் சூணாம்பேட்டைக்கு எழுந்தருளினர். சூணாம்பேட்டையில் அந்த ஸ்தலத்து ஜமீன்தாரான திவான் பஹதூர் அருணாசல முதலியார் அவர்கள், ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹன் தம் ஊர்க்கு எழுந்தருளினதைத் தமது பெரிய பாக்யமாக எண்ணி, அளவற்ற உத்ஸாஹத்துடனும் பக்தியுடனும் ஒரு வாரத்திற்கு மேல் ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹனையும் ஸ்ரீ அழகிய சிங்கரையும் அவர்களுடைய பரிஜநங்களையும் தமது ஸம்பத்துக்கு அநுகுணமாக ஆராதித்ததுடன், ஸ்ரீ மதுராந்தகத்தில் ஸ்ரீ அழகிய சிங்கரால் ஸ்தாபிக்கப் பெற்று நடந்து வரும் ஸம்ஸ்க்ருத ஶாஸ்த்ர பாடஶாலையில் ஒரு வித்யார்த்தியின் வர்ஷாந்தச் செலவுக்காக ஒவ்வொரு வர்ஷத்திலும் ரூ. 120—0—0 கொடுப்பதாக வாக்தாநம் செய்து, முதல் வர்ஷ ஸம்பத்தமான தொகையையும் நேரில் ஸமர்ப்பித்தார். இது பெரியதொரு நன்கொடை. ம-ள-ள-ஸ்ரீ முதலியாரவர்களுடைய ஶுத்தமான மநோ பாவத்தையும் ஔதார்யத்தையும் நாம் நன்கு அறிவோம். நமது பெரியோர்களால் லோகஹிதமென்று உபதேஶிக்கப்பட்டுள்ள நமது மதம் ஓங்கி வளரவேண்டுமென்பதும் நமது தேஶத்து ஜநங்களெல்லாரும் பரஸ்பரம் ஒற்றுமையுடன் வர்த்தித்து ஸுகமாக வாழ்ந்து வரவேண்டுமென்பதுமே அவருடைய தீவ்ரமான மநோரதம். அவரது அந்த மநோ

ரதத்தை ஸ்ரீ ஶரண்யன் தலைக்கட்டிவைக்க வேண்டுமென்று நாம் ப்ரார்த்திக்கின்றோம்.

ஸ்ரீ அழகிய சிங்கர், சூணாம்பேட்டையில் கார்த்திகை மீ 2உ பர்யந்தம் எழுந்தருளியிருக்கும்படி ஸம்பவித்தது. அதற்குப் பிறகு அதை விட்டுப் புறப்பட்டுத் திண்டிவனம் மார்க்கமாகப் பழவேரிக்கு எழுந்தருளி, அவ்விடத்தில் கொஞ்சநாள் தங்கி, 12உ சனிக்கிழமை அமாவாஸ்யை திநம் இஞ்சிமேட்டுக்கு எழுந்தருளியாயிற்று. அந்த ஸ்தலம் ஸ்ரீ அத்திப்பட்டு அழகிய சிங்கரின் திருவவதாரஸ்தல மாகையால், 16உ புதன்கிழமை திநம் ஸம்பவிக்கும் அந்த அழகிய சிங்கரின் திருநக்ஷத்ர மஹோத்ஸவத்தை அந்த ஸ்தலத்தில் நடத்த வேண்டுமென்று திருவுள்ளம்பற்றி, ஐந்து நாள் முன்னதாகவே அந்த உத்ஸவத்தை உபக்ரமித்து அதை யதாக்ரமம் நடப்பித்தார். மேல்கொண்டு யாத்ரை எவ்விடம் இருக்குமென்பது இன்னும் நிர்ணய மாகவில்லை. ஸ்ரீரங்கம் எழுந்தருளி அங்கிருந்து ஸ்ரீ ஆழ்வாரை ஸேவிக்கத் தக்ஷிண தேஶம் எழுந்தருளவேண்டு மென்பது திருவுள்ளம். எப்பொழுது எந்த க்ரமத்தில் அது நிறைவேறு மென்பது காலதேஶ ஸௌகர்யாதீநம்.

* * *

ஸ்ரீ திருப்புட்குழி ஸ்வாமியின் இரண்டாவது ஷஷ்ட்யப்த பூர்த்தி மஹோத்ஸவம்.

சென்ற ஐப்பசி மீ 6உ ஸ்ரீ காஞ்சீபுரத்தில் ஸ்ரீ திருப்புட்குழி ஸ்வாமியின் இரண்டாவது ஷஷ்ட்யப்த பூர்த்தி மஹோத்ஸவம் நடைபெற்ற விஷயம் நமது ஸுஹ்ருத்துக்களெல்லாருக்கும் தெரிந்திருக்கலாம். அதற்குப் பத்து திநங்கள் முன்னதாகவே இந்த உத்ஸவ ஸம்பந்தமாகத் திவ்ய ப்ரபந்த ஸேவை வேத பாராயணம் முதலியவைகளுடன் அநேக உபந்யாஸங்களும் நடத்தப்பட்டன. 'ஸ்ரீ தேஶிக தர்ஶந ரத்நம்' என்னும் பிருதை அந்வர்த்தமாகப் பெற்றிருக்கும் நமது ஆஸ்திகாக்ரேஸரரான ஸ்ரீமான் வி. வி. ஸ்ரீநிவாஸ ஐயங்கார் ஸ்வாமியின் உத்ஸாஹமும் முயற்சியுமே இந்த மஹோத்ஸவம் வெற்றிகரமாக நடைபெற்றதற்கு முக்ய காரணம். இம்மாதிரி மஹோத்ஸவங்களில் அவருக்கு இருக்கும்உத்ஸாஹமும் ஶ்ரத்தையும் வாசாம் அகோசரம். அநேக வைதிக வித்வான்களையும் அநேக லௌகிக ப்ரபுக்களையும் வரவழைத்து, அவரவர்களுக்குத் தக்கவாறு புரஸ்காராதிகளைச் செய்து, ஒரு அம்ஶத்திலும் எவ்வித குறைவு மிராமல் ஸ்ரீ ஶரண்யனுடைய திருவுள்ளம் உகக்கும்படி இந்த மஹாநுபாவர் அந்த மஹோத்ஸவத்தை நடத்திவைத்த பெருமையை, அப்பொழுது அவ்விடத்தில் ஸந்நிஹிதர்களாக இருந்த ஸஹ்ருதயர்களே ஸமக்ரமாக அறிவார்கள். அந்த ஸஹ்ருதயர்களுள் ஒருவரான பந்தல்குடி ஸ்ரீமான் ரெ. திருமலை ஐயங்கார் ஸ்வாமி அந்த மஹாநுபாவருடைய ஔதார்யத்தையும் ஶ்ரத்தையையும் பற்றி விஸ்தாரமாகப் புகழ்ந்து வ்யாஸ மொன்று எழுதி, அதை

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியையில் ப்ரசுரம் செய்யும்படி க்ருபையுடன் அனுப்பியிருக்கிறார். அதை அப்படியே வெளியிடுவதில் நமக்கு அளவற்ற ஸந்தோஷமே. ஆனால் ஒருகால் அப்படிச் செய்வதால் நம்ரஸீலரான ஸ்ரீ வி. வி. ஸ்வாமிக்கு அப்ரியம் க்ருதமாகுமோ வென்று அதை நாம் ப்ரசுரம் செய்யப் பயப்படுகிறோம். பூதார்த்த வ்யாஹ்ருதியும் அளவுக்கு விஞ்சின ஸ்துதிரூபமானால் ஸாலீநர்களா யிருக்குமவர்களுக்கு ருசிக்கமாட்டா தன்றோ?

* * * *

ஸகோத்ர விவாஹ பில் வாபீஸ்

சட்ட நிர்மாண ஸபையில் ப்ராமுகராயிருக்கும் சிலர், ப்ரஜை களுக்கு ஆநுகூல்யத்தைச் செய்வதாகக் கருதி, ஸ்வல்ப காலமாகப் பழைய சட்டங்களிற் பலவற்றைத் தமக்கு உசிதமென்று தோன்றும் ரீதியில் மாற்ற ப்ரயத்நப்படுகிறார்கள் என்பதை எல்லாரும் உணர்ந்திருக்கலாம். பழைய காலத்து வ்யவஸ்தைகளின் வ்யவஸ்தாபகர்களான நமது மஹர்ஷிகளின்மீது அவர்கள் ஆரோபணம் செய்யும் பல தோஷங்களுள், அந்த மஹர்ஷிகள் புமான்களிடம் பக்ஷபாதத்தைக் கொண்டாடி ஸ்த்ரீ களுக்கு மஹத்தான தீங்கை விளைவிக்கும் பல நிர்ப்பந்தங்களைச் செய்துவிட்டார்கள் என்பதே ப்ரபலமானது. விதவா விவாஹம் கூடாதென்றும், ருதுமதீ விவாஹம் கூடாதென்றும், ஸகோத்ர விவாஹம் கூடாதென்றும், ஸ்த்ரீகளுக்கு ஸ்வாதந்த்ர்யம் கிடையா தென்றும், தாயபாகத்தில் அவர்களுக்குப் பங்கு இல்லை யென்றும், இம்மாதிரி பல நிர்ப்பந்தங்களைச் செய்து ஸ்த்ரீகளை அவர்கள் வருத்தி விட்டார்களாம். அந்த வருத்தத்திலிருந்து அவர்களை நிவ்ருத்தி செய்து, அவர்களை எல்லா அம்ஸங்களிலும் புமாந் களுக்குத் துல்யராகச் செய்யவேண்டு மென்பதே இவர்களுடைய ப்ரயத்நமாம்.

இவர்களாற் செய்யப்பட்டு இப்பொழுது அநுஷ்டாநத்தில் வந்திருக்கும் சாரதா சட்டம் விதவா விவாஹச் சட்டம் ஸிவில் விவாஹச் சட்டம் முதலிய சீர்திருத்தங்கள் பல உண்டு. இவைக ளால் எவ்வித நன்மை நமது தேஸத்திற்கு ஸம்பவித்திருக்கின்ற தென்பதை ப்ராயேண யாவரும் அறிவர். இந்தச் சீர்திருத்தங்கள் போதாவென்று எண்ணி, இப்பொழுது மற்றுமொரு புதிதான திருத்தத்தைச் செய்ய, சிலர் இரண்டு மாத காலமாகப் பலமான முயற்சியைச் செய்து வந்தார்கள். நமது ஸாஸ்த்ரங்களில் ஸர்வ ப்ரகாரத்திலும் நிஷேதிக்கப்பட்டுள்ள ஸகோத்ர விவாஹம் சட்டத் திற்கு ஒத்ததென்று அங்கீகரிக்கப்படவேண்டு மென்பதே அந்தத் திருத்தம். நம்முடைய புத்திக்குக் கோசரமாகாத ஏதோ சில தோஷங்களை உத்தேஸித்து நமது மஹர்ஷிகள், ஸகோத்ர விவாஹம் எவ்வளவு தலைமுறை வ்யவஹிதமாக இருந்தாலும் கூடாதென்று நிஷேதித்திருக்கிறார்கள். இன்று பர்யந்தம் அந்த வ்யவஸ்தைக்குக் கட்டுப்பட்டே எல்லாரும் நடந்து வருகிறார்கள்.

இந்த வ்யவஸ்தைகளால் ஒருவருக்கும் ஒருவிதமான கஷ்டமும் இது பர்யந்தம் ஸம்பவித்ததாகத் தெரியவில்லை. பஹு காலமாகப் பாமர பண்டிதர்க ளுட்பட ஸகலராலும் அநுஷ்டிக்கப்பட்டு வரும் ஒரு வ்யவஸ்தையை மாற்றுவதானல், அதற்குத் தகுந்த பலீயஸ்ஸான காரணங்கள் வேண்டுமன்றோ? ஒருவிதமான காரணமுமிராமல், கேவலம் சில காமுகர்களுடைய இஷ்ட பூர்த்தியை உத்தேஸித்து, அநாதி காலமாகத் தொன்று தொட்டு அநுஷ்டானத்தில் இருந்து வரும் வ்யவஸ்தையை ஒரு க்ஷண மாத்ரத்தில் அழிக்க ப்ரயத்நப்படுவது ந்யாயத்திற்கு ஒத்ததாகுமோ? ஏதோ சிலர் செய்திருக்கும் புண்யத்தின் பலமாகவோ, அல்லது அநேக அதர்மங்கள் அஸங்குசிதமாக நடவடிக்கையில் வந்திருக்கையிலும் இரண்டொரு தர்மங்கள் இன்னும் சிலகாலம் நடைபெற்று வரலா மென்னும் பகவத் ஸங்கல்பத்தாலோ, அல்லது இந்த அதர்மத்தை ஸ்தாபிக்க முயன்ற ப்ரமுகர்களுக்கு அப்ரதீக்ஷிதமாக நேர்ந்திருக்கும் ஏதோ சில ஸங்கடங்களாலோ, ஏதோ ஒரு காரணத்தால் அந்தத் திருத்தக்காரர்கள் இந்த ப்ரயத்நத்திலிருந்து இப்பொழுது நிவ்ருத்தராகி விட்டார்க ளென்று நாம் கேள்விப்படுகிறோம். இது ஒரு ஆஶ்வாஸ ஹேதுவே. ஆனலும் இதைக்கொண்டு நாம் அதிகமாக ஸந்தோஷமடையக் கூடாது. ஆக்ரஹிகளுடைய சித்தம் அவ்யவஸ்திதம். மறுபடியும் நினைத்துக்கொண்டு அவர்கள் இன்னும் க்ரூரதரமான வ்யாபாரத்தில் ப்ரவர்த்திக்கவும் கூடும். நாம் எதையும் எப்படி த்ருடமாய்ச் சொல்ல முடியும்?

"नाभ्यनन्दत तद्वाक्यमसतोऽविजितात्मनः ॥"

இவர்களுக்கு அஶாஸ்த்ரீய அநுஷ்டாநங்களில் அபிநிவேஶம் உண்டாவதைப் பற்றி நாம் ஆஶ்சர்யப்படவில்லை. எல்லாருக்கும் ஜந்மாந்தர வாஸனை என்பது ஒன்று உண்டு. அதற்கு அநுகுணமாகவே மநுஷ்யர்களுக்குப் புத்தித் தோற்றம் ஜநிக்கும். ஆனல் அவர்கள், அந்த வாஸனையால் தோன்றும் தோற்றத்தைத் தமது அநுஷ்டானத்தில் மாத்ரம் வைத்துக் கொண்டு, அந்த அநுஷ்டானத்தின் பயனை ஸுகதுக்கங்களுக்குத் தம்மையே பாத்ரமாகச் செய்துகொள்வதோடு நின்றிருக்கும் பக்ஷத்தில், அவர்கள்மீது நமக்கு எவ்வித சித்த விகாரமும் ஸம்பவிக்கமாட்டாது. ஶாஸ்த்ர விஶ்வாஸிகளான மற்றவர்களை அவர்களுக்கு அநிஷ்டமான மார்க்கத்தில் ப்ரவர்த்திக்கும்படியாக நிர்ப்பந்திக்கவாவது அநிஷ்பந்ந மதிகளான ஸாமாந்ய ஜனங்களுக்குத் தமது மார்க்கமே ஸாதுவானது என்னும் எண்ணத்தை ஜநிப்பித்து அதில் நடக்கும்படி அவர்களுக்கு உத்போதநம் செய்யவாவது அவர்கள் ப்ரயத்நப்படும் பொழுதே நமக்கு ஶோகம் ஜநிக்கின்றது. அது அவர்களுடைய படிப்புக்கும் அவர்கள் பெற்றிருக்கும் ஸம்ஸ்காரத்திற்கும் லக்ஷணமாகுமோ? தைவமில்லை யென்றும் ஆத்மா வில்லை யென்றும் ஶாஸ்த்ர மில்லை யென்றும் சொல்லிக்கொண்டு,

அவர்கள் தமது மனம் போன போக்கில் நடந்தால் நாம் அவர்களைப் பார்த்து அநுதபிப்போமே யன்றிக் கொஞ்சமேனும் அவர்கள் மீது கோபம் கொள்ள மாட்டோம். மற்றவர்களை நிர்ப்பந்தித்துத் தமது வழியில் நடத்தவும், நிர்ப்பந்தமிரா விட்டாலும் அவர்களுடைய மநஸ்ஸைச் சலிப்பிக்கவும் அவர்கள் ப்ரயத்நப்படும் பொழுதே நமக்கு வருத்தம் ஜநிக்கின்றது.

"तानकृत्स्नविदो मन्दान् कृत्स्नविन्न विचालयेत्"

கணக்கற்ற ஜநங்கள் கணக்கற்ற அதர்மங்களைச் செய்கிறார்கள்; அவர்களுடன் நமக்குச் சச்சரவு இல்லை. அவர்கள் இதரர்களையும் அம்மாதிரி அதர்மங்களைச் செய்விக்க முயல்கின்றார்களே: இது என்ன பேதமை! அப்போது அவர்கள் கண்டநத்துக்கு உரியவர் தானே என்பதை ஆலோசித்துப் பாருங்கள்.

ஸ்ரீ:

பஞ்சாங்க ஸங்க்ரஹம்

ஸுபாநு௵ மார்கழிமீ

1உ வியாழக்கிழமை — சாப க்ருஷ்ண பஞ்சமி திதி; தநுர்மாஸாராதநாரம்பம்
7உ புதன்கிழமை — ஏகாதசி திதி.
8உ வியாழக்கிழமை — ஏகாதசி வ்ரதம், த்வாதசி திதி.
9உ வெள்ளிக்கிழமை — த்ரயோதசி திதி.
11உ ஞாயிற்றுக்கிழமை — அமாவாஸ்யை: ஸ்ரீ தொண்டரடிப்பொடி யாழ்வார் [திருநக்ஷத்ரம்.
21உ புதன்கிழமை — தசமி—ஏகாதசி திதித்வயம்.
22உ வியாழக்கிழமை — வைகுண்ட ஏகாதசி; த்வாதசி திதி.
23உ வெள்ளிக்கிழமை — த்ரயோதசி திதி.
24உ சனிக்கிழமை — சதுர்த்தசி திதி.
25உ ஞாயிற்றுக்கிழமை — அதிதி.
26உ திங்கட்கிழமை — பூர்ணிமா திதி.
27உ செவ்வாய்க்கிழமை — 'கூடாரை வெல்லும்'
29உ வியாழக்கிழமை — போகிப் பண்டிகை; த்ருதியா திதி.

[மார்கழி மாஸத்தில் க்ருஷ்ண சதுர்த்தி ஶ்ராத்தாதிகளை தைமீ 1உ சதுர்த்தி திநம் நடத்தவேண்டு மென்பது ஸ்ரீ அழகிய சிங்கர் நியமநம்.]

एवं मुनेर्विजानत आत्मा भवति गौतम ॥ १५ ॥

உள்ளபடி அறிந்திருக்கும், **मुनेः** - மநந ஶீலனுகிற ப்ரஹ்மவித்துடைய, **आत्मा** - ஆத்மாவானது, **भवति** - [விஶுத்தமான பரமாத்மாவுக்கு ஸமாநமாகவே] ஆகின்றது.

சுத்தமான ஜலத்துடன் சுத்தமான ஜலம் சேர்ந்து பரமஸாம்யத்தை அடைவதுபோல, ப்ரஹ்மவித்தின் சுத்தமான ஆத்மா ஶுத்தமான பரமாத்மாவுடன் சேர்ந்து அதனுடன் பரமமான ஸாம்யத்தைப் பெற்றுத் தானும் ஶுத்தமாக நிற்கின்றது. 'ஹே கௌதம!' என்னும் ஸம்போதநம், ப்ராப்யமான பரம ஸாம்யத்தின் வைபவத்தை நினைத்து ஸந்தோஷத்தால் ப்ரவஹித்தபடி.

இரண்டாவது அத்யாயத்தில் முதல் வல்லி முற்றிற்று.

॥ इति द्वितीयाध्याये प्रथमवल्ली ॥

श्रीः

॥ द्वितीयाध्याये द्वितीयवल्ली ॥

हरिः ओम् ॥

पुरमेकादशद्वारमजस्यावक्रचेतसः ।
अनुष्ठाय न शोचति विमुक्तश्च विमुच्यते ॥ एतद्वै तत् ॥ १

ஸ்ரீ:

இரண்டாவது அத்யாயம்—இரண்டாவது வல்லி

கீழே சொல்லப்பட்ட விஷயமே இந்த வல்லியில் ப்ரபஞ்சிக்கப் படுகின்றது. ஒரே ஆத்மா ஸகல சேதநாசேதந வஸ்துக்களுக்கும் அந்தராத்மாவாக இருந்துகொண்டிருக்கிறது என்பது மிகவும் துர்ப்போதமன்றோ?

1. இந்த மந்த்ரத்தில் முக்தாத்ம ஸ்வரூபமும் பரமாத்மாவையே ஆத்மாவாக உடைத்தாயிருக்கிறது என்பது விஷயம். பத்ததசையில் ஆத்மா இருக்கும் ஶரீரத்தை ஒரு பத்தநமாகவும் அதிலுள்ள ஆத்மாவை அதன் ஈஸ்வரனாகவும் பேசி அவனால் அது நன்றாக அறியப் படத்தக்கது என்பதை நிரூபிக்கிறார்.

[ப-ரை.] **अजस्य** - பிறப்பற்றும், **अवक्रचेतसः** - ருஜுவான புத்தியை உடையதுமான [விவேகியான], [**आत्मनः**- ஆத்மாவுக்கு], **एकादशद्वारम्** - பதினொரு த்வாரங்களை யுடைய [ஶரீரமானது], **पुरम्** பத்தநமாகிறது [அதாவது: பத்தநத்தின் ஸொந்தக்காரனுக்கு அந்தப் பத்தநம் எப்படி நன்றாக விவேசித்து அறியப்படவேண்டியதோ, அப்படியே ஆத்மாவுக்கு இந்த ஶரீரம் விவேசித்து அறியப் படத்தகுந்தது]. **अनुष्ठाय** - அப்படி அறிந்து, **न शोचति** - துக்கிக்கிறானில்லை [அதாவது: தேஹாநுபந்தியான காம க்ரோதாதிகளாலே விடப்பட்டவனாகிறான்]. **विमुक्तश्च** - [அப்படி காம க்ரோதாதிகளால்] விடப்பட்டவனாய்க் கொண்டு, **विमुच्यते** - [ப்ராரப்த கர்மாநுபவத்தின் முடிவில் ப்ரக்ருதி ஸம்பந்தத்திலிருந்து] விடப்பட்டு முக்தனாகிறான். **एतत्** - இந்த மந்த்ரத்தில் ப்ரதிபாதிக்கப்படும் முக்தாத்ம ஸ்வரூபமும், **तद्वै** - அந்தப் பரமாத்மாவையே ஆத்மாவாக உடையது.

एकादशद्वारम् - பதினொரு த்வாரங்களாவன :- தலையில் ஏழு த்வாரங்கள்; நாபியுடன்கூடக் கீழ் நோக்கிய த்வாரங்கள் மூன்று; ஶிரஸ்ஸில் ஊர்த்வ முகமானது ஒன்று; ஆகப் பதினொன்று. ஒரு பத்தநத்திற்கு எப்படிக்கோட்டை வாசல்கள், அந்த வாசல்களைக் காப்பாற்றுபவர்கள், அவை யெல்லாவற்றுக்கும் அதிஷ்டாதா - ஆக இம்மாதிரி பல உபகரண

हꣳसश्शुचिषद्वसुरन्तरिक्षसद्धोता वेदिषदतिथिर्दुरोणसत् ।
नृषद्वरसदृतसद्व्योमसदब्जा गोजा ऋतजा अद्रिजा ऋतं बृहत् ॥ २

ஸம்பத்திகள் உண்டோ, அப்படியே பல உபகரணங்களால் ஸம்பந்நமாக நமது ஶரீரம் இருக்கிறபடியால், இந்த ஶரீரம் ஒரு பத்தநத்திற்கு ஸமாநமாகப் பேசப்படுகின்றது. அந்த ஶரீரத்தின் ஸ்வரூபத்திற்கும் தனக்குமுள்ள விஶேஷத்தை அறிந்து அவன் விமோசநத்தை அடைகிறான் என்பது கருத்து.

——

2. முக்தாத்ம ஸ்வரூபம் மாத்ரம் பகவானுக்கு ஶரீரமென்பது இல்லை; ஜகத்தில் தென்படும் ஸகல பதார்த்தங்களும் அவனுக்கு ஶரீரம் என்பது இந்த மந்த்ரத்தில் விவரிக்கப்படுகின்றது.

[ப - ரை.] **शुचिषत्** - க்ரீஷ்ம ருதுவில் இருக்கும்படியான [அதாவது : தேஜஸ்வியாக இருக்கும்], **हꣳसः**- ஸூர்யனும், **अन्तरिक्षसत्** - ஆகாஶத்தில் இருக்கும், **वसुः** - வாயுவும், **वेदिषत्** - யஜ்ஞஶாலையில் இருக்கும், **होता** - ருத்விக்கும், **दुरोणसत्** - க்ருஹத்திற்கு வந்திருக்கும், **अतिथिः** - அதிதியும், **नृषत्** - மநுஷ்யர்களுக்குள் இருக்கும் [ப்ரத்யகாத்மாவும்], **वरसत्** - தேவர்களுக்குள் இருக்கும் [ப்ரத்யகாத்மாவும்], **ऋतसत्** - ஸத்யலோகத்தில் இருக்கும் [ப்ரதயகாத்மாவும்], **व्योमसत्** - பரமபதத்தில் இருக்கும் [ப்ரத்யக்தத்வமும்], **अब्जाः**- ஜலத்தில் உண்டாகும் ஜந்துக்களும், **गोजाः** - பூமியில் ஜநிக்கும் ஜந்துக்களும், **ऋतजाः**- யஜ்ஞங்களாகிற கர்மங்களின் பலமாக உண்டாகும் ஸ்வர்க்கம் முதலியவைகளும் [அதாவது : ஸ்வர்க்க லோகத்தில் இருக்கும் ஜீவன்களும்], **अद्रिजाः**- மலைகளில் ஜநிக்கும் ஜந்துக்களும், [இவையெல்லாம்] **बृहत्** - பெரிதான [அதாவது : அளவற்றதான], **ऋतम्** - ஸத்யரூபமான ப்ரஹ்மத்தையே ஆத்மாவாக உடையவை.

हंसः - ஸூர்யன், **हन्ति=गच्छति** [போகிறான்] **इति हंसः**- எப்பொழுதும் போய்க் கொண்டிருக்கிறபடியால் ஸூர்யன் ஹம்ஸனென்று அழைக்கப்படுகிறான். '**शुचि**' என்பது க்ரீஷ்ம ருதுவுக்குப் பெயர். இந்தப் பதங்களெல்லாவற்றிலும் தென்படும் '**सत्**' என்பதன் வ்யுத்பத்தியானது ''**सीदति-वर्तते** [இருக்கிறான்] **इति सत्**' என்பது தான்.

वसुः—वासयति सर्वान् वाय्वात्मना [வாயுவாக இருந்துகொண்டு எல்லாரையும் வஸிக்கும்படி செய்கிறான்.]

ऋतजाः- இதற்கு மற்றுமொரு விதமாகப் பொருள் சொல்வார்கள். யஜ்ஞத்தில் உண்டாகும் ஜந்துக்கள் என்று பொருள்படுத்துவது உபபந்நமாகமாட்டாதாகையால், எது எது பஹுகாலம் ஸ்தாயியாக இருக்கிறதோ அதது 'ருதம்' என்பதைப் பொருளாக எடுத்துக்கொண்டு ஆகாசம் சிரகால ஸ்தாயியானதால் அதை 'ருதம்' என்று

ऊर्ध्वं प्राणमुन्नयत्यपानं प्रत्यगस्यति ।
मध्ये वामनमासीनं विश्वेदेवा उपासते ॥ ३

अस्य विस्रंसमानस्य शरीरस्थस्य देहिनः ।
देहाद्विमुच्यमानस्य किमत्र परिशिष्यते ॥ एतद्वै तत् ॥ ४

சொல்லி, 'ऋतजाः' என்பதற்கு 'ஆகாயத்தில் உண்டாகும் ஜந்துக்கள்' என்று பொருள்படுத்தக்கூடும்.

---

3. கீழ் உதாஹரிக்கப்பட்ட வஸ்துக்கள் ப்ரபஞ்சத்திலுள்ள ஸகல வஸ்துக்களுக்கும் உபலக்ஷணம். அப்படி ஸகல வஸ்துக்களிடத்திலும் பரமாத்மா ஆத்மாவாக இருக்கிறான் என்பதற்குச் சிற்சில லிங்கங்கள் சொல்லப்படுகின்றன.

[ப - ரை.] [எல்லாருடைய ஹ்ருதயத்தில் இருக்கும் பரமாத்மா] **प्राणम्** - ப்ராண வாயுவை, **ऊर्ध्वम्** - மேல் முகமாக, **उन्नयति** - உயரச் செலுத்துகிறான்; **अपानम्** - அபானமென்று சொல்லப்படும் மற்றொரு வாயுவை, **प्रत्यक्** - கீழ்முகமாக, **अस्यति** - தள்ளுகிறான். [இவ்வாறு வ்யாபாரங்களைச் செய்துகொண்டு] **मध्ये** - நடுவில் [அதாவது: ஹ்ருதயத்தின் நடுவில்], **आसीनम्** - இருக்கும், **वामनम्** - [எல்லாராலும்] பூஜிக்கத் தகுந்தவனை [அந்தப் பரமாத்மாவை], **विश्वेदेवाः** - ஸத்வ ப்ரக்ருதியாயிருக்கும் எல்லா ஜனங்களும், **उपासते** - உபாஸிக்கிறார்கள்.

தேஹத்தில் ஸஞ்சரிக்கும் வாயுவானது ஜடமான வஸ்து; ஸ்வயமாக ஒரு வ்யாபாரத்தைச் செய்வதற்கு அஶக்தம். ஆகையால் ஸ்வதந்த்ரனை ஒரு சேதநன் அதை அதிஷ்டாநம் செய்துகொண்டு அதை அந்த வ்யாபாரங்களில் ப்ரவர்த்திப்பிக்கவேண்டும். அந்த ஸ்வதந்த்ர சேதநன் எல்லாருடைய ஹ்ருதயத்தில் இருக்கும் பரமாத்மாவே. ஸாத்விகர்களே அவனை அறிந்து உபாஸிக்கிறார்கள்.

वामनम् - இதற்கு 'ஹ்ரஸ்வமான ஆக்ருதியை உடையவன்' என்றும் பொருள் கூறலாம். அங்குஷ்டமாத்ரனாக ஹ்ருதயத்தில் வஸிக்கிறபடியால், அவனை 'வாமநன்' என்று பேசக்கூடுமன்றோ?

---

4. அப்படி அதிஷ்டாநம் செய்துகொண்டிருக்கும் பரமாத்மாவை உபாஸிக்கும் ஸாத்விகனுக்கு, ஶரீரம் த்ருடமாக இருக்கும் பொழுதோ, ஶரீரம் தளரும்பொழுதோ, ஶரீரம் போன பிறகோ, ஒரு பொழுதும் வேறு கர்த்தவ்யமான விஷய மொன்றுமில்லை என்று இந்த மந்த்ரத்தில் சொல்லுகிறார்.

[ப - ரை] **अस्य देहिनः** இந்த உபாஸகனுக்கு, **विस्रंसमानस्य** - தளர்ச்சியை அடையும் தேஹத்தை உடைத்தாயிருக்கும் பொழுதோ,

न प्राणेन नापानेन मर्त्यो जीवति कश्चन ।
इतरेण तु जीवन्ति यस्मिन्नेतावुपाश्रितौ ॥ ५

हन्त त इदं प्रवक्ष्यामि गुह्यं ब्रह्म सनातनम् ।
यथा च मरणं प्राप्य आत्मा भवति गौतम ॥ ६

शरीरस्थस्य च-ஶரீரத்தில் தார்ட்யம் இருக்கும் பொழுதோ, **देहात्**-தேஹத்திலிருந்து, **विमुच्यमानस्य** - விடப்பட்டு மரணம் அடையும் பொழுதோ, **अत्र** - இவ்விடத்தில், **किम्** - என்ன, **परिशिष्यते** - [செய்யப்படவேண்டியதாக] விஞ்சி நிற்கிறது? [அவனுற் செய்யப்படவேண்டியதாக வேறு ஒன்றும் அவஶிஷ்டமாக இல்லை என்பது தாத்பர்யம். அத்ாவது:— பரமாத்மாவைச் சரிவர உபாஸிக்கிறவனுக்கு ஸ்வரூபாவிர்ப்பாவம் கிடைக்க, ஶரீரம் இருக்கும் காலம் பர்யந்தம் விளம்பமே தவிர்த்து, வேறு அவன் செய்யவேண்டுவதான கார்ய மொன்றுமில்லை] **एतद्वै तत्** - இந்த உபாஸகனுடைய ஸ்வரூபம் அந்தப் பரமாத்மாவையே ஆத்மாவாக உடையது.

---

5. 'ஸர்வ ப்ராணிகளும் அந்தப் பரமாத்மாவின் பலத்தாலேயே ஜீவிக்கின்றன; அவனே எல்லாருடைய ப்ராணநத்திற்கும் ஹேது' என்பது இதில் சொல்லப்படுகிறது.

[ப - ரை] **कश्चन मर्त्यः**- ஒரு மநுஷ்யனும், **प्राणेन न जीवति** - ப்ராணனுல் ஜீவித்திருக்கவில்லை; **नापानेन** - அபாநத்தாலும் ஜீவித்திருக்கவில்லை; **तु** - ஆனுல், **यस्मिन्** - எவனிடத்தில் [எந்தப் பரமாத்மாவினிடத்தில்], **एतौ**-இவை இரண்டும் [ப்ராணம் அபாநம் ஆகிய இவை இரண்டும்], **उपाश्रितौ** - ஆஶ்ரயித்து நிற்கின்றனவோ, [**तेन**] **इतरेण** - அந்த மற்றொருவனுலேயே, **जीवन्ति** - [எல்லா மநுஷ்யர்களும்] ஜீவித்திருக்கிறுர்கள்.

ப்ராணாபாநங்கள் முதலியவைகளுடைய ஜீவிதம் எந்தப் பரமாத்மாவைச் சார்ந்து நிற்கின்றதோ, அந்தப் பரமாத்மாவையே சார்ந்து நிற்கின்றது எல்லாருடைய ஜீவிதமும் என்பது கருத்து.

---

6. இந்த மந்த்ரத்தில் தாம் மேற்கொண்டு சொல்லப் போகும் விஷயத்தில் ஶிஷ்யனை அபிமுகமாகச் செய்துகொள்ளும் பொருட்டு ப்ரரோசகமாகச் சில வார்த்தைகளைச் சொல்லுகிறுர்.

[ப - ரை.] **हे गौतम** - ஹே கௌதமனே! **आत्मा** - ஆத்மாவானது, **मरणं प्राप्य** - மரணத்தை அடைந்த பிறகு [அதாவது: தேஹத்தை விட்ட பிறகு. இந்த விடத்தில், '**येयं प्रेते**' - முதல் வல்லி 20-வது மந்த்ரம், என்னு மிடத்திற் போல, மரணம் என்னும் பதம் கடைசி தேஹம் போவதைக் குறிக்கின்றது என்பது ஆசார்யர்களின் நிர்வாஹம்].

योनिमन्ये प्रपद्यन्ते शरीरत्वाय देहिनः ।
स्थाणुमन्येऽनुसंयन्ति यथाकर्म यथाश्रुतम् ॥ ७

य एषु सुप्तेषु जागर्ति कामङ्कामं पुरुषो निर्मिमाणः ।
तदेव शुक्रं तद्ब्रह्म तदेवामृतमुच्यते ।
तस्मिन् लोकाः श्रितास्सर्वे तदु नात्येति कश्चन ॥ एतद्वै तत् ॥ ८

यथा भवति - எப்படி ஆகிறான் [அதாவது: என்ன ப்ரகாரங்களுடன் கூடினவனாக ஆகிறான்], [**इति** - என்னும்], **इदं गुह्यं सनातनं ब्रह्म** - ரஹஸ்யமாயும் ஶாஶ்வதமாயும் இருக்கும் ஸ்வரூபத்தை, **ते**-உனக்கு, **प्रवक्ष्यामि** - சொல்லுகிறேன். **हन्त** - அஹோ! ஆஶ்சர்யம்.

---

7. கடைசிதேஹம்போன பிறகு முக்தன் எப்படி ஆகிறான் என்பதை உபதேஶிக்கப் போகிறவராய், முதலில், மரணமடைந்தவுடன் ப்ரஜைகள் தங்கள் தங்கள் ஜ்ஞாநத்திற்கும் தாம்தாம் அநுஷ்டித்த கர்மங்களுக்கும் தக்கவாறு ஜந்மங்களை அடைகிறார்கள் என்று சொல்லுகிறார்.

[ப - ரை] **अन्ये** - சில, **देहिनः** - ப்ரஜைகள் [பரமாத்ம தத்வத்தை அறியாத சிலர்], **शरीरत्वाय** - ஶரீரத்தைப் பெறுவதற்காக, **योनिम्** - யோநி த்வாரத்தை, **प्रपद्यन्ते** - ப்ரவேஶிக்கிறார்கள். **अन्ये** - மற்றும் சிலர், **यथाकर्म** - தங்கள் தங்கள் கர்மங்களுக்குத் தக்கவாறும், **यथाश्रुतम्** - தங்கள் தங்கள் ஜ்ஞாநத்திற்குத் தக்கவாறும், **स्थाणुम्** - ஸ்தாவரத்தன்மையை, **अनुसंयन्ति** - அடைகிறார்கள்.

---

8. 'பகவானுடைய ஸங்கல்பத்திற்கு அநுகுணமாக ஜகத் ஸ்ருஷ்டி ஏற்படுகின்றது; எல்லாம் அவனையே ஆஶ்ரயித்து நிற்கின்றது; ஒருவரும் அவனுடைய ஸங்கல்பத்தை அதிக்ரமிக்க மாட்டார்' என்று இதில் சொல்லப்படுகின்றது. அதாவது: அவன் ஒருவனே எல்லாவற்றுக்கும் அந்தராத்மாவாக இருந்து கொண்டு எல்லாரையும் நியமித்துக் கொண்டிருக்கிறான் என்பது கருத்து.

[ப - ரை] **एषु** - இவையெல்லாம் [இந்த ப்ராணிகளெல்லாம்], **सुप्तेषु** - தூங்கிக்கொண்டிருக்கும் பொழுது, **यः पुरुषः** - எந்தப் புருஷன், **कामङ्कामम्**-திரும்பத் திரும்ப ஸங்கல்பித்துக்கொண்டு, **जागर्ति**-விழித்திருக்கிறானோ, **तदेव** - அதுவே [அவனே], **शुक्रम्** - ப்ரகாஶகமானது [ஸ்வயம் ப்ரகாஶமானது]: **तत् [एव] ब्रह्म** - அதுதான் ப்ரஹ்மம்; **तदेवामृतम्** - அதுதான் அம்ருதம் (என்று) **उच्यते** - சொல்லப்படுகிறது; **तस्मिन्** - அதனிடத்தில்தான், **सर्वे लोकाः**-எல்லா லோகங்களும், **श्रिताः**-ஆஶ்ரயித்து நிற்கின்றன; **तत्** - அதை, **कश्चन** - ஒருவனும், **नात्यति** - மீறமாட்டான். **तत्** என்பதுச் சாந்தஸம்; **तम्** என்று இருத்தல் வேண்டும். **एतद्वै तत्**.

अग्निर्यथैको भुवनं प्रविष्टो रूपं रूपं प्रतिरूपो बभूव ।
एकस्तथा सर्वभूतान्तरात्मा रूपं रूपं प्रतिरूपो बहिश्च ॥ ९

कामं कामम् - இது ஒரு அவ்யயம்; **कामयित्वा कामयित्वा** என்பது இதன் விரிவு. **स्मारं स्मारं** என்பதுபோல.

ஸ்வப்நத்தில் காணப்படும் வஸ்துக்களின் ஸ்ருஷ்டி ஜீவாத்மாவாலேயே செய்யப்படுகின்றது என்று வாதிக்கும் சிலர் இந்த வாக்யத்தைத் தங்களுடைய மதத்திற்கு அநுகூலமென்று உதாஹரிக்கிறார்கள். அவர்கள், '**काम**'-என்னும் பதம் காமிக்கப்படும் புத்ர மித்ர களத்ராதிகளை நிர்த்தேஶிக்கின்றது என்று அர்த்தம் சொல்லி, அப்படிப் புத்ராதிகளின் இச்சை ஜீவாத்மாவுக்கே ஸம்பாவிதமாகையால் ஜீவாத்ம பரமே இந்த வாக்யம் என்று வாதிக்கிறார்கள். பின்வரும் '**तदेव शुक्रम्**' - இத்யாதியான வாக்யம் பரமாத்மாவுக்கே அந்வயிக்குமாதலால் **कामम्** - என்பதற்கு அம்மாதிரி பொருள் கொள்வது உபபந்நமாகமாட்டாது.

तदेव अमृतम् - அதுதான் அம்ருதம். ஸ்ரீ வைகுண்டத்திலிருக்கும் நித்யர்களுக்கும் முக்தர்களுக்கும் அம்ருதத்வம் இருக்கையிலும், அவர்களுக்கு நிருபாதிகமான அம்ருதத்வமில்லையாதலால், ப்ரஹ்மமொன்றே அம்ருதமென்று இவ்விடத்திற் சொல்லப்படுகிறது. ப்ரஹ்மத்தின் அம்ருதத்வம் நிருபாதிகம்; [மற்ற எதையும் சார்ந்தது அன்று]. இவ்விடத்திலுள்ள அம்ருதம் என்னும் பதத்திற்கு, 'நிருபாதிகமான அம்ருதம்' என்பதே பொருள்.

---

9. ஒரே ஆத்மா எல்லா வஸ்துக்களுக்கும் அந்தராத்மாவாக இருக்கின்றது என்பது பலதடவை சொல்லப்பட்டிருந்த போதிலும், அது அந்ருஜுவான புத்தியை யுடையவர்களின் மநஸ்ஸில் ப்ரவேஶியாமல் இருக்கின்றதாதலால், அதிமாத்ரம் ஆதரவை யுடைய ஶ்ருதி அதை த்ருடமாக மறுபடியும் த்ருஷ்டாந்த பூர்வகமாக உபதேஶிக்க ஆரம்பிக்கின்றது. ப்ருதிவீ அப் தேஜஸ் முதலான பூதங்களுள் தேஜஸ் என்னும் பூதம் இவ்விடத்தில் த்ருஷ்டாந்தமாகச் சொல்லப்படுகின்றது. இந்த லோகத்தில் தென்படும் ப்ருதிவீ முதலியவை கேவலம் அந்தந்தப் பூதம் மாத்ரமல்ல; ஒவ்வொன்றிலும் மற்றைப் பூதங்களும் இருக்கின்றன. ஆனால், அந்தப் பூதங்கள் ஸ்வல்ப பாகமே. அதாவது: ப்ருதிவீயாகத் தென்படும் பூதத்தில் ப்ருதிவி அம்ஶம் பெரும்பாகமாகவும், மற்றை அப் முதலிய அம்ஶங்கள் ஸ்வல்பமாகவும் இருக்கின்றன. முதல் முதலில் பகவான் பூதங்களை ஶுத்தமாக ஸ்ருஷ்டித்துப் பிறகு இந்த அண்டங்களை ஸ்ருஷ்டிப்பதற்காக அந்தப் பூதங்களைக் கீழ்க்கூறியவாறு கலக்கிறான். இதை 'த்ரிவ்ருத்கரணம்' என்று சொல்வார்கள். ஆகையால் இந்த அண்டத்திற்கு உட்பட்டிருக்கும் வஸ்து ஒவ்வொன்றிலும் எல்லாப் பூதங்களும் இருக்கின்றனவென்று

वायुर्यथैको भुवनं प्रविष्टो रूपं रूपं प्रतिरूपो बभूव ।
एकस्तथा सर्वभूतान्तरात्मा रूपं रूपं प्रतिरूपो बहिश्च ॥ १०

सूर्यो यथा सर्वलोकस्य चक्षुर्न लिप्यते चाक्षुषैर्बाह्यदोषैः ।
एकस्तथा सर्वभूतान्तरात्मा न लिप्यते लोकदुःखेन बाह्यः ॥ ११

நாம் அறியவேண்டும். இவ்விடத்தில் சொல்லப்படும் த்ருஷ்டாந்தமாவது: தேஜஸ் என்னும் தத்வம் ஒன்றாக இருக்கையிலும் அது அண்டாந்தர்க்கதமான வஸ்துக்கள் முழுவதிலும் புகுந்து எப்படி ஒவ்வொரு ரூபத்திலும் ப்ரதிஸங்க்ராந்தமாக இருக்கின்றதோ, அப்படியே பரமாத்மா ஒருவனாக இருக்கையிலும் ஒவ்வொரு வஸ்துவிலும் ப்ரதிஸங்க்ராந்தமான அந்தர்யாமி விக்ரஹத்தைக்கொண்டு உள்ளிலும் இருக்கிறான்; வெளி வ்யாப்திக்கும் குறைவில்லை என்பதுதான்.

[ப - ரை.] **यथा**-எப்படி, **एकः** - ஒன்றாக இருக்கும், **अग्निः**-தேஜோதாதுவானது, **भुवनम्**- அண்டாந்தர்வர்த்தியான லோகத்தில், **प्रविष्टः** - ப்ரவேஶித்ததாய்க்கொண்டு, **रूपं रूपम्** - ஒவ்வொரு ரூபத்திலும், **प्रतिरूपः** - ஸங்க்ரமித்திருக்கும் ரூபத்தையுடைத்தானதாக, **बभूव** -இருக்கின்றதோ, **तथा** - அப்படியே, **एकः** - ஒருவனான, **सर्वभूतान्तरात्मा** - எல்லா வஸ்துக்களுக்கும் அந்தராத்மாவாக இருக்கும் பகவான், **रूपं रूपम्** - ஒவ்வொரு வஸ்துவிலும், **प्रतिरूपः** - உட்புகுந்துள்ள [அந்தர்யாமி] விக்ரஹத்துடன் கூடினவனாக இருக்கிறான்; **बहिश्च** - வெளியிலும் இருக்கிறான்.

---

10. இதில் வாயு என்னும் தாது த்ருஷ்டாந்தமாகச் சொல்லப்படுகிறது. கீழ் மந்த்ரத்திற்போலவே இதிலும் அந்வயமும் அர்த்தமும். 'அக்நி' என்னும் ஸ்தாநத்தில் 'வாயு' என்பதை நிவேஶிப்பதுதான் விஶேஷம்.

---

11. இப்படிப் பரமாத்மா லோகத்திலுள்ள வஸ்துக்களெல்லாவற்றிலும் புகுந்து நின்றால், அந்த வஸ்துக்களிடம் ஸம்பந்திக்கும் துக்கஹேதுக்கள் இவனையும் ஸ்பர்ஶிக்கமாட்டாவோ என்னும் ஸந்தேஹத்திற்கு ஸமாதாநமாக ஸூர்யனையும் கண் என்னும் இந்த்ரியத்தையும் த்ருஷ்டாந்தமாக எடுத்துக்கொண்டு, லோக துக்கமொன்றும் அவனை ஸ்பர்ஶிக்கமாட்டாது என்பதை நிரூபிக்கிறார்.

[ப - ரை.] **यथा** - எப்படி, **सूर्यः** - ஸூர்யனானவன், **सर्वलोकस्य** - எல்லா லோகத்திற்கும், **चक्षुः** - கண்ணாக இருக்கையிலும் [அதாவது: கண்ணாகிய இந்த்ரியத்தில் ப்ரவேஶித்திருக்கையிலும்], **चाक्षुषैः** - அந்தக் கண் இந்த்ரியத்திற்கு உள்ள, **बाह्यदोषैः** - பாஹ்ய தோஷங்களால், **न लिप्यते** - ஸ்பர்ஶிக்கப்படாமல் இருக்கிறதோ, **तथा** - அப்படியே, **एकः** - ஒருவனான, **सर्वलोकान्तरात्मा** - எல்லா லோகத்திற்கும் அந்தராத்மாவாக இருக்கும் பகவான், **लोकदुःखेन** - லோகத்தில் ஏற்படும் தோஷங்

2/10/20

ஸ்ரீ :

சந்தா செலுத்தினவர்களின் பெயர்

1—11—'43 to 30—11—'43

[மற்றவர்களும் க்ருபை செய்து சீக்ரத்தில் சந்தாவைச் செலுத்த வேண்டுமென்று ப்ரார்த்திக்கிறோம்.]

For 1943.

535	Sri K. Doraiswami Iyengar, Tyagarayanagar	...	3	0	0
412	,, S. Narayana Iyengar, Cuddalore N. T.	...	3	0	0
102	,, Raghunadha Iyengar, Kumbakonam	...	3	0	0
443	,, P. N. Sesha Iyengar, Srirangam	...	3	0	0
165	,, R. Srinivasa Iyengar, Srirangam	...	3	0	0
429	,, A. Srinivasaraghavachary, Tirupapuliyur	...	3	0	0
66	,, P. V. Kuppuswami Iyengar, Sanyasigramam	...	3	0	0
382	,, K. G. Krishnaswami Iyengar, Kumbakonam	...	3	0	0
409	,, V. Srinivasa Iyengar, Triplicane	...	3	0	0
285	,, C. Rajagopalachariar, Bog Road	...	1	0	0
229	,, P. S. Desikachariar, Mannargudy	...	3	0	0
302	,, Srinivasa Sarma	...	3	0	0
30	,, K. Veeraraghava Iyengar, Namakal	...	3	0	0
144	,, R. Srinivasa Iyengar, Srirangam	...	3	0	0
107	,, V. N. Rangaswami Iyengar, Natchiyarkoil	...	3	0	0
349	,, K. Rajagopalachariar, Villupuram	...	3	0	0
73	,, J. Varadaraja Iyengar, Tinnevelly	...	3	0	0
438	,, S. T. Srinivasachari, Kalyanapuram	...	3	0	0
228	,, T. K. Srinivasa Iyengar. Thillaiyambur	...	3	0	0
257	,, K. Rama Iyengar, Madura	...	3	0	0
385	,, C. R. Rajagopalachariar, Tirupapuliyur	...	3	0	0
201	,, V. K. Parthasarathy, Triplicane	...	3	0	0
277	,, Librarian, Annamalai University	...	3	0	0
478	,, E. Srinivasachariar, Melur	...	3	0	0
199	,, A. Narasimhachariar, P. T. Madras	...	3	0	0
65	,, M. P. Kannuswami Reddiar, Peruvalappur	...	3	0	0
379	,, R. Thiruvengadath Iyengar, Peruguvalanthan	...	3	0	0
33	,, M. R. Rangaswami Iyengar, Mannargudi	...	3	0	0
244	,, K. T. Srinivasa Iyengar, Koilpatti	...	3	0	0
131	,, P. S. Sundararaja Iyengar, Paramakudy	...	3	0	0
58	,, C. N. Srinivasagopalachariar, Srirangam	...	3	0	0
212	,, T. Ramaswami Iyengar, Kumbakonam	...	3	0	0
433	,, R. Satagopathathachariar, Patan	...	3	0	0
399	,, S. Narayana Iyengar, Madura	...	3	0	0
182	,, V. S. Raghavachariar, Tyagarayanagar	...	3	0	0
422	,, E. R. Chakkrapani Iyengar, Enathimangalam	...	3	0	0
420	,, K. V. Rajagopala Iyengar, Anatur	...	3	0	0
421	,, D. Sundararaja Iyengar, Panrutti	...	3	0	0
419	,, K. Parthasarathy Iyengar, Panrutti	...	3	0	0
479	,, D. V. Ramananda Sarma, Melma Post	...	3	0	0
269	,, R. Srinivasagopalachary, Pudukottah	...	3	0	0
6	,, T. G. Ramaswami Iyengar, Devakottah	...	3	0	0
133	,, T. Rajagopalachariar, Rtd. Sub-Judge, Egmore	...	3	0	0
57	,, N. R. Krishnaswami Iyengar, Madura	...	3	0	0
80	,, S. Venkataranga Iyengar, Gangavalli	...	3	0	0
281	,, E. M. Narasimhachariar, Trivellore	...	3	0	0
390	,, P. K. Srinivasaraghavachary, Tindivanam	...	3	0	0
470	,, Chinamu Srinivasapatrachariar, Kumbakonam	...	3	0	0
243	,, M. R. Sarangapani Iyengar, Madura	...	3	0	0
241	,, T. Parthasarathy Iyengar, P. T. Madras	...	3	0	0
321	,, R. Varadacharyar, Saidapet	...	3	0	0
196	,, Sister R. S. Subbalakshmi Ammal	...	3	0	0

For 1944

382	,, K. G. Krishnaswami Iyengar, Kumbakonam	...	3	0	0
464	,, A. Venkatachariyar, Mandya	...	3	0	0
17	,, R. A. Seshadri, Bombay	...	3	0	0
442	,, K. Narasimhachariar, Kovalavalli	...	3	0	0
199	,, A. Narasimhachariar, P. T. Madras	...	3	0	0
131	,, P. S. Sundararaja Iyengar, Paramakudy	...	3	0	0
96	,, S. R. Sarma, Poona	...	3	0	0
57	,, N. R. Krishnaswami Iyengar, Madura	...	3	0	0
470	,, Chinamu Srinivasapatrachariar, Kumbakonam	...	3	0	0

Regd. No. M. **4437**

ஸ்ரீ:
ஸ்ரீமதே ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ அஹோபில மடத்தில் அச்சிடப் பெற்ற
கீழ்க் கண்ட புஸ்தகங்கள் 'ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா' ஆபீஸில்
விற்பனைக்குத் தயாராயிருக்கின்றன.

	சந்தாதாரர்கள் ரூ. அ. பை	மற்றவர்கள் ரூ. அ. பை
1. அதிகரண ஸாராவளி (தேவநாகர லிபி) [சிந்தாமணி, கல்பதரு வ்யாக்யானத்துடன் காலிகோ பயிண்ட் செய்தது]	6—8—0	7—8—0
2. ஷை (பைண்டில்லாதது) ...	5—8—0	6—8—0
3. உக்திநிஷ்டாபரணம் ந்யாஸநிஷ்டா மீமாம்ஸா ச (க்ரந்த லிபி)	0-12—0	1—0—0
4. உக்திநிஷ்டாபரணோத்யோதம் (,,)	0—8—0	0-12—0
5. வீக்ஷாரண்யக்ஷேத்ர மாஹாத்ம்யம் மணிப்ரவாள வ்யாக்யானம் ... (க்ரந்த லிபி)	1—0—0	1—8—0
6. ஸ்ரீ அஹோபில மாஹாத்ம்யம் (,,)	0—8—0	0-12—0
7. ஷை (தெலுங்கு லிபி)	0-12—0	1—0—0
8. ந்யாஸ நிர்ணயம் (க்ரந்த லிபி) ...	0—8—0	0-12—6
9. ஸ்ரீ வீரராகவஸ்வாமி ஸுப்ரபாதம் (க்ரந்த லிபி)	0—3—0	0—4—0
10. ஸ்ரீ பாஷ்யார்த்த மணிப்ரவாள தீபிகை (க்ரந்த லிபி)	2—0—0	3—0—0
11. ஸ்ரீ ராமானுஜஸித்தாந்தஸங்க்ரஹம் (க்ரந்த லிபி)	2—0—0	3—0—0

N. B.—10, 11 எண்ணிக்கையிட்ட புஸ்தகங்கள் கொஞ்சம் காபிகளே கைவசமிருக்கின்றன.

(தபால் செலவு வேறு)

வேண்டுபவர்கள் கீழுள்ள விலாஸத்திற்கு எழுதவும் :—

மானேஜர், **ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா ஆபீஸ்,**
நெ. 5, ராமஸ்வாமி தெரு, தி. நகர், சென்னை.

Printed by K. Satakopachariar, at the Liberty Press, 10, Linghi Chetty Street, G. T., Madras.
Edited & Published by S. Vasudevachariar, 5 Ramaswami Street, Tyagarayanagar, Madras.